Registered as a News Paper

பொழிவு - 16
குவிப்பு -04
பக்கங்கள் - 16
விலை ரூபா 40.00
ஏப்ரல் 2013
(ISSN 1800-2641)

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Centre, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789/ 023 - 3233276 / 0777420811 Fax No - 023-2250789, E. Mail : nesanmnr@gmail.com.
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 36 / News / 2013"

# நமக்கு ஓர் புதிய திருத்தந்தை!

## Habenus Papum - We have a Pope



## கத்தோலிக்க திருச்சபையின் 266வது பாப்பரசராக திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவுசெய்யப்பட்டார்!

கத்தோலிக்கத் திருச்சபையின் 266வது திருச்சபைத் தலைவராக இலத்தின் அமெரிக்க நாடுகளில் ஒன்றாகிய ஆர்ஜென்ரீனாவைச் சேர்ந்த இயேசுசபைக் கர்தினால் ஜோர்ஜ் மாரியோ பெர்ஜோக்லியோ (Jorge Mario Bergoglio) தெரிவுசெய்யப்பட்டுள்ளார். புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட திருத்தந்தை பிரான்சிஸ் என்ற பெயரை ஏற்றுள்ளார்.

கடந்த மார்ச் மாதம் 13ம் திகதி உரோம் நேரப்படி மாலை 7.05 மணிக்கு சிஸ்ரைன் சிற்றாலயத்தின் புகைபோக்கியிலிருந்து வெள்ளைப் புகை வெளிவர ஆரம்பித்தது. இதையடுத்து பேதுரு பேராலய வளாகத்தில் கொட்டும் மழையிலும் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் கத்தோலிக்க திருச்சபைக்கு புதிய திருத்தந்தை தேர்ந்தெடுக்கப்பட்டார் என மிகுந்த ஆர்வத்துடன் காணப்பட்டனர்.

உரோம் நேரப்படி மாலை 8.12 மணிக்கு புனித பேதுரு பசிலிக்கா பேராலயத்தில் கர்தினால் ஜீன் லூட்ஸ் தொரன் "நாம் ஒரு திருத்தந்தையை பெற்றுள்ளோம்" என்ற மகிழ்ச்சிச் செய்தியை உலகத்திற்கு அறிவித்தார். புதிய திருத்தந்தை பற்றிய பல சுவாரஸ்யமான தகவல்களை 4ஆம் பக்கத்தில் காணலாம்.

வாசகப் பெருமக்களே!
மன்னா பத்திரிகைப் பணத்தை காலம் தாழ்த்தாமல் உடனடியாகச் செலுத்துவதன் மூலம் மன்னா விநியோகஸ்தர்களுக்கு உங்கள் மேலான ஒத்துழைப்பை வழங்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

- மன்னா நிர்வாகம்

## புத்த பிக்குகள் தாக்கப்பட்டமைக்கு மன்னார் ஆயர் கண்டனம்

இலங்கையில் இருந்து ஆன்மீகச் சுற்றுலா மேற்கொண்டு இந்தியா வந்திருந்த பௌத்த மத பிக்கு ஒருவர் தஞ்சாவூர் பெரிய கோவிலுக்கு சென்றிருந்தபோதும், மற்றொரு பௌத்த பிக்கு சென்னை மத்திய புகையிரத நிலையத்திலும் தாக்கப்பட்ட சம்பவங்களை ஊடகம் வாயிலாக அறிந்து அதிர்ச்சியுற்றோம். ஆன்மீகச் சுற்றுப்பயணம் மேற்கொள்பவர்களையும், அதுவும் மதத் தலைவர்களையும் தாக்கும் செயற்பாடுகளை எந்தவிதத்திலும் நியாயப்படுத்தலுக்கு உள்ளாக்க முடியாது. இது மனிதத்திற்கு எதிரான குற்றம் என மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

(தொடர்ச்சி 9ஆம் பக்கம்)

## உயிர்ப்பின் மகிழ்ச்சிக் காலமானது உயிர்த்த மீட்பர் எம்மத்தியில் இருக்கிறார் என்ற உணர்வைப் புதுப்பிக்க அழைப்பு விடுக்கிறது

### ஆயர் பேரவையின் ஈஸ்ரர் செய்தி

உயிர்ப்பின் மகிழ்ச்சிக் காலமானது இயேசுவின்மீதான அறிவை ஆழப்படுத்தவும் உயிர்த்த மீட்பர் எம்மத்தியில் இருக்கிறார் என்ற உணர்வைப் புதுப்பிக்கவும் அழைப்பு விடுக்கிறது என இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவை விடுத்துள்ள ஈஸ்டர் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, உயிர்த்த மீட்பர்மீதான எமது விசுவாசம் எமது நாளாந்த வாழ்க்கையில் நாம் முகங்கொடுக்கும் கஷ்ட துன்பங்களில் மற்றும் பிரச்சினைகளில் துணிவுடனும் மன உறுதியுடனும் செயற்பட நம்மை அழைக்கிறது. அவர் நம்மோடு பயணிக்கிறார் என்ற நம்பிக்கையையும் அளிக்கிறது. உயிர்த்த ஆண்டவரின் இவ்வுடனிருப்பை உயிர்ப்பு எமக்கு பறைசாற்றுகிறது. மேலும் அவர் நமது மகிழ்ச்சியிலும் துன்பத்திலும் பங்கெடுக்கின்றார் என்பதால் இவ்வுயிர்ப்பின் மகிழ்ச்சிக் காலம் எமது வாழ்வின் உண்மையான அர்த்தத்தையும் அளிக்கிறது.


(தொடர்ச்சி 9ஆம் பக்கம்)

## மக்களைச் சந்திக்கும் புதிய திருத்தந்தை



திருத்தந்தையாகப் பணிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டபின்னர் புதிய திருத்தந்தை பிரான்சிஸ் முதல் தடவையாக வத்திக்கான் சதுக்கத்தில் திறந்த வாகனத்தில் வலம் வந்தவராக பல்லாயிரக்கணக்கான மக்களைச் சந்திக்கின்றார்.

## எளிமையே வடிவான புதிய திருத்தந்தை




திருத்தந்தையாகத் தெரிவுசெய்யப்பட்டபின்னர் தான் தங்கியிருந்த விடுதிக் கட்டணத்தை தானே நேரில் சென்று செலுத்துகின்றார்.



திருத்தந்தையாகத் தெரிவுசெய்யப்பட்டபின்னர் புதிய திருத்தந்தை பயணிகள் பேருந்தில் பயணிக்கின்றார்.



கடந்த பெரிய வியாழன் அன்று இளம் கைதிகளின் கால்களைக் கழுவி முத்தமிடுகின்றார்



குழந்தை ஒன்றைத் தூக்கி முத்தமிடுகின்றார்

## வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இரண்டு திருத்தந்தையர்களின் சந்திப்பு

பாப்பரசர் பதவியை விட்டு விலகிய 16வது ஆசீர்வாதப்பரை, கடந்த மார்ச் 23ஆம் திகதி புதிய பாப்பரசர் பிரான்சிஸ் சந்தித்துப் பேசினார். பாப்பரசர் பதவி வகிக்கும் ஒருவர் தனக்கு முன் அப்பதவியில் இருந்தவரைச் சந்தித்தது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

பாப்பரசராக இருந்த 16ஆவது ஆசீர்வாதப்பர் உடல்நலக் காரணங்களால் அண்மையில் அப்பதவியில் இருந்து ஓய்வுபெற்றார். கடந்த 700 ஆண்டுகளில் இப்பதவியைவிட்டு விலகிய முதல் பாப்பரசர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய திருத்தந்தை இத்தாலியின் உரோம் நகருக்கு அருகில் உள்ள கேஸ்டல் கண்டோல்ஃபோ நகருக்கு ஹெலிகொப்டர் மூலம் சென்றார். அங்கு ஏரிக்கரையோரம் உள்ள ஓர் இல்லத்தில் தங்கியுள்ள முன்னைய பாப்பரசர் 16ஆவது ஆசீர்வாதப்பரை சந்தித்தார். இருவரும் செபத்திலும் ஈடுபட்டனர். அவர்கள் என்ன பேசினார்கள் என்பது அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா
## மனப்பொழிவு
## பதிப்பாசிரியர் பகர்வது

### தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின்
# நூற்றாண்டு விழா

தனிநாயகம் அடிகளார் தமிழுக்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்த தமிழ்த்தாயின் தலைமகன். "தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்" என்ற பாரதியின் கனவை நனவாக்கியவர். உலக அரங்கில் நமது தமிழ் மொழியை ஏற்றிவைத்த ஒப்பற்ற தமிழ் அறிஞர். அவருடைய தமிழ்த்தொண்டு காலத்தால் அழியாதது.

இத்தகைய சிறப்புக்களைக்கொண்ட இத்தமிழ்ப் பேரறிஞர் யாழ்ப்பாணம் நெடுந்தீவில் பிறந்தவர். யாழ். சம்பத்திரிசியார் கல்லூரியில் பாடசாலைக் கல்வியைக் கற்றவர். தூத்துக்குடி மறைமாவட்டத்தில் சேர்ந்து அங்கு மறைப்பணி ஆற்றியபின் தமிழ்மேல் கொண்ட பற்றினால் தமிழ்நாட்டில் உள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் கற்றவர்.

இலங்கை, தமிழகம், உரோம், இலண்டன் ஆகிய இடங்களில் கல்விகற்று தமது ஆய்வுத்திறனை நன்கு வளர்த்துக்கொண்ட அடிகளார் இலங்கை, மலேசியா பல்கலைக்கழகங்களில் பணியாற்றினார். தமது பன்மொழிப்புலமையையும் பல்கலை அறிவையும் தமிழின் சிறப்பை உலகறியச் செய்வதற்கே பயன்படுத்திக்கொண்டார்.

இன்றுபோல் தொடர்பாடல் வசதிகள் அதிகம் இல்லாத 50களில் 60களில் தனி ஒரு ஆளாக நின்று அவர் ஆற்றிய தமிழ்த்தொண்டு நம்மை மலைக்க வைக்கின்றது.

அவருடைய தனிப்பட்ட ஆய்வு முயற்சிகள், அவருடைய சொற்பொழிவுகள், அவர் நடத்திய 'தமிழ்ப் பண்பாடு' என்ற ஆங்கில ஆய்விதழ், அவர் உருவாக்கிய உலகத் தமிழாய்வு மன்றம், அவர் வித்திட்ட உலகத்தமிழராய்ச்சி மாநாடுகள், தமிழ் மொழியின் சிறப்பை வெளிநாட்டவர்களுக்கு எடுத்துக்கூற அவர் மேற்கொண்ட தமிழ்த்தூதுப் பயணங்கள் என அவருடைய தமிழ்த்தொண்டு பரந்துவிரிந்தது.

"உலக வரைபடத்தில் தமிழ் மொழியை பொறித்தவர் தனிநாயகம் அடிகளார்" என்றும், "கடந்த ஆயிரம் ஆண்டுகளில் தனிநாயகம் அடிகளாரைப்போல் தமிழ் பணி ஆற்றியவர்கள் யாரும் இல்லை" எனவும் அடிகளாரைக் குறித்து அறிஞர் பெருமக்கள் கூறியுள்ளமை மிகையான வார்த்தைகள் அல்ல.

இந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 2ஆம் திகதி அன்னாரின் நூற்றாண்டு விழாவை பெருவிழாவாக தமிழ்கூறும் நல்லுலகம் கொண்டாடவுள்ளது.

தனிநாயகம் அடிகளாரின் தமிழ்ப் பணிகள் உரிய முறையில் நினைவுகூரப்படாமல் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டு தமிழ் உலகில் பல காலமாக நிலவிவருகின்றது. அதேபோன்று அவருடைய தமிழ்ப் பணிகள் உரிய முறையில் ஆய்வுசெய்யப்படவில்லை என்ற ஆதங்கமும் தமிழ் ஆய்வுலகில் உண்டு. இந்நிலையில் தனிநாயகம் அடிகளாரின் இந்த நூற்றாண்டு விழா இத்தகைய குறைகளை நிறைவாக்கும் வாய்ப்பாக அமையவேண்டுமென எதிர்பார்க்கின்றோம்.

*மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை,*
*அன்புடன் அருட்பணியாளர் தமிழ் நேசன்,*
*மன்னா பதிப்பாசிரியர்*

### சலுகைகளைப் பயன்படுத்தி
## மூத்தோர் சங்கங்களில் சேருமாறு
# சமாசம் வேண்டுகோள்!

2006ம் ஆண்டு மேதகு மன்னார் ஆயர் அவர்களினால் ஆரம்பித்துவைக்கப்பட்ட மன்னார் மறைமாவட்ட மூத்தோர் சங்கங்களின் சமாசத்தில் தற்போது 23 பங்குகள் இணைந்துள்ளன. ஏறக்குறைய 2000 உறுப்பினர்கள் இதன்மூலம் பயனடைந்து வருகிறார்கள். ஆயினும் பலர் தமது கவனயீனத்தினால் சங்கத்தில் சேராமலிருக்கிறார்கள். புதிதாக உறுப்பினராகச் சேரவிரும்பும் 60 வயது நிரம்பிய ஒருவர் தமது பங்கில் இச்சங்கம் ஆரம்பமான காலந்தொடக்கம் பாக்கித்தொகையைக்கட்டியே அங்கத்தவராக முடியும் என்ற விதி தற்போது தளர்த்தப்பட்டுள்ளது.

அதாவது குறிப்பிட்ட நபரின் பணம் ரூபா 1000/=க்கு மேற்பட்டால் அதிலே 1/2 பங்கு மாத்திரம் (ரூபா 500/=) கட்டினால் அங்கத்தவராக முடியும். இச்சலுகை 2013 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி வரை மட்டுமே என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

**புதிய சங்கங்கள் :-** இச்சங்கம் ஆரம்பிக்கப்படாத பங்குகள் தமது பங்குக்குருக்கள் மூலம் எம்முடன் தொடர்புகொண்டு ரூபா 5000/= பெற்று சங்கங்களை ஆரம்பிக்கவேண்டுமென்பது நமது ஆயரின் விருப்பமாக உள்ளது. என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

தொடர்பு கொள்ளவேண்டிய இலக்கங்கள் :-
இயக்குனர் - 0232223138, தலைவர் - 0771310276
பொருளாளர் - 0232250621, செயலாளர் - 0715862544
**தகவல் :- அ. அந்தோனிமுத்து, பொதுச்செயலாளர்.**

## துறவற வாழ்வில் 25 ஆண்டுகள் நிறைவு



அருட்சகோதரி அந்தோனிப்பிள்ளை சிந்தியா அவர்கள் கடந்த 27.12.2012 அன்று தனது துறவற வாழ்வில் 25 ஆண்டுகளை நிறைவு செய்து இறைவனுக்கு நன்றி கூறினார். அதனையொட்டி இவ்வாழ்த்து இடம்பெறுகின்றது!

சீர்பெறும் கிராமமாம் பெரிய நாவற்குளமதில்
சிறப்புற்று விளங்கும் அந்தோனிப்பிள்ளை தம்பதியினரின்
செல்வமகளாய் உதித்த அருட்சகோதரி செபஸ்தியம்மா - நின்
சேவை இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவில் வாழ்த்துகின்றோம்.

செந்நெல் வயல்களும் செவ்விளநீர் மரங்களும்
செவ்வரத்தம் பூக்களும் நம் குளத்தில் மலரும்
சிறு வெண்தாமரை மலர்களும் சில்லென்று வீசும் தென்றலும்
செழிப்புடன் ஓங்கி நின்ற மரிய மாதா கோவிலும்
சிந்தியா எனும் சிஸ்ரர் இறை மனித சேவைக்குச் செல்ல
சிறப்புடனே உரம் கொடுத்தனவன்றோ!

நல்லாயன் கன்னிகையாய் நற்சேவை செய்கின்றீர்
நானிலம் மகிழ்வுற நாம் உம்மை வாழ்த்துகின்றோம்
நின்வாழ்வும் நின்பணியும் நிகரில்லாமல் செழிக்க
நிமலனை இறைஞ்சி நித்தமும் வேண்டுகிறோம்.

- அருட்தந்தை ம. க. அருள்பிரகாசம்.

## தேசியரீதியில் வடமோடி நாட்டுக்கூத்தில் முதற்பரிசு பெற்ற 'தாவீதின் வெற்றி'



கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவலல்கள் திணைக்களம் மற்றும் இலங்கைக் கலைக் கழகத்தின் அரச நடன மற்றும் நாட்டியக் குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட 2012ம் ஆண்டுக்கான அரச நடனப் போட்டித் தொடரில் வடமோடி நாட்டுக்கூத்து நடன ஆக்கத்தில் நானாட்டான் பிரதேசத்தில் உள்ள ஆவணம் புனித கார்மேல் அன்னை கலாமன்றத்தினர் தேசீய ரீதியில் 'தாவீதின் வெற்றி' என்ற கூத்தின் மூலம் 1ம் இடத்தைப் பெற்றுள்ளனர்.

கூத்திற்கான நெறியாள்கையை கலாபூசணம் செ. மாசிலாமணி அவர்கள் மேற்கொண்டிருந்தார். நடன ஆக்கத்தின் இறுதிச்சுற்றுப் போட்டிகள் தேசிய ரீதியில் 09.02.2013 அன்று வவுனியா இறம்பைக்குளம் மகளிர் தேசிய பாடசாலையில் இடம்பெற்று 7.03.2013 அன்று கொழும்பில் உள்ள ஜோண் டி சில்வா கலையரங்கில் பரிசளிப்பு வைபவம் நடைபெற்றது.

மேலும் கீர்த்தனம் நடன ஆக்கத்தில் மன்னார் கலார்ப்பண நாட்டியப்பள்ளி 2ம் இடமும், குறவன் குறத்தி நடன ஆக்கத்தில் மன்/ புனித சவேரியார் பெண்கள் தே. பாடசாலை 2ம் இடமும் தேசிய ரீதியில் பெற்றுள்ளன. இவற்றிற்கான ஒருங்கிணைப்பை மன்னார் மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் திருமதி. எஸ் மணிசேகரம் மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**தகவல் : புனித கார்மேல் அன்னை கலாமன்றம், ஆவணம் - நானாட்டான்.**

## மன்னார் மறைமாவட்டம்
## திருவழிபாட்டு நாட்காட்டி – 2013
### சித்திரை

07 - தோமையார் விழா - நாகதாழ்வு, கொவ்வங்குளம், குமனாயங்குளம்
08 - தூய வேளாங்கண்ணி - பாலியாறு
14 - மரிய மாதா விழா - நாவற்குளம்.
25 - நற்செய்தியாளர் புனித மாற்கு விழா - காலஞ்சென்ற யாழ் ஆயர் வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையின் நினைவு (2003)

- மாதத்தின் 2வது, 4வது சனி உபவாசத்தியானம் - தோட்டவெளி ஆன்மீக இல்லம்.

## மன்னாரில் அந்தோனியார் ஆலய சுருபக் கண்ணாடிக்கூடு உடைப்பு

மன்னார் சாவற்கட்டு புனித அந்தோனியார் ஆலயத்தில் கடந்த 24.03.2013 அன்று மாலை அந்தோனியார் சுருபம் வைக்கப்பட்டிருந்த கண்ணாடிக்கூடு இனம் தெரியாதோரினால் உடைக்கப்பட்டதோடு ஆலயத்தினுள் மனித மலக்கழிவு வீசப்பட்டுள்ளதாக மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தின் உதவிப்பங்குத்தந்தை அருட்திரு. அன்ரன் தவராஜ் தெரிவித்தார்.

அன்று மாலை மழை பெய்துகொண்டிருந்த சமயம் ஆலயத்திற்குச் சென்றவர்கள் அந்தோனியார் சுருபம் வைக்கப்பட்டிருந்த கண்ணாடிப் பெட்டியை உடைத்துள்ளனர். சில பொருட்கள் இழுத்துக் கீழே வீசப்பட்டுக் கிடந்தன. ஆலயத்தினுள் மனிதமலம் வீசப்பட்டிருந்தது. இந்த நிலையில் ஆலயத்திற்கு மாலை வந்த மக்கள் இதுபற்றி எமக்குத் தெரியப்படுத்தினர். இதையடுத்து, இந்தச் சம்பவம் தொடர்பில் உடனடியாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றார்.

## உண்மை உறைக்கும் கமிலஸ்

ஒறுத்தல் இருந்து எஞ்சியவற்றை வறியவர்களுக்கு கொடுக்கவும்



(நன்றி - தி மெசஞ்சர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய திருத்தந்தைக்கு உலகத் தலைவர்கள் வாழ்த்து

புதிய திருத்தந்தையாக ஆர்ஜென்டீனாவைச் சேர்ந்த ஜோர்ஜ் மாரியோ பெர்கோக்லியோ தெரிவுசெய்யப்பட்டமைக்கு உலகத் தலைவர்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர். அவர் சமய மீள் நல்லிணக்கம் மற்றும் சமாதானம் தொடர்பில் பணியாற்ற வேண்டும் என அவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். அவரது தெரிவுக்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, பிரித்தானியா, ஜேர்மனி, ரஷ்யா, சீனா, பிரான்ஸ் உள்ளடங்கலான நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க நாடுகளிலிருந்து முதலாவது பாப்பரசராக ஆர்ஜென்டீனாவைச் சேர்ந்த பெர்கோக்லியோ அவர்களின் தெரிவு அப்பிராந்தியத்தின் பலத்தை எடுத்துக்காட்டுவதாக உள்ளது எனக் குறிப்பிட்ட ஒபாமா, பெர்கோக்லியோ பாப்பரசராக தெரிவுசெய்யப்பட்ட முதல் இலத்தீன் அமெரிக்கராகவும் பல நூற்றாண்டுக்குப் பின் தெரிவான ஐரோப்பியர் அல்லாதவராகவும் உள்ளதாகக் கூறினார்.

ஜேர்மனியிலும் உலகமெங்கிலும் உள்ள மக்களின் நம்பிக்கையின் இருப்பிடமாக புதிய பாப்பரசர் உள்ளதாக ஜேர்மனிய அதிபர் அஞ்ஜெலா மெர் கெல் கூறினார்.

அதேசமயம், ஐரோப்பிய ஒன்றிய தலைவர் ஹெர்மன் வான் ரொம்பியும் ஐரோப்பிய ஆணையகத் தலைவர் ஜோஸ் மனுவேல் பர்ரோஸோவும் புதிய பாப்பரசர் உலக மக்களையும் மதங்களையும் ஒன்றாக நெருக்கமுறச் செய்யவேண்டுமென வலியுறுத்தியுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையும் உரோமன் கத்தோலிக்கத் திருச்சபையும் சமாதானம், சமூக நீதி, மனித உரிமைகளை ஊக்குவித்தல், வறுமையையும் பசியையும் களைதல் போன்ற பொதுவான இலக்குகளைத் தம்மிடையே கொண்டிருப்பதாக ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ மூன் தெரிவித்தார்.

புதிய பாப்பரசர் நடைமுறைச் சாத்தியமான நெகிழ்ச்சித் தன்மையுடைய மனோபாவத்தை கொண்டிருப்பார் என நம்புவதாக சீனா தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

பாப்பரசர் முதலாம் பிரான்சிஸ்ஸின் பிறப்பிடமான ஆர்ஜென்டீனாவிலுள்ள மக்களும், பிரேசில், கொலம்பியா, ஈக்குவடோர், மெக்சிக்கோ ஆகிய ஏனைய லத்தீன் அமெரிக்க நாடுகளிலுள்ள மக்களும் பாப்பரசரின் தெரிவை ஒரு வெற்றி நிகழ்வாக கொண்டாடினர்.



தனது சொந்த நாடான ஆர்ஜென்ரீனா ஜனாதிபதியை சந்திக்கும் திருத்தந்தை பிரான்சிஸ்

## மன்னார் எரிபொருள் அகழ்வுப் பணிகள் 50 வீதம் வெற்றி

மன்னாரில் மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் மற்றும் இயற்கை எரிவாயு அகழ்வு நடவடிக்கைகள் 50 வீத வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

இலங்கை பெற்றுள்ள இந்த வெற்றி வீதம் சிறப்பானதென்றும் இயற்கை எரிவாயு மற்றும் எரிபொருள் தொடர்பான எதிர்கால நம்பிக்கையை இதன் மூலம் தக்கவைத்துக்கொள்ள முடியும் எனவும் அகழ்வாராய்ச்சி நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். மன்னாரில் இதுவரை நான்கு எரிபொருள் கிணறுகளில் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் அவற்றில் இரண்டு கிணறுகளில் ஹைதரோகார்பன் எரிவாயு கண்டுபிடிக்கப்பட்டது.

## கிளரீசியன் சபைக்கு மூன்று புதிய குருக்கள்



எஸ்.ஜெகநாதன் ஏ.சூசைநாயகம் பி. எஸ். டனுஸ்கா

இலங்கையில் உள்ள கிளரீசியன் துறவற சபையைச் சார்ந்த மூன்று திருத்தொண்டர்கள் ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையினால் நீர்கொழும்பு கடற்கரை வீதி, புனித செபஸ்தியார் ஆலயத்தில் இறைவனின் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்படவுள்ளனர்.

எஸ். ஜெகநாதன் (முருங்கன் பங்கு - சிறுக்கண்டல் கிராமம்), ஏ. சூசைநாயகம் (கற்கடந்தகுளம்), பி. எஸ். டனுஸ்கா சில்வா (கல்கமுவ) ஆகியோரே இவ்வாறு திருநிலைப்படுத்தப் படவுள்ளனர். இதில் முதல் இருவரும் மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதில் மன்னா பெருமிதம் அடைகின்றது. புதிய குருக்கள் அனைவருக்கும் மன்னார் மறைமாவட்டத்தின் வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவித்து மகிழ்கின்றோம்.

## உலகத் தலைவர்கள் மற்றும் இலட்சக்கணக்கான மக்கள் முன்னிலையில் புதிய திருத்தந்தை பதவியேற்பு

கடந்த 19.03.2013 அன்று வத்திக்கான் நகரின் புனித பீட்டர் சதுக்கத்தில் நடைபெற்ற பதவியேற்பு விழாவில் 266ஆவது பாப்பரசராக பிரான்சிஸ் என்ற பெயருடன் புதிய திருத்தந்தை பதவியேற்றுக்கொண்டார்.

பதவியேற்பு விழாவில் பதவிக்கான மோதிரமாக தங்க முலாம் பூசப்பட்ட வெள்ளி மோதிரத்தை அவர் அணிந்துகொண்டார். பதவியேற்பு விழாவில் 1.5 இலட்சம் முதல் 2 இலட்சம் பேர் வரை மக்கள் திரண்டிருந்தனர்.

உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 132 அதிகாரப்பூர்வ பிரதிநிதிகளும் ஆன்மீகத் தலைவர்களும் பங்கேற்றனர். இதில் ஆர்த்தடக்ஸ் கிறிஸ்தவர்கள் பிரிவின் தலைமைக்குரு. பார்த்தலோமி - 1 விழாவில் பங்கேற்றமை இதுவே முதல் முறையாகும்.

ஆர்ஜென்டீனா ஜனாதிபதி கிறிஸ்டினா கிர்ச்னெர், அமெரிக்க துணை ஜனாதிபதி ஜோபிடேன் உள்ளிட்ட உலக தலைவர்கள் பலரும் இவ்விழாவில் பங்கேற்றனர்.

இதற்குப்பின்னர் புனித பீட்டர் சதுக்கத்தில் கூடியிருந்த மக்களிடையே திறந்த ஜீப்பில் திருத்தந்தை பிரான்சிஸ் உலா வந்தார். அவ்வப்போது தம்மிடம் அளிக்கப்பட்ட குழந்தைகளை அவர் தொட்டும் முத்தமிட்டும் ஆசீர்வதித்தார். ஓரிடத்தில் மாற்றுத்திறனாளிகள் நின்றிருந்தபோது ஒரு மாற்றுத்திறனாளியை பாப்பரசர் தமது ஜீப்பிலிருந்து இறங்கி ஆசீர்வதித்தார்.

இனவெறிக் குற்றச்சாட்டு காரணமாக ஜிம்பாப்வே ஜனாதிபதி ரொபர்ட் முகாபே ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்குச் செல்ல அந்நாடுகளின் கூட்டமைப்பு தடைவிதித்துள்ளது. வத்திக்கான் நகரம் ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்காததால் முகாபேயும் விழாவில் பங்கேற்றார்.

## ஏழைகளையும் பலவீனமானவர்களையும் பாதுகாக்க வேண்டும்

### பதவியேற்பு விழாவில் புதிய திருத்தந்தை உலகத் தலைவர்களுக்கு அழைப்பு




"சுற்றுச்சூழலையும், பலவீனமானவர்களையும், ஏழைகள் ஆகியோரையும் பாதுகாக்க வேண்டும்" என அரசர்கள், இளவரசர்கள், ஜனாதிபதிகள், சமயத் தலைவர்கள், மக்கள் ஆகியோரை புதிய பாப்பரசர் பிரான்ஸிஸ் தமது பதவியேற்பு விழா உரையில் கேட்டுக்கொண்டார்.

அவர் தமது பதவியேற்பு விழாவில் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டவை வருமாறு. "மக்கள் இயற்கையைப் பாதுகாக்க வேண்டும். ஒருவரிடத்தில் மற்றொருவர் அன்பு செலுத்த வேண்டும். பாப்பரசரின் கடமை அனைத்து மானுடர்களையும் பாதுகாப்பதாகும். இருள் நிறைந்திருக்கும் இந்நாளில் நம்பிக்கையின் ஒளியைக் காண்பது அவசியம். ஆடவரும் பெண்டிரும் மற்றவர்களிடத்தில் நம்பிக்கையை உண்டு பண்ணவேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

## மன்னா பத்திரிகைப் பொறுப்பாளர்களே, விநியோகஸ்தர்களே,

உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். சில விநியோகஸ்தர்கள் மன்னாவை காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம். பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அல்லது பொதுநிலைப் பணியாளர்களும் இது விடயத்தில் அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். உங்கள் கைக்கு பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரிய விநியோகஸ்தரிடம் ஒப்படைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

- மன்னா நிர்வாகம்

## புதிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் கடந்த காலப் பதிவுகள்



சிறுவனாக




இளம் குருவாக



குருமட மாணவனாக



முதிர்ந்த குருவாக



சிறுவயதில் தனது சகோதரருடன்



குருவாக வந்தபின்னர் தனது குடும்பத்தினருடன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில் தடம்பதிக்கும் புதிய திருத்தந்தை பிரான்சிஸ்



(புதிய திருத்தந்தையாகத் தேர்வுசெய்யப்பட்டவுடன் முதல் முறையாக பொது மக்களுக்கு காட்சிகொடுக்கின்றார்)

புதிய திருத்தந்தை பற்றிய செய்திக்காக உலகம் காத்திருந்தது. கத்தோலிக்கர் மட்டுமல்ல அனைத்து மக்களுமே இச்செய்தியை எதிர்பார்த்திருந்தனர். புதிய திருத்தந்தை பற்றிய செய்திகளை அனைத்து மின்னியல் ஊடகங்களும், அச்சு ஊடகங்களும் முண்டியடித்துக்கொண்டு வெளியிட்டு வருகின்றன. செய்தி வேட்டையில் ஈடுபட்டிருக்கும் உலகத்தின் அனைத்து ஊடகங்களின் பார்வையும் இப்போது வத்திக்கானை நோக்கியே உள்ளது.

**ஆர்ஜென்ரீனாவில் மகிழ்ச்சி**

ஆர்ஜென்ரீனா நாட்டின் உயர் மறைமாவட்டப் பேராயராகப் பணிபுரிந்த கர்தினால் ஜோர்ச் மரியோ பெர்கோக்லியோ (வயது 76) உலகக் கத்தோலிக்கர்களின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டமையை அறிந்து அந்நாட்டு மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கியுள்ளனர். சிலர் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர். சிலர் மகிழ்ச்சிப்பாடல்களைப் பாடி ஆடினர். செய்தி வெளியாகியவுடனே அந்நாட்டு மக்கள் தமது வாகனங்களின் ஒலிப்பான்களை அழுத்தி ஒலி எழுப்பி தமது புளகாங்கிதத்தை வெளிப்படுத்தினர். அந்நாட்டுத் தொலைக்காட்சி அறிவிப்பாளர்கள் மகிழ்ச்சியால் கூச்சலிட்டனர். புதிய திருத்தந்தை கர்தினாலாகப் பணியாற்றிய பேராலயத்திற்கு பெருவெள்ளமாக மக்கள் கூடத்தொடங்கினர்.

**இலத்தீன் அமெரிக்கப் பிராந்தியம்**

உலகத்தில் உள்ள 120 மில்லியன் கத்தோலிக்கர்களின் 42 வீதமானவர்கள் இலத்தின் அமெரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஆவர். பிறேசில், மெக்சிக்கோ, கொலம்பியா, ஆர்ஜென்ரீனா, பேரு, வெனிசுவெலா, சிலி, ஈக்குவாடோர், கௌத்தமாலா, கியூபா, போன்ற 23 நாடுகளை உள்ளடக்கிய பகுதியே இலத்தின் அமெரிக்கப் பிராந்தியம் என அழைக்கப்படுகின்றது.

இலத்தின் அமெரிக்காவில் இருந்து திருத்தந்தை தெரிவுசெய்யப்பட்டமையானது கத்தோலிக்க திருச்சபையிலும், உலகத்திலும் இந்தப் பகுதியின் வளர்ந்துவரும் தாக்கத்தைக் காட்டுவதாக திருச்சபை அதிகாரிகளும் உலகத் தலைவர்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இத்தெரிவானது உலகத்தை தொடர்ந்து வடிவமைப்பதில் இந்தப் பகுதியின் பலத்தையும், உயிர்த்துடிப்பையும் பேசுகிறது என அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா குறிப்பிட்டுள்ளார். 'புதிய உலகத்தில்' இருந்து திருத்தந்தை தெரிவுசெய்யப்பட்டமையானது வரலாற்றுச் சிறப்புமிக்க உண்மையான சரியான நிகழ்வாகும் என அவுஸ்ரேலியப் பிரதமர் யூலியா கிலார்ட் தெரிவித்திருந்தார்.

**வரலாற்றுச் சிறப்புக்கு உரியவர்**

திருத்தந்தை முதலாம் பிரான்சிஸ் அவர்களின் பின்னணியை நோக்கும்போது இவர் மூன்று வகையில் வரலாற்றுச் சிறப்பு மிக்க திருத்தந்தையாக தடம் பதிக்கின்றார். ஒன்று அவருடைய தாயகம் மற்றையது அவர் சார்ந்திருக்கும் துறவற சபை, மூன்றாவது அவர் தேர்ந்தெடுத்துள்ள பெயர்.

இலத்தின் அமெரிக்க நாடுகளில் ஒன்றாகிய ஆர்ஜென்ரீனா நாட்டைத் தாயகமாகக் கொண்ட ஒருவர் திருத்தந்தை என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளமை இதுவே முதல் தடவையாகும். இந்த வகையில் இலத்தின் அமெரிக்க நாடுகளின் வரலாற்றில் இவர் தனித்துவமான இடத்தைப் பிடித்துள்ளார்.

அடுத்து கத்தோலிக்க திருச்சபையின் மிகப்பெரும் குருக்களுக்கான துறவற சபைகளில் ஒன்றாகிய இயேசு சபையில் (Jesuits) இருந்து இவரே முதன் முதலாக திருத்தந்தையாக வந்துள்ளார். இது இயேசு சபைக்குக் கிடைத்த மிகப்பெரும் மகிழ்ச்சியான செய்தியாகும்.

மூன்றாவதாக திருச்சபை வரலாற்றில் பிரான்சிஸ் என்ற பெயரை தேர்ந்துகொண்ட முதல் திருத்தந்தையாகவும் இவர் விளங்குகின்றார். புனித பிரான்சிஸ் அசிசி என்ற புனிதரின் பண்புகள் மிகவும் உயர்ந்தவை. ஏழைகள்பால் இரக்கம், எளிமை, தாழ்மை, கட்டுப்பாடு, திருச்சபையை மீளக் கட்டியெழுப்பவேண்டும் என்ற அவா போன்ற பண்புகளால் அணிசெய்யப்பட்டவர் இந்தப் புனித பிரான்சிஸ் அசிசி. இவருடைய பெயரைத் தேர்ந்தெடுத்ததன் மூலம் புதிய திருத்தந்தையும் அப்புனிதரின் அடிச்சுவட்டைப் பின்பற்ற முனைகிறார் எனக்கொள்ளலாம்.

**எதிர்பார்க்கப்பட்ட முடிவு**

திருத்தந்தையைத் தெரிந்தெடுக்கும் முறை மிகவும் பழமையானது என்பது உண்மைதான். ஆனால் இங்கே நாடுகளின் தேர்தல்களில் நடப்பதுபோன்று பிரச்சாரங்களோ, கட்சி அரசியலோ இல்லை. கர்தினால்கள் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படும் திருத்தந்தை உலகின் எந்தப் பகுதியில் இருந்தும் வரலாம். இங்கே தூய ஆவியின் செயற்பாடு முன்னிலைப்படுத்தப்படுகின்றது. அதேவேளை காலத்தின் தேவைக்கு ஏற்ப மனிதர் என்ற வகையில் திருச்சபையில் சில எதிர்பார்ப்புகள் இருப்பது இயல்பானதே.

திருச்சபையின் வரலாற்றில் அனேகமாக ஐரோப்பாவைச் சேர்ந்தவர்கள் அதிலும் குறிப்பாக இத்தாலியைச் சேர்ந்தவர்களே திருத்தந்தையாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். அந்தவகையில் இந்த முறை புதிய திருத்தந்தை ஐரோப்பியர் அல்லாதவராக இருக்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. புதிய திருத்தந்தை ஆபிரிக்கராகவோ, ஆசியராகவோ அல்லது இலத்தின் அமெரிக்கராகவோ இருந்தால் நல்லது என்றே கருதப்பட்டது.

அமெரிக்காவில் கறுப்பினத்தவரான (ஜனாதிபதி ஒபாமா) ஒருவர் முதல் தடவையாக ஜனாதிபதியாக வந்தபோதே இந்தச் சிந்தனை திருச்சபைக்குள்ளும் ஏற்படத் தொடங்கியது. அந்த வகையில் இலத்தின் அமெரிக்க நாடுகளில் ஒன்றான ஆர்ஜென்ரீனாவில் இருந்து திருத்தந்தை வந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாக வரவேற்கப்படுகின்றது. ஏறக்குறைய 1300 ஆண்டுகளுக்குப் பின்னர் இப்போதுதான் ஐரோப்பியர் அல்லாத ஒருவர் திருத்தந்தையாக வந்துள்ளதாகச் சொல்லப்படுகின்றது.

**மிதவாதிகளுக்குக் கிடைத்த வெற்றி**

புதிய திருத்தந்தை அவர்கள் தீவிரத்தன்மை அற்ற ஒரு மிதவாதியாகவே நோக்கப்படுகின்றார். இப்படிப்பட்ட ஒருவரையே பெரும்பான்மையான கத்தோலிக்கர் எதிர்பார்த்தனர். காரணம் இன்றைய உலகின் தீவிரமான – புதுமையான மாற்றங்களுக்கு மத்தியில் உறுதியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய ஒரு திருத்தந்தை தேவை என உணரப்பட்டது. இன்று இயற்கைக்கும், இறைவனின் திட்டத்திற்கும் எதிரான கொள்கைகள், சட்டங்கள் நாடுகளில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. கருக்கலைப்பு, இரக்கக்கொலை, ஒத்தபால் திருமணம், குளோனிங் போன்ற விடயங்களில் கத்தோலிக்க திருச்சபை அன்று தொடக்கம் இன்றுவரை உறுதியான நிலைப்பாட்டையே எடுத்துவந்துள்ளது. பலவித எதிர்ப்புக்கள் சவால்களுக்கு மத்தியிலும் கத்தோலிக்க திருச்சபை இந்த விடயங்களில் உறுதியான கொள்கைகளைக் கொண்டுள்ளது. ஒரு வகையில் திருச்சபையானது உலகத்தின் மனச்சாட்சியாகச் செயற்படுகிறது எனலாம். நல்மனம் கொண்ட அனைவருமே திருச்சபையின் இந்த நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்கின்றனர்; ஆதரிக்கின்றனர்.

இன்றைய உலகத்தின் ஓட்டத்திற்கு ஏற்ப ஒத்து ஓடுகின்ற ஒருவராக அல்லாமல் திருச்சபையின் அடிப்படைக் கொள்கைகளை தக்கவைக்கக்கூடிய - நிலைநாட்டக்கூடிய ஒருவராகவும் உலகத்தின் மனச்சாட்சியாக இருந்து அநீதிகள், அடக்குமுறைகளுக்கு எதிராக உரத்துக் குரல் கொடுக்கக்கூடிய ஒருவராகவும் புதிய திருத்தந்தை முதலாம் பிரான்சிஸ் நோக்கப்படுகின்றார்.

எழுத்துரு : தமிழ் நேசன், (நன்றி - வீரகேசரி, தினகரன்)





புதிய திருத்தந்தையாகத் தமது நாட்டு கர்தினால் தெரிவுசெய்யப்பட்டதை அறிந்த ஆர்ஜன்ரீனா மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்வதையும் சிலர் அந்நாட்டு பேராலயத்திற்கு வந்து செபத்தில் ஈடுபடுவதையும் காணலாம்.

## திருத்தந்தை பிரான்சிஸ் ஒரு சில தகவல்கள்

திருச்சபையின் 266வது திருத்தந்தையான திருத்தந்தை பிரான்சிஸ் அமெரிக்க கண்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முதல் திருத்தந்தை ஆவார்.

நவீன காலத்தில் ஐரோப்பியரல்லாத முதல் திருத்தந்தை.

திருச்சபையில் திருத்தந்தையாகியுள்ள முதல் இயேசு சபைத் துறவி.

திருத்தந்தையர் வரலாற்றில் முதன் முறையாக பிரான்சிஸ் என்ற பெயரைத் தெரிவுசெய்தவர்.

பேருந்தில் பயணம் செய்ய விரும்புகிறவர்.

50 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு நுரையீரலுடன் வாழ்ந்து வருபவர் (நோய் காரணமாக இளவயதிலேயே ஒரு நுரையீரல் அகற்றப்பட்டது.)

2001 ஆண்டில் எயிட்ஸ் நோயாளிகளின் பாதங்களைக் கழுவி முத்தமிட்டவர். (அந்தக் காட்சியைக் கீழே காணலாம்)



இத்தாலிய, இஸ்பானிய மொழிகளோடு ஜெர்மன், ஆங்கிலம், பிரெஞ்ச் ஆகிய மொழிகளையும் அறிந்தவர்.

திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்படும்வரை தனது உணவைத் தானே சமைத்துக்கொண்டு அடுக்குமாடிக் குடியிருப்பில் ஒரு சிறிய வீட்டில் மாற்றுத்திறனாளியான ஓர் இயேசு சபைத் துறவியுடன் வாழ்ந்து வந்தவர்.

பூனோஸ் ஐரெஸ் நகரின் சேரிகளை அடிக்கடி சந்தித்து வந்தவர். ஒருவேளை தான் திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் உரோமைக்குப் பயணம் செய்து வரவேண்டாம், மாறாக, அப்பயணத்தை ஏழைகளுக்குக் கொடுங்கள் என ஆர்ஜென்டினாவைவிட்டுப் புறப்படுவதற்கு முன்னர் சொல்லி வந்தவர்.

திருச்சபையின் கோட்பாடுகளில் பற்றுள்ளவர், ஆயினும் திருமணமாகாத பெண்களுக்குப் பிறந்த குழந்தைகளுக்குத் திருமுழுக்குக் கொடுக்க மறுத்த குருக்களைக் கடிந்து கொண்டவர்.

சாதாரணக் குருக்கள் அணியும் இடுப்புக் கச்சையை அணிந்துகொள்பவர்.

1936ம் ஆண்டு டிசம்பர் 17ம் திகதி ஆர்ஜென்டினா நாட்டின் பூனோஸ் ஐரெஸ் நகரில் ஐந்து குழந்தைகள் கொண்ட குடும்பத்தில் பிறந்து, ஜோர்ஜ் மரிய பெர்காக்லியோ என்று அழைக்கப்பட்டவர். இவரது தந்தை இரயில்வே துறையில் பணிபுரிந்த ஓர் இத்தாலியர்.

வேதியியல் துறையில் பட்டம் பெற்றபின், ஜோர்ஜ் 1958ம் ஆண்டு தனது 22வது வயதில் இயேசு சபையில் சேர்ந்தார்.

மெய்யியலிலும், மனநல இயலிலும் முதுகலைப் பட்டங்கள் பெற்ற இவர், பூனோஸ் ஐரேஸில் உள்ள கொலேஜியோ தெல் சால்வதோர் என்ற கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றினார்.

1969ம் ஆண்டு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட ஜோர்ஜ், 1973ம் ஆண்டு முதல் 1979ம் ஆண்டு முடிய ஆர்ஜென்டினா இயேசு சபை மாநிலத்தின் தலைவராகப் பணியாற்றினார்.

1992ம் ஆண்டு பூனோஸ் ஐரேஸ் உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்ட இவர், 1998ம் ஆண்டு முதல் அம்மறைமாவட்டத்தின் பேராயராகப் பொறுப்பேற்றார். திருத்தந்தை இரண்டாம் ஜோன் போல் 2001ம் ஆண்டு இவரை கர்தினாலாக உயர்த்தினார்.



புனித பிரான்சிஸ் அசிசியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# மன்னார் ஆயர் நீதிக்காகவே குரல் கொடுக்கின்றார்! அவரை அச்சுறுத்தும் செயற்பாடுகளை நிறுத்துங்கள்!

### ஜெயலத் எம்.பி அரசுக்கு வேண்டுகோள

மக்கள் படும் துன்பங்களுக்கு எதிராகவும், நீதிக்காகவும், குரல்கொடுத்து செயற்படும் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகைக்கு எதிராக அச்சுறுத்தும் வகையிலான செயற்பாடுகளைக் கண்டிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்தனா தெரிவித்தார். ஆயர் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் தாமும் பங்கெடுத்து செயற்படத் தாயாராக இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

வடக்குக் கிழக்கிலுள்ள மக்கள் படும் துன்பங்களுக்கு எதிராகவும் நீதிக்காகவும் குரல்கொடுத்து செயற்படும் மன்னார் ஆயருக்கு எதிராக அச்சுறுத்தும் வகையிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கடந்த மார்ச் மாதம் கொழும்பிலிருந்து வழங்கப்பட்ட உத்தரவின்பேரில் மன்னாரிலுள்ள சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் ஒருவரால் வலுக்கட்டாயமாக சில மக்கள் அழைத்துவரப்பட்டு 16.03.2013 அன்று ஆயருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது. இந்த ஆர்ப்பாட்டம் பிசுபிசுத்துப்போனாலும் இவ்வாறு அவரை அச்சுறுத்தும் செயற்பாட்டைக் கண்டிக்கின்றேன். ஆயரை அச்சுறுத்தி அடிபணிய வைக்க முடியாது. எனினும் இவ்வாறான செயற்பாட்டை



நிறுத்துமாறு அரசாங்கத்தைக் கோருகின்றேன். அவர் நீதிக்காகவே குரல் கொடுத்துப் போராடுவதுடன் வடக்கு கிழக்கிலுள்ள சகல இன மக்களின் பிரச்சினைகளுக்காகவுமே பேசுகின்றார் எனவும் ஜயலத் எம். பி. மேலும் தெரிவித்தார்.

# இளைஞர்களுக்கான தவக்காலத் தியானம்

## மறைமாவட்ட பங்குகளில் இருந்து 825 இளையோர்கள் பங்கேற்பு





ஆண்டுதோறும் இடம்பெறுகின்ற இளைஞர்களுக்கான தவக்காலத் தியானமானது இம்முறை மார்ச் மாதம் 15,16,17ம் திகதிகளில் மடு தியான இல்லத்தில் நடைபெற்றது. இத்தியானத்தை முன்னின்று நடாத்த தமிழ் நாடு புதுவாழ்வுக் குழுவினர் வருகை தந்திருந்தனர்.

சகோதரர் இருதயசாமி தலைமையில் தமிழ்நாடு பாளையங்கோட்டை மறைமாவட்டத்தில் குற்றாலத்திற்கு அருகே தியான இல்லம் அமைத்து நற்செய்தியை போதித்துவரும் இவர்கள் மன்னார் மறைமாவட்டத்தின் ஆன்மீக வளர்ச்சியிலே பெரிதும் உதவியாக இருந்து வருகின்றனர். அருட்பணி. பெரிய நாயகம், சகோ. சேசுராஜ், சகோ. ஞானம், சகோ. ஜெயராச் ஆகியோர் இந்த இளைஞர் தியானத்தை முன்னின்று நடாத்தினர்.

எல்லாப் பங்குகளிலும் இருந்து 825 இளைஞர், யுவதிகள் இத்தியானத்திலே கலந்துகொண்டனர். 15ம் திகதி மாலை 5:30 மணிக்கு ஆரம்பமான இத்தியானத்தை ஆரம்பித்துவைக்க மன்னார் மறைமாட்ட குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை வருகைதந்திருந்தார். 2ம் நாள் நிகழ்விலே இருபதிற்கும் மேற்பட்ட குருக்கள் பாவசங்கீர்த்தன அருட்சாதனத்தை வழங்க வந்திருந்தனர். இத்தியானத்திலே கலந்துகொண்ட அனைத்து இளைஞர்களும் யுவதிகளும் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு பாவசங்கீர்த்தனம் செய்துகொண்டதைக் காணமுடிந்தது. அன்று மாலை இளைஞர்களைச் சந்தித்து உரையாட மன்னார் மறைமாவட்ட ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகை வருகை தந்திருந்தார். அவர் இளைஞர்களோடு உரையாடும்போது நீதியுள்ள சமூதாயத்தை கட்டியெழுப்பவும் கடவுளுக்கு ஏற்புடைய வாழ்வு வாழவும் அன்பாய் இருக்கிற கடவுளை துன்பப்படுகின்ற, துயரப்படுகின்ற, அடிமைப் - படுத்தப்படுகின்ற மக்கள் மத்தியில் கண்டுகொள்ளவும் இளைஞர்களுக்கு அழைப்புவிடுத்தார்.

அன்று இரவு இடம்பெற்ற உள்மனக் காயங்களை குணப்படுத்துகின்ற (Inner healing session) வழிபாட்டில் ஏராளமான இளைஞர் யுவதிகள் குணம்பெற்று சாட்சி சொல்லியதைக் காணமுடிந்தது. 17ம் திகதி ஞாயிறு நன்றித் திருப்பலியைத் தொடர்ந்து மதிய உணவுடன் இத்தியானம் இனிதே நிறைவடைந்தது.

தியானம் வெற்றிகரமாக நடைபெற உதவிசெய்த பங்குத்தந்தையர்கள், இளைஞர், யுவதிகள், சிறப்பாக மடுப்பரிபாலகர் அருட்பணி. எமிலியானுஸ்பிள்ளை, தியான இல்லப் பொறுப்பாளர்கள் அருட்பணி. இயேசுராஜா, அருட்பணி. ரூபன் இன்னும் அருட்கன்னியர்கள் அன்பியப் பணியாளர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

தகவல் :- இளைஞர் ஆணைக்குழு, மன்னார் மறைமாவட்டம்

### அமதி குருக்களின் வழிநடத்தலில்
# தலைமன்னார் பங்கில் தியானம்

"தவக்கால கல்வாரிப் பயண சிந்தனை ஊட்டலும் நம்பிக்கை ஆண்டின் மறுமலர்ச்சிப் பார்வையும்" என்ற தலைப்பிலான 5 நாள் தியானம் தலைமன்னார் பங்கில் இடம்பெற்றது. கடந்த 27.02.2013 அன்று மாலை ஆரம்பிக்கப்பட்ட இத்தியானம் நான்கு பேர்கொண்ட அமல மரித்தியாகிகள் சபைக் குருக்களினால் வழிநடாத்தப்பட்டது.

முதல் நாள் இடம்பெற்ற மன்னிப்பு வழிபாடு படக்காட்சியுடனான விளக்கப்படங்களுடன் மக்கள் மனதைத் தொடும்படியாக அமைந்தது. அடுத்த நாள் வலயச் சிலுவைப்பாதை இடம்பெற்றது. 3ம் நாள் கல்வாரிப்பாதையின் பாடுகள் காட்சிப்படுத்தப்பட்டன. 4ம் நாள் காலை புனித லோறன்சியார் ஆலயத்தில் கீழ் வகுப்பு மாணவ மாணவிகளுக்கான தியானம் இடம்பெற்றது.

5ம் நாள் காலை அருட்தந்தை ஜெயபாலன் அவர்கள் தலைமையில் நான்கு அருட்பணியாளர்களுடனும் தியாக்கோனும் இணைந்து திருப்பலி ஒப்புக்கொடுத்தனர். மேற்படி நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்த தலைமன்னார் பங்கின் பங்குத்தந்தை அருட்பணி. டெஸ்மன் குலாஸ் அடிகளார் பாராட்டுக்குரியவர்.

தகவல் : அல்விறெட் சில்வா, ஆலயப் பதிவாளர்.

### விசுவாச ஆண்டில் 'நான் நம்புகிறேன்'
# நூல் தொகுப்பு வெளியீடு

விசுவாச ஆண்டிலே, இறைமக்கள் தாங்கள் அறிக்கையிடும் விசுவாசப் பிரமாணம் குறித்து அறிந்து அர்த்தமுள்ள விசுவாச அறிக்கையிடல் செய்யத் தூண்டும் வகையில் "நான் நம்புகிறேன்" எனும் தலைப்பில் விசுவாசப் பிரமாணம் (நம்பிக்கை அறிக்கை) குறித்த தொகுப்பினை மன்னார் மறைமாவட்ட அன்பிய விவிலிய ஆணைக்குழுக்கள் அச்சேற்றியுள்ளன.

இச்சிறிய நூற்தொகுப்பின் உள்ளடக்கங்கள் கத்தோலிக்க திருச்சபையின் முக்கிய ஆவணப் புத்தகங்களிலிருந்து எடுக்கப்பட்டு தொகுக்கப்பட்டவை. திருத்தூதர்களின் விசுவாசப் பிரமாணத்தை (நம்பிக்கை அறிக்கை) பிரதானமாகவும் நம்பிக்கை அறிக்கை குறித்த 50 கேள்வி பதில்களையும், விசுவாச ஆண்டிற்கான செபம், கத்தோலிக்க கோட்பாட்டின் வாய்ப்பாடுகள், விசுவாச ஆண்டின் அடையாளச் சின்னத்திற்கான விளக்கம் ஆகியவற்றை இணைப்பாகவும் கொண்டு வெளியிடப்பட்டுள்ள இச்சிறிய நூற்தொகுப்பு மன்னார் மறைமாவட்ட பங்குகளுக்கு பங்குத்தந்தையரின் வேண்டுகோளின்பேரில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இப்புத்தகங்கள் தேவையானவர்கள் மறைமாவட்ட அன்பியத் தொடர்பகத்தில் பெற்றுக்கொள்ள முடியும். நூற்பிரதி ஒன்றின் விலை ரூபா 30 மட்டுமே.

### வேப்பங்குளப் பங்கு மக்களின்
# தவக்கால திருயாத்திரை

வேப்பங்குளப் பங்கின் தவக்கால திருயாத்திரை 23.02.2013 அன்று மன்னார் மறைமாவட்டத்தின் பிரசித்திபெற்ற திருத்தலங்களுக்கு பங்குச் சமுகமாக மேற்கொள்ளப்பட்டது. பங்கின் அனைத்து ஆலயங்களிலிருந்தும் 300ற்கும் மேற்பட்ட இறைமக்கள் இத்திருயாத்திரையில் கலந்து இறை அனுபவத்தை பெற்றுக்கொண்டனர்.

இவ்விசுவாச ஆண்டில் எமது விசுவாச வாழ்விற்கு சாட்சியம் பகரவும், இறைவிசுவாசத்தில் நிலைத்திருக்க உறுதிபெறவும் இத்திருயாத்திரை வழிவகுத்தது. பங்குத்தந்தை அருட்பணி. ரஜனிகாந் அவர்களால் மடுத்திருத்தலத்தில் திருப்பலி, தொடர்ந்து பரப்புக்கடந்தான் கத்தர்கோவிலில் சிலுவைப்பாதைத் தியானம், மாந்தை லூர்து கெபியில் செபமாலைத் தியானம் ஆகியவற்றுடன் தலைமன்னார் லோறன்சியார் ஆலயம், தோட்டவெளி வேதசாட்சிகள் ஆலயம், ஆட்காட்டிவெளி சவேரியார் ஆலயம் ஆகியவற்றில் இறைவேண்டலில் ஈடுபட்டு தள்ளாடி தூய அந்தோனியார் ஆலயத்தில் நன்றி வழிபாட்டுடன் திருயாத்திரை நிறைவுற்றது.

கலந்துகொண்ட அனைத்து இறைமக்களும் தம்மை சீர்தூக்கிபார்க்கவும் இறைபிரசன்னத்தை நிறைவாக பெற்றுக்கொள்ளவும்கூடியதாக இப்பயணம் அமைந்திருந்தது. பங்குத்தந்தை ஒவ்வொரு திருத்தலத்திலும் அதன் வரலாறு மற்றும் அதன் புனிதத்துவத்தை இறைமக்களிற்கு தெளிவுபடுத்தினார். இறைவனின் நிறைவான ஆசீர்வாதத்தை அனைத்து இறைமக்களுக்கும் வழங்கினார்.

### வேப்பங்குளப் பங்கில்
# மாபெரும் சிலுவைப்பாதை தியானம்

வேப்பங்குளப் பங்கின் வருடாந்த சிலுவைப்பாதைத் தியானம் 03.03.2013 அன்று காலை 6.30 மணிக்கு பங்கின் துணை ஆலயங்களான கூமாங்குளம் புனித அந்தோனியார் ஆலயம், தாஸ்கோட்டம் குழந்தை யேசு ஆலயம் ஆகியவற்றிலிருந்து புறப்பட்டு சாம்பல் தோட்டம் காணிக்கை மாதா ஆலயத்தில் திருப்பலியுடன் நிறைவுபெற்றது. அருட்பணி அருள்ராச் CMF (இயக்குனர் வரோட் நிறுவனம்) அவர்கள் தலைமையில் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

சிலுவைப்பாதை தியானங்கள் இன்றைய சமகால சூழ்நிலைகளை ஒட்டியதாக ஒவ்வொரு நபரும் தம்மை சீர்தூக்கி பார்க்கும் முகமாக அமைந்திருந்தது. திருப்பலியில் மறையுரை ஆற்றிய இந்தியா தமிழ் நாட்டிலிருந்து வருகைதந்த அருட்பணி. லோறன்ஸ் CMF சிலுவையின் மகத்துவத்தையும் ஏன் சிலுவைச்சாவை யேசுகிறிஸ்து ஏற்றுக்கொண்டார் என்பதையும் தெளிவாக எடுத்துரைத்தார்.

இந்தப் பாரிய திறந்தவெளிச் சிலுவைப்பாதை பக்திமுயற்சியை பங்கு அருட்பணிப் பேரவையுடன் இணைந்து பங்குத்தந்தை அருட்பணி. அ. ரஜனிகாந் சிறப்பாக நெறிப்படுத்தியிருந்தார்.

தகவல் :- ஏ. யோய் ஜயந்தன், ஆலய செயலாளர் - புனித சூசையப்பர் ஆலயம், வேப்பங்குளம்

### அன்பியப் பணியாளர்களுக்கான
# தவக்காலத் தியானம்



மன்னார் மறைமாவட்டத்தின் கத்தோலிக்க விசுவாசம் தோன்றி வளர்ந்த இடங்களுக்கு திருப்பயணம் மேற்கொண்டு, விசுவாச அறிக்கை செய்து, ஒப்புரவு அருட்சாதனம் பெற்று, செப வழிபாடு மேற்கொண்டு, விசுவாச வாழ்வை உறுதிப்படுத்தல் என்றுரைக்கும் மன்னார் மறைமாவட்ட மேய்ப்புப்பணித் திட்டம் - 2013 "விசுவாசத்தை வாழ்தல்" தீர்மானம் - 04க்கு அமைவாக மன்னார் மறைக்கோட்ட அன்பியப் பணியாளர்களுக்கான ஒருநாள் தவக்காலத் தியானம் கடந்த 03-03-2013 ஞாயிறு காலை 9.30 – மாலை 4.00 மணி வரை தோட்டவெளி தூய வேதசாட்சிகள் அன்னை ஆலய வளாகத்தின் தியான மண்டபத்தில் நடைபெற்றது.

இத்தியானமானது மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி. ச. நெவின்ஸ் யோகராஜ் பீரிஸ் அவர்களின் ஏற்பாட்டின்படி தென்னிந்திய, தமிழ்நாடு பாளையங்கோட்டை மறைமாவட்டத்தில் இயங்கும் புதுவாழ்வுக் குழுவினரை வளவாளர்களாகக் கொண்டு அன்பிய இயக்குனர் அருட்பணி. சூ. டக்ளஸ் மில்ரன் லோகு அவர்களின் நெறிப்படுத்துதலில் நடந்தேறியது. அன்பியப் பணியாளர்களின் அழைப்பு, பணி, சாட்சிய வாழ்வு, செப ஈடுபாடு, பிறருக்கான பரிந்துரைச் செபம் போன்றவற்றை உள்ளடக்கங்களாகக் கொண்டு நடாத்தப்பட்ட இத்தவக்காலத்தியானத்தில் மன்னார் மறைக்கோட்டத்தின் 9 பங்குகளிலிருந்து 245 அன்பியப் பணியாளர்கள் பங்கேற்று, ஒப்புரவு அருட்சாதனம் பெற்று, புதுப்பித்தல் அனுபவம் பெற்றனர். தோட்டவெளி ஆன்மீக மைய இயக்குனர் அருட்பணி. யூட் குருஸ், தோட்டவெளி பங்குத்தந்தை அருட்பணி. யூட் ஞானராஜ் குருஸ் (நேரு) ஆகியோரும் இந்நிகழ்வு நன்றே நடந்தேற பூரண ஒத்துழைப்பு வழங்கினர்.

தகவல் : திரு. டி.பி.எவ்.ஞானப்பிரகாசம், அன்பியத் தொடர்பகம், மன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசுவாச ஆண்டு சிறப்புப் பொழிவு

*சிறப்புக் கட்டுரைத் தொடர் – 3*

### திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் நம்பிக்கையின் ஆண்டை அறிவித்து வெளியிட்ட

# நம்பிக்கையின் வாயில் (Porta Fidei)

### எனும் திருத்தூது மடல் (Apostolic Letter)

12. புண்ணியமும் பாவமும் இணைத்துப் பின்னப்பட்ட நமது அறிவுக்கு எட்டா மறைபொருளாக விளங்கும் நமது நம்பிக்கையின் வரலாற்றை திரும்ப நோக்குவது இந்த ஆண்டின் முக்கிய பணிகளுள் ஒன்றாக இருக்கும். புண்ணியமானது ஆண்களும் பெண்களும் தங்களின் சான்று வாழ்வினால் இறைசமுகத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அளித்த பங்களிப்பை வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. பாவமானது எல்லோருக்கும் தயாராக அளிக்கப்படுகின்ற இறைதந்தையின் இரக்கத்தை அனுபவிப்பதற்காக ஒவ்வொரு தனி நபரையும் உளப்பூர்வமாக தொடர்ந்த மனமாற்றத்திற்கும் தூண்டவேண்டும்.

இக்காலத்தின் நம்பிக்கையைத் தொடங்கி வழிநடத்துபவரும் அதை நிறைவுசெய்பவருமான இயேசுமீது (எபி.12:2) நமது கண்களைப் பதிய வைக்கவேண்டும். அவரிலேதான் அனைத்து மனித இதயங்களின் அங்கலாய்ப்புகளும், ஏக்கங்களும் நிறைவடைகின்றன. அன்பின், மகிழ்ச்சி, துன்பம், மற்றும் வலி எனும் நாடகத்தின் பதில் நாம் அனுபவித்த உணர்வு புண்படுத்தலை மன்னிக்கும் ஆற்றல், வெறுமையான மரணத்தின்மீது வாழ்வு கொள்ளும் வெற்றி இவை அனைத்தும் இயேசுவின் மனுவுருவாதலில் நிறைவடைகிறது. அவரின் மனிதனான நிகழ்வு நமது பலவீனங்களை தனது உயிர்ப்பின் வல்லமையால் மாற்றுவதற்காக அவர் நமது மனித பலவீனத்தில் பங்கெடுத்ததைக் குறிக்கிறது. நமது மீட்புக்காக மரித்து உயிர்த்த அவரிலேதான் கடந்த இரண்டு ஆயிரம் ஆண்டில் மீட்பின் வரலாற்றின் நம்பிக்கை வெளிச்சத்திற்கு வெளிக்கொணரப்படுகிறது.


அன்னை மரியாள் வானதூதரின் வார்த்தையை ஏற்று அவர் கடவுளின் தாயாகப் போகிறார் எனும் செய்தியை நம்பியதும் நம்பிக்கையால்தான் (காண் லூக் 1:38). எலிசபெத்தை சந்தித்தபோது ஆண்டவரில் நம்பிக்கைகொள்வோருக்கு அரும்பெரும் செயல் செய்கின்ற உன்னத இறைவனுக்கு அவரின் புகழ் கீதத்தை எழுப்பினார் (காண் லூக் 1:46-55). மகிழ்ச்சியோடும் கலக்கத்தோடும் தன் கன்னிமை குன்றாமலே அவர் தனது ஒரே மகனை ஈன்றெடுத்தார். (காண் மத் 2:13-15) அவரது கணவரான யோசேப்பை நம்பி ஏரோதிடமிருந்து இயேசுவைக் காப்பதற்காக அவரை எகிப்துக்கு எடுத்துச் சென்றார் (காண் மத் 2:13 – 15). அதே நம்பிக்கையால் அவர் நமது ஆண்டவரின் போதனைக் காலங்களில் அவரைப் பின்தொடர்ந்து கொல்கொத்தா வரை அவரோடு இருந்தார் (காண் யோவா 19:25 – 27). இயேசுவின் உயிர்ப்பின் கனிகளை நம்பிக்கையால் சுவைத்து (காண் லூக் 2:19,51) தூய ஆவியைப் பெற்றுக்கொள்ள மேல்தளத்தில் கூடியிருந்த பன்னிரு திருத்தூதர்களுக்கு வழங்கினார் (காண் திப 1:14,2:1-4).

திருத்தூதர்கள் அனைத்தையும் துறந்து அவர்களின் தலைவரை பின்தொடர்ந்ததும் நம்பிக்கையினால்தான் (காண் மாற் 10:28). இயேசுவிலே பிரசன்னமாகி நிறைவடையும் இறையாட்சியை அவர் போதித்தபோது அவரின் வார்த்தைகளை அவர்கள் நம்பினார்கள் (காண் லூக் 11:20). தமது போதனையால் அவர்களை வழிநடத்தி, அவர்களுக்கு வாழ்வுக்கான புதிய கட்டளைகளைத் தந்து, அதன் வழியாகவே இயேசுவின் இறப்புக்குப் பிறகு அறியப்படுபவர்கள் எனப் போதித்த இயேசுவோடு அவர்கள் சமூக, கூட்டு வாழ்வு வாழ்ந்தனர் (காண் யோவா 13:34-35). நற்செய்தியைப் படைப்பிற்கெல்லாம் அறிவிக்கும் கட்டளையை ஏற்று உலகம் முழுவதும் சென்றதும் இந்த நம்பிக்கையால்தான் (காண் மாற் 16:15). மக்கள் அனைவருக்கும் தாங்கள் சாட்சிகளாய் நின்ற உயிர்ப்பின் மகிழ்ச்சியை அச்சமின்றி அறிவித்தனர்.

திருத்தூதர்களின் போதனைகளை மையமாகக் கொண்டு, செபத்திலும் நற்கருணைக் கொண்டாட்டத்திலும் இணைந்து சகோதரர்களின் தேவைகளை நிறைவுசெய்யத் தங்கள் உடமைகளைப் பொதுப் பொருளாகக்கொண்டு திருத்தூதர்கள் முதல் திருச்சபையை ஏற்படுத்தியதும் நம்பிக்கையினால்தான்.

தங்களைத் துன்புறுத்தியவர்களை மன்னிக்கும் அன்பை உன்னத கொடையாக நற்செய்தியின் உண்மைக்கு சான்றுபகர்ந்து பெற்ற வேதசாட்சிகள் தங்களின் உயிரையும் கையளித்ததும் நம்பிக்கையால்தான்.

காலதாமதமின்றி வர இருக்கும் ஆண்டவருக்காகக் காத்திருக்கும் ஆண்களும் பெண்களும் கீழ்ப்படிதல், எளிமை, கற்பு ஆகியவற்றை கடைப்பிடிப்பதற்காக அனைத்தையும் துறந்து அர்ப்பண வாழ்வை ஏற்றதும் நம்பிக்கையால்தான். ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வை முழக்கமிடவும் அனைவருக்கும் அருள் தரும் ஆண்டினை அறிவிக்கவும் (காண் லூக் 4:18-19), நமது ஆண்டவரின் வார்த்தைகளைச் செயல் முறையாக்க எண்ணற்ற கிறிஸ்தவர்கள் நீதியின்பால் செயல்பாடுகளை முன்னெடுத்ததும் நம்பிக்கையால்தான். குடும்பங்களிலும், பணியிடங்களிலும் பொது வாழ்விலும், தாங்கள் அழைக்கப்பட்ட பணியிலும் தனிவரத்திலும் தாங்கள் கிறிஸ்தவர்கள் என்பதற்குச் சான்றுபகர்ந்து கிறிஸ்துவைப் பின்பற்றுவதால் வரும் மகிழ்ச்சியை அறிக்கையிட்ட கிறிஸ்தவர்கள் நூற்றாண்டுக் கணக்காய், எல்லா வயதைச் சார்ந்த ஆண்களும் பெண்களும் வாழ்ந்ததும் நம்பிக்கையினாலேதான். அவர்களின் பெயர்கள் வாழ்வின் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளன. (காண திமெ. 7:9,13:8) நாம் நமது நிகழ்காலத்திலும், வரலாற்றிலும் நமதாண்டவரின் வாழும் சாட்சிகளாக இன்று வாழ்வதும் நம்பிக்கையினாலேதான்.




13. அன்புச் செயல்களால் நாம் சாட்சி பகர்வதைத் தீவிரப்படுத்துவதற்கும் இந்த நம்பிக்கையின் ஆண்டு ஒரு உன்னத வாய்ப்பு ஆக, நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு ஆகிய மூன்றுமே நிலையாய் உள்ளன. இவற்றுள் அன்பே தலைசிறந்தது (1கொரி 13:13) என புனித பவுலடியார் நமக்கு நினைவூட்டுகிறார். இன்னும் அழுத்தம் திருத்தமான வார்த்தைகளால் கிறிஸ்தவர்களை புனித யாக்கோபு இவ்வாறு பணிக்கின்றார். "என் சகோதர சகோதரிகளே, தம்மிடம் நம்பிக்கை உண்டு எனச்சொல்லும் ஒருவர் அதைச் செயல்களிலே காட்டாவிட்டால், அதனால் பயன் என்ன? அந்த நம்பிக்கை அவரை மீட்க முடியுமா? ஒரு சகோதரன் அல்லது ஒரு சகோதரி போதிய உடையும் அன்றாட உணவும் இல்லாதிருக்கும்போது அவர்கள் உடலுக்குத் தேவையானவை எவற்றையும் கொடாமல் உங்களுள் ஒருவர் அவர்களைப் பார்த்து நலமே சென்று வாருங்கள். குளிர்காய்ந்து கொள்ளுங்கள், பசியாற்றிக்கொள்ளுங்கள் என்பாரென்றால் அதனால் பயன் என்ன? அதைப்போலவே, நம்பிக்கையும் செயல் வடிவம் பெறாவிட்டால் தன்னிலே உயிர்ரற்றதாயிருக்கும் ஆனால், ஒருவரிடம் நம்பிக்கை இருப்பதுபோல இன்னொருவரிடம் செயல்கள் இருக்கின்றன என யாராவது சொல்லலாம். அதற்கு பதில் செயல்கள் இன்றி எவ்வாறு நம்பிக்கை கொண்டிருக்க முடியும் எனக் காட்டுங்கள், நானோ என் செயல்களின் அடிப்படையில் நான் கொண்டுள்ள நம்பிக்கையை உங்களுக்குக் காட்டுகிறேன்" (யாக் 2:14-18).

அன்பில்லா நம்பிக்கை எத்தகைய பலனையும் தருவதில்லை. அதேபோல நம்பிக்கையில்லா அன்பு எப்போதும் சந்தேகிக்கத்தக்க ஒரு உணர்வாகவே இருக்கும். நம்பிக்கையும் அன்பும் ஒவ்வொன்றையும் அதனதன் பாதையில் செல்ல அனுமதிக்கும். அதேவேளையில் ஒன்று மற்றதற்கு தேவையாய் இருக்கின்றது. தனிமையிலும், ஒதுக்கப்பட்டும் ஓரம் கட்டப்பட்டும் இருப்போர்க்கு பல கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்வையே அர்ப்பணிக்கிறார்கள். இத்தகையவர்கள்தான் நமது கவனத்தை ஈர்ப்பவர்கள். நமது உதவி இவர்களுக்குத்தான் முதன் முதலாகத் தேவைப்படுகிறது. ஏனெனில் அவர்களில்தான் கிறிஸ்துவின் முகம் பிரதிபலிக்கின்றது. நமது அன்பை வேண்டி நிற்பவர்களிடம்தான் நம்பிக்கையின் வழியாக நாம் உயிர்த்த இயேசுவின் முகத்தைக் கண்டுகொள்ளலாம். "மிகச்சிறியோராகிய என் சகோதர சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள்." (மத் 25:40) இந்த வார்த்தைகள் நாம் மறக்கக் கூடாத ஒரு எச்சரிக்கையாகவும் கடவுள் நம்மை பாதுகாக்கவும் அன்பை நாம் அடுத்தவருக்கு திரும்பச் செலுத்த அழைப்பாகவும் இருக்கின்றன. நமது வாழ்க்கைப் பயணத்தில் அவர் நமது அயலானாக மாறும்போது அவருக்கு உதவுவதற்கு நம்மை உந்தித்தள்ளுவது அவரது அன்பே. நீதி குடிகொண்டிருக்கும் புதிய விண்ணுலகும் புதிய மண்ணுலகும் வரும் (2பேது 3:13, தி.வெ 21:1) என நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் இவ்வேளையில் நம்பிக்கையால் உந்தப்பட்டு உலகில் நமது கடமைகளை எதிர்நோக்குடன் செயல்படுத்துவோமாக.

14. தனது வாழ்வின் இறுதிக்கு வந்தபோது பவுலடியார் தனது சீடரான திமொத்தேயு சிறுவராயிருந்தபோது இருந்த இதே மனநிலையோடு (காண் 2திமொ 3:15) நம்பிக்கையை நாடித்தேடச் சொல்கிறார் (காண் 2திமொ 2:22). நம்பிக்கையில் சோம்பேறிகளாகிவிடக்கூடாது என்னும் அவரது அழைப்புக்கு நாம் செவிமடுப்போம். கடவுள் நமக்கென ஆற்றும் அளப்பரிய செயல்களைப் புதிது புதிதாய்க் காண அது நமக்கு உதவிடும் வாழ்நாள் துணையாளன் அது. இன்றைய வரலாற்றுக் காலகட்டத்தின் அடையாளங்களைக் கருத்தில்கொண்டு நம்பிக்கை, நம் ஒவ்வொருவரையும் இந்த உலகில் உயிர்த்த இயேசுவின் உயிருள்ள வாழும் அடையாளங்களாக மாறப் பணிக்கிறது. ஆண்டவரின் வார்த்தையால் உள்ளத்திலும், இதயத்திலும் உள்ளொளிபெற்று அர்த்தமுள்ள நிலையான வாழ்வின்மீது பலருடைய விருப்பத்தை அவர்களின் மனத்திலும் இதயத்திலும் தூண்டுவதுமே இன்றைய உலகின் முக்கியமான தேவையாக உள்ளன.

ஆண்டவருடைய வார்த்தை உங்களிடையே விரைந்து பரவிப்புகழ்பெற்றது (2தெ 3:1). இந்த நம்பிக்கையின் ஆண்டு நமதாண்டவர் கிறிஸ்துவோடு உள்ள உறவை அதிகப்படுத்தி உறுதிப்படுத்துவதாக. ஏனெனில் அவரில்தான் எதிர்காலத்தைப்பற்றிய உறுதிப்பாடும் உண்மையான நிலையான அன்புக்கான உத்தரவாதமும் உள்ளது. புனித பேதுருவின் வார்த்தைகள் நம்பிக்கையின்மீது ஒரு இறுதி வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. இப்போது சிறிது காலம் நீங்கள் பல்வகைச் சோதனைகளால் துயருறவேண்டியிருப்பினும் அந்நாளிலே பேருவகை கொள்வீர்கள். அழியக்கூடிய பொன் நெருப்பினால் புடமிடப்படுகிறது. அதைவிட விலையுயர்ந்த உங்கள் நம்பிக்கையும் மெய்ப்பிக்கப்படவே துயருறுகிறீர்கள். இயேசுக் கிறிஸ்து வெளிப்படும்போது அந்த நம்பிக்கை உங்களுக்குப் புகழும் மாண்பும் பெருமையும் தருவதாய் விளங்கும். நீங்கள் அவரைப் பார்த்ததில்லை, எனினும் அவர்மீது அன்பு செலுத்துகிறீர்கள். இப்போதும் நீங்கள் அவரைக் கண்டதில்லை, எனினும் நம்பிக்கைகொண்டு சொல்லொண்ணா, ஒப்பற்ற மகிழ்ச்சியடைந்து பேருவகைகொள்கிறீர்கள். இவ்வாறு உங்கள் நம்பிக்கையின் குறிக்கோளான ஆன்ம மீட்பையும் பெறுகிறீர்கள் (பேது 1:6-9). கிறிஸ்தவர்களுடைய வாழ்வு மகிழ்வான அனுபவத்தையும், துயரமானதையும் அறிந்திருக்கிறது. எத்தனை புனிதர்கள் தனிமையில் வாழ்ந்திருக்கிறார்கள்! எத்தனை விசுவாசிகள் நமது காலத்திலும்கூட இறைவனின் ஆறுதலான வார்த்தைகளைக் கேட்க விரும்பியும் இறைவனின் மௌனத்தால் சோதிக்கப்படுகின்றனர்! வாழ்வின் சோதனைகள் சிலுவையின் பொருளைப் புரிந்துகொள்ள உதவுவதோடு இயேசுவின் துன்பங்களில் பங்கெடுக்கவும் நமக்கு உதவுகின்றன (காண கொலோ 1:24). இந்தச் சோதனைகள் நம்பிக்கை நமக்கு வழிகாட்டுகின்ற மகிழ்ச்சிக்கும் எதிர்நோக்குக்கும் முன்னோடிகள். "நான் வலுவற்றிருக்கும்போது வல்லமை பெற்றவனாக இருக்கிறேன்" (2கொரி 12:10). நமதாண்டவர் இயேசு தீமையின்மீதும் சாவின்மீதும் வெற்றிகொண்டுவிட்டார் என உறுதியாக நம்புகிறோம். இத்தகைய அசைக்க முடியாத உறுதியோடு நம்மையே நாம் அவரிடம் கையளிப்போம். நம்மிடையே வாழ்கின்ற அவர் தீயோனின் அதிகாரத்தை மேற்கொள்கிறார் (காண் லூர்க் 11:20). அவரின் இரக்கத்தின் காணக்கூடிய சமூகமான திருச்சபை தந்தையோடு ஒப்புரவாவதின் அடையாளமாக இயேசுவோடு இணைந்துள்ளது.

நம்பியதால் பேறுபெற்றவர் (லூக் 1:45) எனப் புகழப்பட்ட இறைவனின் அன்னையிடம் இந்த அருளின் காலத்தை ஒப்படைப்போம்.

உரோமையில், புனித பேதுரு ஆலயத்தில் நமது ஆட்சியின் ஏழாம் ஆண்டாகிய 2011ம் ஆண்டு அக்டோபர் 11ம் தேதி வழங்கப்பட்டது. - முற்றும் -

## 'திருத்தந்தை' என்ற சொல்லின் வரலாறு

போப் (Pope) என்ற சொல், pappas என்ற கிரேக்க சொல்லிலிருந்து பிறந்ததாகும். இலத்தீனில் papa எனப்படும் இச்சொல்லுக்கு, 'தந்தை' என்று அர்த்தம். தொடக்ககாலக் கிறிஸ்தவத்தில் குறிப்பாக கீழைநாடுகளில் அனைத்து ஆயர்களும்,, மூத்த குருக்களும் போப் என்றே அழைக்கப்பட்டனர். அலெக்சாந்திரியாவின் பேராயராகிய எகிப்தின் முதுபெரும் தலைவரே முதலில் போப் என்று அழைக்கப்பட்டார்.

நற்செய்தியாளர் புனித மாற்கு உருவாக்கிய அலெக்சாந்திரியத் திருஆட்சிப்பீடத்தின் பேராயர் பதவிக்குரிய பெயராக இது இருந்து வந்தது. 3ம் நூற்றாண்டில் கி. பி 232ம் ஆண்டு முதல் கி. பி 249ம் ஆண்டுவரை அலெக்சாந்திரியாவின் முதுபெரும் தலைவராக இருந்த ஹெராகிளேயுஸ் அவர்களே முதன்முதலாக 'தந்தை ஹெராகிளேயுஸ்' என அழைக்கப்பட்டார். எனவே எகிப்தைப் பூர்வீகமாகக் கொண்ட கிறிஸ்தவர்களான காப்டிக் கிறிஸ்தவர்களின் ஆன்மீகத் தலைவரே முதலில் போப் என்று அழைக்கப்பட்டு வந்தார்.

பின்னர் 6ம் நூற்றாண்டில் கி.பி 523ம் ஆண்டு முதல் கி.பி 526ம் ஆண்டு வரை பதவியிலிருந்த உரோமன் கத்தோலிக்க ஆயராகிய முதலாம் ஜோன் தான், போப் அதாவது தந்தை என்ற அடைமொழியை முதலில் பயன்படுத்தினார். அதன் பின்னர் உரோமன் கத்தோலிக்கத் திருச்சபைத் தலைவர்கள் திருத்தந்தை என்ற அழைக்கப்பட்டு வருகின்றனர். உரோமன் கத்தோலிக்கத் திருத்தந்தை தூய பேதுருவின் வழிவருபவர் என்ற முறையில், அனைத்து ஆயர்களுக்கும், நம்பிக்கையாளர்களின் கூட்டத்திற்கும் இடையே நிலவும் ஒற்றுமையின் நிலையான காணக்கூடிய, ஊற்றாகவும், அடிப்படையாகவும் விளங்குகிறார் என இரண்டாம் வத்திக்கான் சங்கம் குறிப்பிடுகின்றது. (லூமென் ஜென்ஸியும் இல. 23)

கடவுள் ஒருவரே தூய்மையானவர். இவர் மனித உருவெடுத்து, தொடர்ந்து மனிதர்களோடு இருக்க விரும்பி, தமது திரு அவையை உருவாக்கி, அதன் முதல் தலைவராக தமது திருத்தூதர் பேதுருவை நியமித்தார். மனித உருவெடுத்த நம் ஆண்டவர் இயேசு தமது விண்ணரசின் திறவுகோல்களை பேதுருவிடம் அளித்தார். அத்தோடு மண்ணுலகில் அவரின் பிரதிநிதியாக ஆளும் அதிகாரத்தையும் பேதுருவிடம் அளித்தார் (மத் 16:18). எனவே, கடவுளின் மண்ணுலகப் பிரதிநிதியாகிய புனித பேதுருவையும் அவரின் வழிவருபவர்களையும் மதித்துப் போற்றுவது கடவுளையே மதித்துப் போற்றுவதாகும். எனவே புனித பேதுருவின் வழிவருபவரை 'ஹோலி.:.பாதர்' – 'திருத்தந்தை' என திருச்சபை அழைக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

# இலங்கையை கிறிஸ்தவ நாடாக மாற்றும் முயற்சியில் 400 நிறுவனங்கள் செயற்படுகின்றனவாம்!

### இப்படிச் சொல்கிறார் பொதுபலசேனாவின் தலைவரான பௌத்த தேரர்

இலங்கையில் பதிவுசெய்யப்பட்டுள்ள 400க்கும் மேற்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்ளன. இவை பாலர் பாடசாலை, ஆங்கில வகுப்பு, புண்ணிய கருமங்கள் ஆகியவற்றின் பேரில் அப்பாவி சிங்களவர்களை கிறிஸ்தவ மதத்துக்குள் உள்வாங்கி இந்நாட்டை ஒரு கிறிஸ்தவ நாடாக மாற்றியமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன என்று பொதுபலசேனாவின் தலைவர் கிரம விமல ஜோதி தேரர் தெரிவித்தார்.

கண்டி மத்திய சந்தைக்கு முன்பாக கடந்த 17.03.2013 அன்று இடம்பெற்ற ஹலால் வெற்றிக்கொண்டாட்டக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில், 400 வருடங்களுக்கு மேலாக நாம் வெளிநாட்டு சக்திகளால் ஆக்கிரமிக்கப்பட்டு வந்துள்ளோம். அப்போது நாம் எதிர்நோக்கிய சவால்கள் எண்ணிலடங்காது. சிங்கள பௌத்த மக்கள் அன்று முதல் உயிர்த் தியாகம் செய்தே இந்நாட்டை பாதுகாத்து வந்தனர்.

தற்போது எம் நாட்டுக்கு மீண்டும் பல்வேறு வடிவில் சவால்களும் ஆக்கிரமிப்புக்களும் வந்த வண்ணம் உள்ளன. 400க்கும் மேற்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கையில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அவை கிறிஸ்தவ சமயத்தை பரப்பும் நோக்கில் செயற்படுகின்றன. அவற்றில் அநேகமானவை பாலர் பாடசாலை, ஆங்கில வகுப்பு, புண்ணிய கருமங்கள் மற்றும் பலதரப்பட்ட உதவிகள் என்ற பெயரில் இயங்குகின்றன. அப்பாவி பௌத்த மக்களை தமது சமயத்திற்கு அவை உள்வாங்கி இலங்கையை ஒரு கிறிஸ்தவ நாடாக மாற்ற முயற்சிக்கின்றன.

அதேநேரம் இஸ்லாமிய அடிப்படைவாதிகள் பௌத்த இளைஞர், யுவதிகளை பல வழிகளில் மதமாற்றம் செய்து இன்னும் 50 வருடங்களில் இலங்கையை இஸ்லாமிய நாடாக மாற்ற விசேட திட்டம் ஒன்றையும் அமுல்படுத்தி வருகின்றனர்.

எங்களுக்கு கிடைத்துள்ள தகவல்களின்படி முஸ்லிம்களது வர்த்தக நிலையங்களில் சிங்கள யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கி அவர்களை பல வழிகளில் மத மாற்றம் செய்கின்றனர். தயவுசெய்து இதனை நிறுத்துமாறு கேட்கின்றேன். இல்லாதவிடத்து சிங்கள யுவதிகளை முஸ்லிம்களது வர்த்தக நிலையங்களுக்கு வேலைக்கு அனுப்புவதை நிறுத்த வேண்டி வரும். நாங்கள் இந்த அபாயகரமான நிலையை உணர்ந்து 2012 மே மாதம் முதல் நடத்திய போராட்டத்தின் பாரிய வெற்றிதான் ஹலால் வெற்றியாகும்.

### சர்வதேச ரீதியில் தமிழர் பிரச்சினை கலந்துரையாடப்படும் நேரத்தில்

# முஸ்லிம் தலைமைகள் மௌனம் காப்பது ஏன்?

தமிழ் பேசும் மக்களின் இன நெருக்கடியான தீர்வுப் பிரச்சினை சர்வதேசத்தால் தீவிரமாக கலந்துரையாடப்படுகின்ற வேளையில்கூட முஸ்லிம் தலைவர்கள் மௌனம் சாதித்துக்கொண்டிருப்பது கவலை தருகின்ற விடயமே என திருகோணமலை மறைமாவட்ட ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் கருத்துத் தெரிவிக்கையில், இலங்கைத் தமிழ்ப் பேசும் மக்களின் இனப்பிரச்சினையும் அது சார்பான தீர்வு விவகாரமும் சர்வதேசமளவில் விஸ்வரூபம் எடுத்துள்ள நிலையிலும், ஜெனிவா மனித உரிமை பேரவை உட்பட பேசப்பட்டு வருகின்ற வேளையில்கூட முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தலைவர்கள் இன்னும் அமைதி காத்துக்கொண்டிருப்பது அனைவருக்கும் கவலை தருகின்ற விடயமாகும்.

இருந்தபோதிலும் தமிழர்களுக்கென்று ஒரு தீர்வு வருகின்ற வேளையில் முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளும் சமத்துவமும் காக்கப்பட வேண்டும். இவற்றிற்கு உரிய முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென்பதில் தமிழ் மக்களின் தலைவர்கள் அக்கறை காட்டவேண்டும். அவ்வாறு இல்லாத ஒரு தீர்வு முழுமையான சமத்துவம் கொண்டதாக இருக்க முடியாது.

மாகாண சபைகளைப் பொறுத்தவரை இன்று அரசாங்கத்திடம் அடகுவைக்கப்பட்ட நிலையே காணப்படுகிறது. திவிநெகும சட்டமூலம் மாகாண சபைகளின் அதிகாரங்களை மீண்டும் மத்திய அரசுக்கு கொண்டுசெல்லும் ஒரு நிலையையே உருவாக்கியுள்ளது.

ஜெனிவா மனித உரிமை பேரவையின் மூலம் நல்லதொரு முடிவும் தீர்வும் வரவேண்டுமென்பதையே



தமிழ் மக்கள் அக்கறையோடு பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

முஸ்லிம் மக்களின் பிரச்சினைக்கும் ஏக காலத்தில் தீர்வு காணும்போதுதான் அத்தீர்வு முழுமையான தீர்வாக இருக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## யாழில் மாதா சுருபம் சேதம்

யாழ். மணியந்தோட்டம் இறங்குதுறை வேளாங்கன்னி மாதா சுருபம் இனந்தெரியாதோரால் சேதமாக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் கடந்த 18.03.2013 அன்று நள்ளிரவு இடம்பெற்றுள்ளது.

இந்த மாதா சுருபம் சேதமாக்கப்பட்டமை தொடர்பில் கிராமசேவை அலுவலகம் மற்றும் யாழ். பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

1989ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட இந்த மாதா சுருபம் கடந்த யுத்தத்தின்போது அழிக்கப்பட்டிருந்தது. பின்னர் அந்தப் பகுதியில் மக்கள் மீள்குடியேற்றப்பட்ட பின்னர் மீண்டும் மாதா சுருபம் மக்களால் வைக்கப்பட்டது என அந்தப் பகுதி மக்கள் கூறினர்.

## 'காவியநாயகன்' திருப்பாடுகளின் காட்சி

யாழ் திருமறைக்கலா மன்றம் தயாரித்து வழங்கிய மாபெரும் அரங்க ஆற்றுகை நிகழ்வான 'காவிய நாயகன்' திருப்பாடுகளின் காட்சி கடந்த மார்ச் மாதம் 21.03.2013 ஆம் திகதி முதல் 24.03.2013 வரை நான்கு நாள்கள் இல. 238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக்கலாமன்ற அரங்கில் நடைபெற்றது.

தினமும் மாலை 6.45 மணிக்கு ஆரம்பமாகிய 'காவிய நாயகன்' நாடக ஆற்றுகை வெள்ளிக்கிழமை மட்டும் மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகியது.

திருமறைக் கலாமன்ற இயக்குனர் நீ. மரியசேவியர் அடிகளாரின் எழுத்துருவில் உருவாகிய 'காவிய நாயகன்' ஆற்றுகைக்கான நெறியாள்கையை திருமறைக்கலாமன்றத்தின் பிரதி இயக்குனர் யோ. யோண்சன் ராஜ்குமார் மேற்கொண்டிருந்தார். மனிதம் என்ற தேடலுக்கு பதில் தரும் வகையில் இறைமகன் இயேசுவின் வாழ்க்கை அமைந்துள்ளது. அவர் வாழ்வின் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும், கட்டத்தையும் சவாலையும் எவ்வாறு அணுகி மனிதத்தின் உச்சமாகவும் எடுத்துக்காட்டாகவும் விளங்கினார் என்பதைக் கூற முனைகின்றது 'காவிய நாயகன்' ஆற்றுகை.

## புதிய பாப்பரசருக்கு ஜனாதிபதி வாழ்த்து

புதிய பாப்பரசராகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் வாழ்த்துச் செய்தியை அனுப்பியுள்ளார்.

ஜனாதிபதியின் வாழ்த்துச் செய்தியுடன் சமூக, சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா, பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா, பிரதியமைச்சர் சரத்குமார குணரட்ன ஆகியோர் வத்திக்கானுக்குச் சென்றனர்.

சமூக மற்றும் பொருளாதார ரீதியில் உலகம் பல்வேறு சவால்களுக்கு முகம்கொடுத்துள்ள இந்த வேளையில், கத்தோலிக்க சபையின் உத்தமமான தலைவராக நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதானது சமாதானம் மற்றும் நல்லிணக்கம் ஆகியவற்றை வளர்ப்பதற்கு சிறந்த சந்தர்ப்பமாக அமையும் என்று ஜனாதிபதி, புதிய பாப்பரசருக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை பலவருடங்களாக சர்வதேச ரீதியான மத தொடர்புகளை மேம்படுத்தி செயற்பட்டு வருகின்றது. அந்த உறவுகளை மேலும் பலப்படுத்துவதற்கு சிறந்ததொரு வாய்ப்பு உருவாகியிருப்பதாகவும் ஜனாதிபதி தமது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## ஆயர் கிங்ஸ்லியின் சேவையைப் பாராட்டி முஸ்லிம் தலைவர்கள் பாராட்டு விழா

மட்டக்களப்பு காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தினால் மட்டக்களப்பில் மறைமாவட்ட ஆயராகக் கடமையாற்றி தற்போது திருகோணமலை மறை மாவட்ட ஆயர் பொறுப்பை ஏற்றிருக்கும் ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாமிப்பிள்ளை ஆண்டகையின் சேவையைப் பாராட்டி கௌரவிக்கும் வைபவம் கடந்த 24.02.2013 அன்று காத்தான்குடியில் நடைபெற்றது.

சம்மேளனத்தின் பிரதித்தலைவர் சட்டத்தரணி ஏ. எல். அப்துல் ஜவாதினால் நினைவுச் சின்னம் வழங்கப்பட்டதுடன் மட்டக்களப்பு மாவட்ட சமாதானத்திற்கான சமயங்களின் பேரவை உறுப்பினர். கே. எம். கலீலினால் பொன்னாடையும் போர்த்தப்பட்டது.

## மன்னார் மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழுவின் தவக்காலத் தியானங்கள்

மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஆணைக் குழுவினால் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த தவக்காலத் தியானமானது தமிழ் நாட்டிலிருந்து வருகைதந்த புதுவாழ்வுக் குழுவினரால் நடாத்தப்பட்டது. இத்தியானமானது ஏறத்தாழ மறைமாவட்டத்தின் சகல பங்குகளிலிலும் கடந்த மார்ச் 1ம் திகதி தொடக்கம் 21ம் திகதி வரை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு அன்பியப்பணியாளர்கள், முதியோர் சங்கத்தினர், தன்னார்வப் பணியாளர்கள், பெற்றோர், இளைஞர்கள், சிறுவர்கள் என்று விசேட தியானங்களும் இடம்பெற்றன. இத்தியானங்களின் ஊடாக பல தரப்பினரும் ஆன்மீக ஊக்கம் பெற்றனர். தவக்காலத்திலே மனம்மாற்றம் பெற்றவர்களாக சிறந்த முறையில் பாவசங்கீர்த்தன அருட்சாதனத்தையும் பெற்றுக்கொண்டனர்.

பங்குகள்தோறும் நடாத்தப்பட்ட தவக்காலத் தியானங்களின் விபரங்கள் வருமாறு :

01.03.2013 வங்காலை - மாலை 5:00 - 8:00 மணி வரை
02.03.2013 தாழ்வுபாடு - காலை 8:00 - மா 5:00 மணி வரை
03.03.2013 தாழ்வுபாடு - காலை 9:00 – 12:00
ஆட்காட்டிவெளி - மாலை 5:00 - 8:00
04.03.2013 தேவன்பிட்டி - மாலை 3:30 - 7:00 மணி வரை
05.03.2013 அடம்பன் - மாலை 4:00 - 7:00 மணி வரை
06.03.2013 வேப்பங்குளம் - மாலை 5:00 - 8:00 மணி வரை
07.03.2013 ஓமந்தை - மாலை 5:00 - 8:00 மணி வரை
08.03.2013 இலுப்பைக்குளம் - மாலை 5:00 - 8:00மணி வரை
09.03.2013 வவுனியா - காலை 9:00 - மா 6:00 மணி வரை
10.03.2013 முருங்கன் காலை 7:00 - 11:00
மன்னார் - மாலை 4:30 - 8:00 மணி வரை
11.03.2013 நானாட்டான் - மாலை 4:00 - 7:00 மணி வரை
12.03.2013 விடத்தல்தீவு மாலை - 4:00 - 7:00 மணி வரை
13.03.2013 பள்ளிமுனை - மாலை 5:00 - 8:00 மணி வரை
14.03.2013 தோட்டவெளி - மாலை 5:00 - 8:00 மணி வரை
15.03.2013 மடு இளைஞர்களுக்கான தியானம் -
மாலை 4:00 - 7:00 மணி வரை
16.03.2013 மடு இளைஞர்களுக்கான தியானம்
காலை 8:00 - 5:00 மணி வரை
17.03.2013 மடு (இ.தி) காலை 8:00 - 5:00 மணி
பண்டிவிரிச்சான் மாலை 4:00 - 7:00 மணிவரை
18.03.2013 குஞ்சுக்குளம் - மாலை 4:00 - 8:00 மணி வரை
19.03.2013 செட்டிகுளம் - மாலை 4:00 - 8:00 மணி வரை
20.03.2013 சிறுதோப்பு - மாலை 2:30 - 5:00 மணி வரை
21.03.2013 பேசாலை - மாலை 5:00 - 8:00 மணி வரை
22.03.2013 அளவக்கை - மாலை 2:00 - 4:30 மணி
அரிப்பு - மாலை 5:30 - 8:30 மணி வரை
23.03.2013 தலைமன்னார் - மாலை 4:00 - 8:00 மணி வரை
24.03.2013 தோட்டவெளி - அன்பிய பணியாளர்களுக்கு
காலை 9:00 - 3:30 மணி வரை
25.03.2013 காத்தான்குளம் - மாலை 5:00 - 8:00 மணி வரை

### தியானப் பதிவுகள் சில











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இயேசுவின் பாடுகளை உயிரோட்டமாகச் சித்தரித்த தவக்கால அரங்க ஆற்றுகை!

# உயிலங்குளப் பங்கில் திருப்பாடுகளின் காட்சி

ஈழத்தின் கத்தோலிக்க திருமறை வளர்ச்சியில் மன்னார் மறைமாவட்ட உயிலங்குளம் பங்கு பல சிறப்பான வரலாற்றுப் பதிவுகளைக் கொண்டுள்ளது. இப்பங்கில் பணியாற்றிய பங்குத் தந்தையர் பலரும் பல அரிய மறைவளர்ச்சிப் பணிகளை ஆற்றியிருக்கிறார்கள். 1973இல் பணிபுரிந்த பங்குத்தந்தை தியோஜினஸ் அ.ம.தி அடிகளார் "சாவை வென்ற சத்தியன்" எனும் திருப்பாடுகளின் காட்சியை பங்கு இளைஞர்களைக் கொண்டு நிகழ்த்திப் பெரும் பாராட்டைப் பெற்றார். அதன்பின் கடந்த 40 ஆண்டு காலத்தில் இதை நடத்தச் சமூகச் சூழமைவு இடம்தரவில்லை. தற்போதைய பங்குத்தந்தை அருட்பணி. பிரான்சிஸ் மரி டி கோல் அடிகளார் கடந்த வருடத்தில் பல சிறப்பு ஆன்மீகச் செயற்பாடுகளை மேற்கொண்டு வெற்றிகண்டார்.

இறைவனில் கொண்ட நம்பிக்கையின் பயனாகப் பெற்ற நன்மைகளால் துணிவுபெற்ற அவர், நம்பிக்கை ஆண்டாகிய இவ்வாண்டில் பல சமய சமூக மறுமலர்ச்சி இலக்குகளைக் கருத்திற்கொண்டு தவக்கால சிறப்புச் செயற்பாடாக, பங்கில் திருப்பாடுகளின் காட்சியை நடத்த எண்ணங்கொண்டார். பங்கு அருட்பணிச் சபையும், இறைமக்களும் இந்த எண்ணத்தை இறைத்திட்டமாக ஏற்று ஒருங்கிணைந்து பங்குத்தந்தையோடு கைகோர்த்து நின்றனர். இதன் விளைவாக கடந்த 17.03.2013 ஞாயிற்றுக்கிழமை மாலையில் மணற்குளம் விளையாட்டு முன்றலில் அருள் ததும்பும் வகையில் "போர்க்களத்தில் புன்னகை" எனும் பெயரில் இயேசுவின் திருப்பாடுகளின் காட்சி மலர் விரித்தது. பங்குமக்கள் திருமுழுக்கால் பெற்ற நற்செய்தி அறிவிப்புப் பணியை ஆற்ற, இயேசுவின் பாடுகள், சிலுவைச்சாவு, மாட்சிமிகு உயிர்ப்பு ஆகிய பாஸ்கா மறைநிகழ்ச்சியை மக்கள் மனதில் பதியவைத்து, வாழ்வாக்கும் ஊடகமாக இது நடத்தப்பட்டது.

இதைக் காண்பதற்கு விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று, பெருந்திரளான மக்கள் குழுமியிருந்தனர். மறைமாவட்ட ஆயர் பேரருட்பெருந்தகை இராயப்பு யோசேப்பு ஆண்டகை, குருமுதல்வர், அருட்பணியாளர்கள், அருட்சகோதர, சகோதரிகள், இறைமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச, அரசசார்பற்ற நிறுவன மேலாளர்கள், சகோதர சமயப் பெரியார்கள், அன்பர்கள் என பல தரப்பினரும் வருகை தந்திருந்தனர்.

இத்திருக்கலை நிகழ்வுக்கு முன்தயாரிப்பாக சில முன்நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. அழைக்கப்பட்ட முதன்மையாளரான மன்னார் ஆயர் அவர்களும், பேராளர்களும் நிகழ்வுக்குப் பொறுப்புடையோரால் வரவேற்று அரங்குக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இவ்வேளையில் வரவேற்பு நடனம் இடம்பெற்றது. நிகழ்வுச்சுடர் ஏற்றப்பட்டு மறையாசிரியர்களால் தொடக்க வழிபாடு செய்யப்பட்டது. பின் பங்குத்தந்தை அவர்களால் வரவேற்புரை நிகழ்வின் இலக்குகள் பற்றிய செய்திகளுடன் வழங்கப்பட்டது. பின் ஆயர் அவர்களால் ஆசியுரையும், திருப்பாடுகளின் நெறியாளர் கலாபூசணம் செ. மாசிலாமணி அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கலும் இடம்பெற்றது. பின் பார்வையாளர் அமைதி காக்கும் வண்ணம் கட்டளை உரையை கிராம அலுவலர் விடுத்தார்.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## உயிலங்குளம் திருப்பாடுகளின் காட்சிப் பதிவுகள்



## விசுவாசம் என்னும் தோட்டத்தில் மலர்ந்த

# மன்னார் மறைமாவட்டம்

அமெரிக்காவில் இருந்து எஸ். ஞானக்கோன் மார்க்

அன்னையாம் திருச்சபை ஒவ்வொரு புதிய வருடமும் புதிய புதிய அறைகூவலை விடுத்து வருகின்றது. தன்னுடைய இறைமக்களுக்கு அன்பிய ஆண்டு, இறைவார்த்தை ஆண்டு , நற்கருணை ஆண்டு, இளைஞர் ஆண்டு என்று பல கருப்பொருட்களை மையப்படுத்தி ஒவ்வோர் வருடமும் திட்டங்கள் தீட்டப்பட்டு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

2013ம் ஆண்டை முன்னாள் திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர் விசுவாசத்தின் ஆண்டு என்று அறிவித்திருக்கிறார். இது எம் அனைவருக்கும் மகிழ்ச்சியை அளிக்கிறது. இந்த விசுவாச ஆண்டின் அறிவித்தல் நமது மன்னார் மறைமாவட்டத்திற்கு பொருத்தமாய் அமைகின்றது. நாம் பிறந்தோம், வாழ்ந்தோம், ஒருநாள் இறந்து போவோம். ஆனால் இந்த விசுவாசத்தால் நாம், நமது குடும்பம், நமது பங்கு, நமது மறைமாவட்டம் அடைந்த நன்மைகள் பற்றி நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். "யானையின் பலம் தும்பிக்கையில், மனிதனின் பலம் நம்பிக்கையில்" என்பார்கள். ஆனால் இறைவனால் படைக்கப்பட்ட மனிதனுக்கு நம்பிக்கை என்பது அவனுடைய விசுவாசம்தான். அதாவது இறை நம்பிக்கை! நம்மிடம் விசுவாசம் இருந்தால் நாம் எதையும் சாதித்து விடலாம்.

நமது மறைமாவட்டத்தை எடுத்துக்கொண்டால் நாம் எல்லோரும் கண்டதும் அறிந்ததுமான விசுவாசத்தின் தந்தையாக நம் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை விளங்குகின்றார். அவருடைய ஆழம் நிறைந்த விசுவாசம், கருத்து நிறைந்த மறையுரைகள், ஒவ்வொரு வருடமும் அவர் மக்களுக்கு எழுதும் திருமடல்களில் அவருடைய விசுவாச ஆழம் வெளிப்பட்டு நிற்கின்றது. இன்னும் நம்முடைய தமிழ் மக்களுக்காக தன்னை அர்ப்பணித்து வருகின்ற தியாக குணம் இவையெல்லாம் போற்றுதற்குரியன.

நமது பங்குத்தந்தையர்களின் மேய்ப்புப்பணி ஆர்வம், பங்குகளில் செயல்பட்டு வருகின்ற ஆலய அருட்பணிப் பேரவை, விசுவாசத்திற்காக தங்களை அர்ப்பணித்து வருகின்ற மறையாசிரியர்கள், மாதா கூட்டம், மரியாயின் சேனை, ஏழை எளியவர்களுக்காக தங்களை அர்ப்பணித்து வருகின்ற வின்சன் டி போல் சபையினர், ஆலயங்களில் நடைபெறுகின்ற வழிபாடுகளை திறம்பட நடத்தி வருகின்ற வழிபாட்டுக் குழுவினர், இறை இரக்க பக்தி சபையினர், பாடகர் குழாம் இன்னும் பங்குகளில் விசுவாசத்திற்கு முன்மாதிரிகையாக விளங்கும் குடும்பங்கள் இவர்களுடைய தியாகங்களை நினைத்து இவ் விசுவாச ஆண்டிலே எமது நன்றியையும் பாராட்டையும் செபங்களையும் கூறி நிற்கின்றோம்.

இதுமட்டுமல்லாது பொருளாதாரத் தேவையில் உள்ளவர்களுக்கு உதவிபுரியும் வாழ்வோதயம், குடும்பநலப் பணிகளையும், திருமணம் முடிக்க இருக்கின்ற இளைஞர், யுவதிகளுக்கு அறிவூட்டல் பணிகளையும் செய்கின்ற குடும்பப் பணியக நிர்வாகம், ஏழை எளிய மக்களின் துயர்துடைக்கின்ற மார் நிறுவனம், மன்னார் மறைமாவட்டத்தில் விசுவாசத்திற்காக நடைபெறுகின்ற அனைத்து நிகழ்ச்சிகளையும் உலகில் வாழும் சகல தமிழ் கத்தோலிக்க மக்களுக்கும் படம் பிடித்து காட்டி வருகின்ற மன்னா பத்திரிகை நிறுவனம், மறைக்கல்வி நிலையம், அன்பியப் பணியகம், இளைஞர் பணிக்குழு, தோட்டவெளி தியான இல்லம், தவக்கால யாத்திரைகள், மடு திருவிழாக்கள் போன்ற அனைத்துமே விசுவாச வாழ்வை ஆழப்படுத்தும் நோக்கோடு இயங்கிவருகின்றன.

எம் மக்கள் போரினால் உயிரை இழந்து, உறவுகளை இழந்து, உடமையை இழந்து, அங்கவீனமாக்கப்பட்டார்கள். ஆனால் நாம் எமது விசுவாசத்தை இழக்கவில்லை. எல்லா புகழும் இறைவனுக்கு நன்றி.


# விடத்தல்தீவுப் பங்கிற்கு

## உழவு இயந்திரம், தண்ணீர் பவுசர், இழுவைப் பெட்டி அன்பளிப்பு

விடத்தல்தீவுப் பங்கிற்கு வின்சன் டி போல் சபையினரால் உழவு இயந்திரம், தண்ணீர் பவுசர், இழுவைப் பெட்டி ஆகியவை அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன. இவற்றின் பெறுமதி இருபது இலட்சத்து, எண்பத்தியாறாயிரத்தி, நூறு ரூபா (ரூபா 2,086,100.00) ஆகும். பிரான்ஸ் நாட்டில் உள்ள பாரிஸ் நகரில் தலைமையகத்தைக் கொண்டு இயங்கும் புனித வின்சன்ட் டி போல் தாய்ச் சபையினர் இலங்கைத் தேசிய வின்சன் டி போல் சபையின் ஊடாக இதை வழங்கினர். மன்னார் மறைமாவட்ட வின்சன் டி போல் சபையின் மத்திய குழுவினர் கடந்த பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி இவற்றை சம்பிரதாயபூர்வமாக விடத்தல்தீவுப் பங்கிற்கு கையளித்தனர்.

இந்த உதவியைப் பெறுவதற்கான முயற்சிகள் முன்னாள் பங்குத்தந்தை அருட்திரு. இ. செபமாலை அடிகளார் காலத்திலிருந்தே ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பின்னர் தற்போதைய பங்குத்தந்தை அருட்திரு. சவுல்நாதன் காலத்திலும் இதற்கான தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் தற்போது இத்திட்டம் வெற்றியளித்துள்ளது. இளைப்பாறிய அதிபர் காலம்சென்ற அமரர் இராயப்பு அவர்களின் முயற்சியும் இங்கு சுட்டிக்காட்டப்படவேண்டியதாகும்.

இச்சொத்துக்களின் உரிமை மன்னார் மறைமாவட்ட வின்சன்ட் டி போல் சபையினரிடம் இருக்கும். இதன்மூலம் பயனைப்பெறுபவர்கள் விடத்தல்தீவு பங்கும் விடத்தல்தீவு வின்சன் டி போல் சபையினரும் ஆவர். இந்த வாகனங்களினால் விடத்தல்தீவிலும் அதை அண்டிய பகுதிகளிலும் உள்ள குடி தண்ணீர்ப் பிரச்சினை தீர்க்கப்படும் என நம்பப்படுகின்றது. இந்தத் திட்டம் செயல்வடிவம்பெற உறுதுணையாக நின்ற அனைவருக்கும் விடத்தல்தீவுப் பங்குச் சமூகம் நன்றி தெரிவிக்கின்றது. - தகவல் : அந்திரேஸ், விடத்தல்தீவு



வின்சன்ட் டி போல் சபையினரின் உதவிகளை விடத்தல்தீவு பங்கிற்கு கையளிக்கும் வைபவத்தில் தேவராஜா கொடுதோர் அடிகளாரும், சவுல்நாதன் அடிகளாரும் ஏனைய வின்சன் டி போல் உறுப்பினர்களும், பங்கு மக்களும் காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைக் கைதிகளின் கால்களைக் கழுவி
# புதிய பாப்பரசர் வரலாறு படைப்பு

## இரண்டு பெண்களின் கால்களையும் கழுவினார்

கத்தோலிக்க உலகில் இதுவரை நிலவிவந்த சம்பிரதாய மரபுகளைத் தகர்த்தெறிந்து புதிய பாப்பரசர் வரலாறு படைத்துள்ளார். சிறைக்கைதிகளின் கால்களைக் கழுவி முத்தமிட்டே அவர் இந்தப் புதிய வரலாற்றைப் படைத்துள்ளார். உலகம் முழுவதுமுள்ள கிறிஸ்தவர்கள் கடந்த 28.03.2013 அன்று இயேசு தமது 12 சீடர்களின் கால்களைக் கழுவி முத்தமிட்ட நிகழ்ச்சியை நினைவுகூரும் புனித வியாழன் வழிபாடுகளில் கலந்துகொண்டனர்.

வழக்கமாக வத்திக்கான் நகரிலுள்ள புனித பீட்டர் தேவாலயத்தில் குருக்களின் கால்களைக் கழுவியே பாப்பரசர் முத்தமிடுவார். ஆனால், அந்த மரபு புதிதாகப் பொறுப்பேற்றுள்ள பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களினால் தகர்க்கப்பட்டுள்ளது.

வழக்கத்திற்கு மாறாக, அவர் உரோம் நகரிலுள்ள கசல்டெல் மாமோ என்ற சிறார்கள் சீர்திருத்தப் பள்ளிச் சிறைக்குச் சென்றார். அங்கு 12 இளம் சிறைக் கைதிகளின் கால்களைக் கழுவி முத்தமிட்டார். அவர்களில் 2 முஸ்லிம் சிறுமிகளும் அடங்குவர். இதுவரை பாப்பரசர் பெண்களின் கால்களைக் கழுவி முத்தமிட்டது இல்லை. அந்த மரபையும் மாற்றி பாப்பரசர் பிரான்சி ஸ் புதிய வரலாற்றைப் படைத்தார்.

இது குறித்து அவர் குறிப்பிடுகையில் "எனது மனச்சாட்சிப்படி மதகுருவின் கடமையை நான் செய்தேன். நான் உங்களுக்குச் சேவை செய்யவே இருக்கின்றேன். கடவுள் எனக்கு கற்றுக்கொடுத்ததை அன்புடன் செய்கின்றேன்" என்றார்.

இந்த நிகழ்ச்சி வத்திக்கான் நகர வானொலியில் மட்டுமே நேரடியாக ஒலிபரப்பப்பட்டது. பாதுகாப்புப் பிரச்சினைகள் காரணமாக இதர தொலைக்காட்சிகளுக்கும், ஊடகங்களுக்கும் அனுமதி வழங்கப்படவில்லை.



# சிறுபான்மையினரின் உரிமைகளை மதித்து ஏற்றுக்கொள்வதுதான்
# ஒரு சமுதாயத்தின் அமைதிக்குச் சிறந்த வழி


### ஐ.நா மனித உரிமைகள் அவையின் அமர்வில் பேராயர் சில்வானோ தொமாசி

சிறுபான்மையினரின் உரிமைகளை மதித்து ஏற்றுக் கொள்வதுதான் ஒரு சமுதாயத்தின் அமைதிக்குச் சிறந்த வழி என்று வத்திக்கான் உயர் அதிகாரி கூறினார்.

கடந்த மார்ச் 6ஆம் திகதி ஜெனீவாவில் நடைபெற்ற மனித உரிமைகளை மையப்படுத்திய ஐ.நா.வின் 22வது அமர்வில் ஐ. நா அலுவலகங்களுக்கான திருப்பீட நிரந்தரப் பார்வையாளர் பேராயர் சில்வானோ தொமாசி உரையாற்றியபோதே இவ்வாறு கூறினார்.

ஒவ்வாரு நாட்டிலும் வாழும் சிறுபான்மையினரின் அடிப்படை உரிமைகளை மதித்து, அவற்றை உறுதிசெய்யும் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டால் அந்நாட்டில் அமைதியும், வளர்ச்சியும் உறுதிசெய்யப்படும் என்று பேராயர் தொமாசி கூறினார். மத உரிமைகளுக்கு உறுதி வழங்கும் வகையில் ஒவ்வோர் அரசும் இயங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்ட பேராயர் தொமாசி, மத சார்பற்ற அரசுகள் என்று தங்களையே பறைசாற்றும் அரசுகளும் சிறுபான்மையினரின் உரிமைகளைக் காக்கத் தவறுகின்றன என்பதை எடுத்துரைத்தார்.

எவ்வித அதிகாரமும் இல்லாத அமைப்புக்கள் பல நாடுகளில் வன்முறையைக் கையாண்டு, சிறுபான்மை மக்களிடையே அச்சத்தை பரப்பும் போக்கு அண்மைக் காலங்களில் அதிகரித்து வருவதையும் பேராயர் தொமாசி தன் உரையில் சுட்டிக்காட்டினார்.





*கடந்த பெரிய வெள்ளி திருவழிபாட்டின்போது புதிய திருத்தந்தை முகம் குப்புற விழுந்து கிடந்து செபிக்கின்றார்.*

புத்த பிக்குகள் ...... 1ஆம் பக்கத் தெடர்ச்சி

அவ்வறிக்கையில் ஆயர் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது, இலங்கைத் தமிழர் விவகாரத்திற்கு உரிய தீர்வு கிடைக்கவேண்டும் என்பதற்கான அக்கறையும் விழிப்புணர்வும் தமிழ் நாட்டில் பரவலாக அதிகரித்து வரும் நிலையையும் அங்குள்ள மாணவர் சமுதாயத்தால் முன்னெடுக்கப்படும் அறநெறிப் போராட்டங்களையும் நன்றியோடு நினைந்து வரவேற்பதோடு அங்கு ஒருசிலரால் மேற்கொள்ளப்பட்ட வேண்டத்தகாத வன்முறைச் செயல்கள் எமக்கு வருத்தமளிப்பதாக இருப்பதைச் சுட்டிக்காட்டி அவற்றை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

ஏதுமறியாத அப்பாவிகள் அதிகளவில் தாக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டுள்ள பின்புலங்களை இந்த மண்ணில் நாம் கொண்டுள்ளோம். ஆயினும் இந்த மண்ணின் மக்களின் நீடிய விடுதலைக்கும் நல்லிணக்கத்திற்கும் இப்படிப்பட்ட செயற்பாடுகள் பின்னடைவையே ஏற்படுத்தும் என்பது உண்மை. எனவே இலங்கையில் இருந்து வருகைதரும் அப்பாவி சிங்கள மக்களையும், பௌத்தமத குருக்களையும் தாக்குவதும் தாக்கமுயல்வதும் நீதிநிலைநிறுத்தும் வேட்கை உள்ளவர்களின் செயல்முறைகளுக்கு முற்றிலும் முரணானது.

ஆகவே இத்தகைய மனித உரிமைகளுக்கு எதிரான சம்பவங்களை மிக வன்மையாகக் கண்டிப்பதோடு தமிழகத்தில் புத்தபிக்குகள் தாக்கப்பட்ட சம்பவங்களுக்கு பொறுப்பானவர்களை நீதியின்முன் நிறுத்தவும் இனிமேல் இப்படியான சம்பவங்கள் நிகழாதிருப்பதை உறுதிப்படுத்தவும் இந்திய, தமிழக அரசுகளை கேட்டுக்கொள்கிறோம்.

உயிர்ப்பின் ........ 1ம் பக்கத் தொடர்ச்சி

மீண்டுமொருமுறை திருவழிபாட்டு ஆண்டின் உச்சக்கட்டமான உயிர்ப்பைக் கொண்டாடி நசரேத்தூர் இயேசுவை உயிர்த்த ஆண்டவரும் மீட்பரும் எனப் பறைசாற்றுகின்றோம். அதன்படி தூதர்களின் வார்த்தைகள் எம் காதுகளில் மீண்டும் ஒலிக்கட்டும், 'உயிரோடு இருப்பவரை இறந்தவர் மத்தியில் தேடுவான் ஏன்? அவர் இங்கு இல்லை அவர் உயிர்த்துவிட்டார்.' (லூக் 24:5)

இவ்வருடம் இம்மகிழ்ச்சிநிறை கொண்டாட்டம் இடம்பெறுவது முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் ஆண்டகையால் பிரகடனப்படுத்தப்பட்ட விசுவாச ஆண்டில் என்பதும் இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகிறது. மேலும் திருத்தந்தை உலகளாவிய திருச்சபையில் இருக்கும் ஒவ்வொருவரையும் இயேசுவின்மீதான விசுவாசத்தின் மகிழ்ச்சியை புதுப்பித்துக்கொள்ளுமாறு இவ்வருடத்தை ஏற்படுத்தினார்.

மேலும் இயேசுவின்மீதான எமது விசுவாசம் எம் ஒவ்வொருவருக்கும் அளிக்கப்பட்ட விலைமதிக்க முடியாத கொடையே என்றால் மிகையாகாது. இயேசுக் கிறிஸ்துவின்மீதான எமது விசுவாசத்திற்காக கடவுளுக்கு நன்றிசெலுத்தும் காலமே உயிர்ப்பின் காலமாகும்.

கடவுள் நம் ஒரே பேறான மகன்மீதான விசுவாசத்தை எமக்கு அளித்துள்ளார். எனும்போது அது மாபெரும் கொடையேயாகும். ஆகவே நாம் அவ்விசுவாசத்தை எமது தலைமுறையினருக்குப் பரிசாகப் பெற்றுத்தருவதில் பங்களிப்பவர்களாகவும், நன்றி செலுத்துபவர்களாகவும் இருக்க வேண்டும். இவ்வாறாக இயேசுவில் விசுவாசங் கொண்டுள்ளோம் எனும் இவ்வாசீரை எண்ணி மகிழ்ந்து புகழ்பாட வேண்டியதும் எமது கடமையாகும்.

உயிர்த்த ஆண்டவர் தம் சீடர்களுக்குத் தோன்றி அவர்களுக்கு அமைதியைக் கொடையாகக் கொடுத்தார். ஆகவே போருக்குப் பின்னரான இலங்கையில் வாழ்ந்துகொண்டிருக்கும் நாமும் அக்கொடையைக் கேட்டு நிற்போம். பௌதீக ரீதியான வளர்ச்சியை சில நிலைகளில் நாம் பெற்றுள்ளபோதிலும் எம் தாய் நாட்டில் பணம் படைத்தவர் மற்றும் ஏழைகளுக்கிடையிலான இடைவெளி மிகைப்பட்டுள்ளதையும் மறுக்க முடியாது. பொருட்களின் விலைகளில் உயர்வினால் ஏழைகளின் வாழ்க்கை கடினமானதாகவும், கசப்பானதாகவும் மாறியுள்ளதையும் மறுக்க முடியாது. இதனால் உயிர்த்த ஆண்டவர் கொடுக்கும் அமைதி இன்றியமையாத ஒரு தேவையாகவே இருக்கிறது. எமது சமுதாயத்தில் அமைதியை நிலைநாட்டக்கூடிய சகல நடிவடிக்கைகளிலும் ஈடுபடுவதோடு அதைத் தரும்படியாக ஆண்டவரைப் பார்த்து இரஞ்சிக் கேட்கவும் வேண்டும்.

எமது விசுவாசத்திற்காக நன்றிகூறி மகிழும் அதேவேளையில் வாழ்க்கையின் அடிப்படைத்தேவைகள் எதுவுமின்றி அல்லல்படுவோரை மறந்துவிடலாகாது. எமது கிறிஸ்தவ சீடத்துவம் துன்புறுவோரில் இயேசுவின் முகத்தைக் கண்டு அக்கறை காட்டவும் பணி புரியவும் எம்மை அழைப்பதை நாம் மறந்துவிடலாகாது. எமது உயிர்ப்பின் மகிழ்ச்சி கிறிஸ்தவ சீடத்துவத்தின் கடமையை ஆழமாக எமக்கு உணர்த்த வேண்டும். எம்மைச் சூழவுள்ளோரின் தேவைகளை நிறைவேற்ற நாம் பாடுபட வேண்டும். மேலும் எமது சாட்சிய வாழ்வின் மூலமாக கிறிஸ்துவின்மீதான விசுவாசத்தின் அழகை ஏனையோரும் கண்டுணர்வார்களாக. உயிர்த்த ஆண்டவரின் சாட்சிகளாகவும் அமைதியின் தூதர்களாகவும் செயற்பட முன்வருவார்களாக.

எமது புதிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்காக உலகளாவிய திருச்சபையோடு சேர்ந்து நாமும் செபிப்போம். எல்லோருக்கும் எமது உயிர்ப்புப் பெருவிழா வாழ்த்துக்களும் உயிர்த்த ஆண்டவரின் அமைதியும் மகிழ்ச்சியும் உரித்தாகுக.

மேதகு ஆயர் நோபர்ட் அந்திராடி ஆண்டகை,
பொதுச் செயலாளர், இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை

## நாட்டு நடப்புக்கள்

### முசலி பிரதேசக் கிராமங்களுக்கு பஸ்சேவையின்றி மக்கள் சிரமம்

முசலிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கொண்டச்சிக்குடா, கொண்டச்சி, கொக்குப்படையான், காயாக்குளி ஆகிய கிராமங்களில் போக்குவரத்து சேவைகள் உரிய முறையில் இல்லாமையால் இப்பகுதி மக்கள் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருவதாக முசலிப் பிரதேச பிரஜைகள் குழுவின் அமைப்பாளர் சுனேஸ் சோசை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கொண்டச்சிக்குடா, கொண்டச்சி, கொக்குப்படையான், காயாக்குழி ஆகிய கிராமங்களை மையப்படுத்திய போக்குவரத்து சேவைகள் மிகவும் மோசமாகக் காணப்படுகின்றன. நாளாந்தம் இப்பகுதி மக்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதுடன் அவை தொடர்பில் பல தடவைகள் அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்யப்பட்டும் இன்னமும் அதிகாரிகள் மக்களை புறக்கணித்து வருகின்றார்கள். குறிப்பாக மன்னாரிலிருந்து அரிப்பிற்கு செல்லும் பஸ், காலையில் 7.45 மணிக்கு முருங்கன் ஊடாக சிலாவத்துறையினை வந்தடைந்து மீண்டும் கொக்குப்படையான் வரைக்கும் சென்று திரும்புவதே வழமையான சேவையாகக் காணப்பட்டது. இருந்தபோதிலும் கடந்த பல காலமாக இச்சேவையானது புறக்கணிக்கப்பட்ட நிலையில் முசலி பிரதேச செயலகத்துடன் மக்களை இறக்கிவிட்டு செல்லக்கூடிய நிலை காணப்படுகிறது.

இதுமட்டுமன்றி காயாக்குழியில் இருந்து சிலாவத்துறைக்கு பாடசாலைக்கு வருபவர்கள் காலையில் முள்ளிக்குளத்தில் இருந்து வரும் பஸ்ஸில் பாடசாலைக்கு வந்து மாலையில் பாடசாலை முடிந்தவுடன் 7 கிலோ மீற்றர் தூரம் காயாக்குழிக்கு நடந்து செல்கின்றனர்.

இதனால் சிறுவர்கள், வயோதிபர்கள், கர்ப்பிணித்தாய்மார்கள், மாணவர்கள் எனப் பலரும் பல மைல் தூரம் நடந்து செல்லும் நிலை காணப்படுகிறது. குறிப்பாக சிலாவத்துறையிலிருந்து கொண்டச்சிக்குடாவிற்கு ஆட்டோவில் செல்வதென்றால் 300 ரூபா தேவைப்படுகிறது. நேரத்திற்கு மாணவர்கள் பாடசாலைக்கு செல்ல முடியாத நிலை காணப்படுவதனால் மாணவர்கள் ஆசிரியர்களினால் தண்டிக்கப்பட்டு வருவதனையும் அறிய முடிகின்றது. இது குறித்து மன்னார் போக்குவரத்து சபைக்கு பல தடவைகள் மனு அனுப்பியும் இதற்கான சரியான பதிலை அது எமது பிரஜைகள் குழுவிற்கு அனுப்பிவைக்கவில்லை.

எனவே மக்களின் நலன் கருதி போக்குவரத்துச் சேவையினை சீர்செய்து தரும்படி முசலி பிரதேச பிரஜைகள் குழுவின் அமைப்பாளர் சம்மந்தப்பட்ட அதிகாரிகளை வேண்டி நிற்கின்றார்.


### கிறிஸ்தவ எதிர்ப்பும் ஆரம்பம்
### சிஹல ராவய அராஜகம்!

சிஹல ராவய அமைப்பைச் சேர்ந்த பௌத்த பிக்குகள் கடந்த 15.03.2013 அன்று நாவலயில் உள்ள கிறிஸ்தவ குடும்பம் ஒன்றின் வீட்டிற்குள் பலவந்தமாகப் புகுந்து அடாவடித்தனத்தில் ஈடுபட்டுள்ளனர். வீட்டில் இருந்தவர்களைத் தாக்கி புனித பைபிளை எடுத்து வீசி அவர்கள் பெரும் அட்டகாசம் புரிந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. குறிப்பிட்ட அந்த வீட்டில் சட்டவிரோதமான சமய பிசாரங்கள் இடம்பெறுகின்றன என்று குற்றஞ்சாட்டியே அவர்கள் இந்த வீட்டிற்குள் பலவந்தமாகப் புகுந்து தாக்குதல் நடத்தியிருக்கின்றனர்.

அந்த வீட்டில் பிரார்த்தனை அறையில் சமய நல்லிணக்கத்துக்காக இயேசு நாதரின் உருவச் சிலைக்கு அருகில் புத்தரின் உருவச்சிலையும் வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

புத்தரின் சிலைக்கு அருகில் வேறு எந்த மதத்தின் அடையாளங்களையும் வைக்க முடியாது என்று கூறி அந்த புத்தர் சிலையை பிக்குகள் அகற்றியிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிர்வுகள்.....!

அருட்பணியாளர் செ. அன்புராசா, அ.ம.தி எழுதும்

சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 18.




### காதல் 'காலன்'!

இளவயதுத் தற்கொலைகள் ஆங்காங்கே இப்போது அதிகரித்திருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. 2013ஆம் ஆண்டின் முதல் ஆறு கிழமைகளுக்குள் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான தற்கொலைகள் நடந்திருப்பது பதிவாகியுள்ளன. யாழ். குடாநாட்டில் மேற்சொன்ன காலப்பகுதிக்குள் இரு இளவயது தற்கொலைகள் நடந்திருக்கின்றன. ஒன்று, யாழ். பல்கலைக்கழக இரண்டாம் ஆண்டு மாணவி தன்னைத்தானே தீயிட்டுக் கொழுத்தியது. இரண்டு, ஆரம்பப்பிரிவு ஆசிரியர் ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டது. இவ்விரு சம்பவங்கள் வழியாக வருகின்ற பாடத்தினை எல்லாரும் அறிந்திருக்கவேண்டும் என்பதற்காக, மதுவிழி என்பவர், "தயவுசெய்து இதை படிக்காதையுங்கோ...!" என்ற தலைப்பில் மேற்சொன்ன சம்பவங்களின் ஒளியில் ஒரு கட்டுரையை 10.02.2013 உதயன் பத்திரிகையில் எழுதியிருக்கிறார். இக்கட்டுரையைப் பல இளவயதினர் நிச்சயமாக படித்திருப்பார்கள் என எதிர்பார்க்கலாம்! 'வயது வந்தவர்களுக்கு மட்டும்' என்று போட்டுவிட்டால் போதும்! இளவயதினர் முண்டியடித்துக்கொண்டு முதலில் பார்ப்பார்கள், படிப்பார்கள் எனச் சந்தேகத்திற்கு இடமின்றிக் கூறலாம். அதனால்தான், மதுவிழி அக்கட்டுரைக்கு அவ்வாறு தலைப்பிட்டிருக்கிறார். மேற்சொன்ன இரு தற்கொலைச் சம்பவங்களையும் பற்றிச் சொல்கின்றபோது,"...இவ்விரண்டு வெவ்வேறு சம்பவங்களின் பின்னும் இருக்கின்ற தூண்டுதல் காரணி ஒன்றுதான், காதல்!" எனக் குறிப்பிடுகிறார் மதுவிழி.

மேற்கூறப்பட்ட தற்கொலை சம்பவங்களுக்கான காரணங்கள் மதுவிழியினால் கூறப்பட்டவை என்பதைக் கருத்தில் வைத்துக்கொண்டு காதல் விவகாரத்தை ஆராயலாம்போல் தோன்றுகிறது. நண்பர்களே!... காதல் விவாதத்திற்கு ஆயத்தமா?... காதல் விவரணம் பற்றித்தானே! பிறகு ஏன் படபடப்பு? ஏன் இந்தப் பதகளிப்பு? உங்களை காதல் செய்யக் கேட்கவில்லையே? உங்களைக் காதலிப்பதாகவும் கூறவில்லையே? அப்ப, கொஞ்சம் அமைதியாய் இருங்கள். சும்மா, காதல் பற்றிக் கொஞ்சம் கலந்து பேசுவோம், வாருங்கள்.

### காதல் கணக்கு

கணக்குக்கும் காதலுக்கும் என்ன வித்தியாசம்? எனக் கேட்கப்பட்ட போது, "21யும் 18யும் கூட்டினால் கணக்கு; 21, 18டைக் கூட்டிக்கொண்டு போனால் காதல்!" என்று பதில் கிடைத்ததாம் என தமிழ்நாடு இறையியல் எழுத்தாளர் அருள்திரு வை. இருதயராஜ் 'சுகமான சுமைகள்' என்ற நூலில் குறிப்பிடுகிறார். இவ்வாறாகப் புரிந்துகொள்ளப்படுகின்ற காதல் அபாயகரமானது. "காதல் கடல் போன்றது, இதில் முத்து எடுத்தவர்களைவிட மூழ்கிச் செத்தவர்களே அதிகம் என்றும்; காதல் ஒரு பூந்தோட்டம், இங்கு மாலைகளைவிட மலர்வளையங்களே அதிகம் தொடுக்கப்படுகின்றன என்றும் சொல்லப்படுகிறது" என பிழையாகப் புரிந்துகொள்ளப்படும் காதலினால் ஏற்படும் விபரீதத்தை வை. இருதயராஜ் அடிகள் மேலும் விளக்கிக் காட்டுகிறார்.

### காதல் புனிதமானது

உள்ளதைச் சொல்லப்போனால் காதல் என்ற உணர்வு புனிதமானது. ஆகவேதான், "பிணம் போகிற பாதையில் மலர்தூவும் மக்கள் - இரண்டு மனம் போகிற பாதையில் மலர்தூவ மறுக்கிறார்கள்" என புனிதமான காதல் போற்றப்படாமல் இருப்பது வருத்தத்திற்குரியது என வேதனையுறுகிறான் கவிஞன். புனிதமான காதல் உணர்வு புரிந்து கொள்ளப்படாதது கவலைக்குரியது. எனினும் இதைவிட வேதனையானது, காதல் என்று தொடங்கி வாழ்வைத் தொலைத்து நிற்பது அல்லது வாழ்வை இழந்து திரிவது!

இப்படி வாழ்வை இழந்தவர்கள் எண்ணில்லடங்காதவர்கள். "காதலர் தினத்தன்று கடற்கரை களைகட்டுகிறது. அதன்பின் தற்கொலை கொடிகட்டிக் பறக்கிறது" என வேதனையாய் மாறும் நிலையினையும் சுட்டிக்காட்டவேண்டி இருக்கிறது. எனினும், "காதல் ஒன்றுதான் மனிதனை மீண்டும் மனிதனாக்குகிறது" என்கிறார் கால் மாக்ஸ். உண்மையான காதல் - புனிதமான காதல் போற்றுதற்குரியது. அது வளர்வதற்கு, வாழ்வதற்கு வழிவகைகள் அமைக்கப்படல் வேண்டும்.

### காதல் பரந்து விரிந்த பொருள் கொண்டது

உண்மையில் காதல் என்ற சொல் பரந்து விரிந்த பொருள் கொண்டது. "காதல் என்பது கடவுள் மாதிரி! இழுத்த இழுப்புக்கு வரும்; இஸ்டத்துக்குப் பொருள் கொள்ளலாம்" என கவிப்பேரரசு வைரமுத்து குறிப்பிடுவார். காதல் என்ற சொல்லின் பல்பொருள் பயன்பாட்டை பாற்கடல் என்ற நூலில் அவரே சுருக்கமாகக் குறிப்பிடுவார். "'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி' என்று சம்பந்தர் பாடும்போது காதல் என்பது பக்தி. 'காதல் திருமகன்' என்று இராமனை தசரதன் குறித்தபோது காதல் என்பது அன்பு. 'ஆதலினால் காதல் செய்வீர்' என்று பாரதி பாடியபோது காதல் என்பது ஆண் பெண் நட்பு. 'காதலுக்கு வழிவைத்து கருப்பாதை சாத்த' என்று பாரதிதாசன் பாடியபோது காதல் என்பது உடலுறவு. 'முதியோர் காதல்' (வைரமுத்து) என்று எழுதியபோது காதல் என்பது உடல் கடந்த உணர்வு நிலை" என காதல் என்ற சொல்லின் பரந்துபட்ட அர்த்தங்களை ஓரளவுக்கேனும் புரியக்கூடிதாக இருக்கிறது. இந்த வகையில் காதல் புனிதமானது. ஆனால், அதனைப் புனிதமாகவா பார்க்கிறார்கள்? பயன்படுத்துகிறார்கள்?

### காதல்,'ஈமெயில்'இல்!
### கலியாணம்,'இன்ரநெற்'றில்!!
### குழந்தை,'குளோனிங்'இல்!!!

ஆரம்ப காலத்தில் தோட்டத்துக்குள்ளும், துரவுக்குள்ளும் 'கிராமத்துக் காதல்' வளர்ந்தது. முதல் பெற்றோரான ஆதாம் ஏவாளின் காதல் ஏதேன் தோட்டத்தில்தானே நடந்தேறுகிறது! இந்தக் காதலே வளர்ந்து, பின்னர்; கோயில்களிலும், பாடசாலைகளிலும், அலுவலகங்களிலும் 'கடிதக் காதல்' ஆக உருவாகி விருத்தி பெற்றது. "சந்தித்தவேளை சிந்திக்கவேயில்லை தந்துவிட்டேன் என்னை..." எனக் கூறும் பழைய சினிமாப்பாடல் பாணியில் காதல் விரிந்து சென்றிருக்கிறது. இப்போதைய காதல், 'ஈமெயில் காதல்' ('email love') ஆக மாற்றுரு எடுத்திருக்கிறது! என்ன செய்வது? 'ஈமெயில்'இல் காதலித்து, 'இன்ரநெற்'இல் (Internet) கலியாணம் முடித்து, 'குளோனிங்'இல் குழந்தை பெற்றுக்கொள்ளும் காலம் இது என வர்ணிக்கவேண்டி இருக்கிறது! இனிவரும் காலங்களில் இது எங்கு போய் நிற்கப் போகிறதோ? யாமறியோம் பராபரமே ...!

### காதலுக்குச் சமூகத்தில் செல்வாக்கில்லை, எனினும் சீர்படுத்தியிருக்கிறது!

"நம்ம காதல மெதுவா வீட்டில சொல்லீற்றன்" என காதலன் சொல்ல, "வீட்டில என்ன சொன்னாங்க?" என காதலி ஆர்வத்தோடு கேட்கிறாள். அவன், "மெதுவாச் சொன்னதால யாருடைய காதிலையும் அது விழயில்ல" என்கிறான் வலு நிதானமாக ...! எப்படி எல்லாம் காதில் பூ வைப்பார்கள் தெரியுமா?

காதல், நம் இலக்கியங்களில் பெற்ற செல்வாக்கை, நடைமுறை வாழ்க்கையில் பெறவில்லை என்றுதான் கூறவேண்டும். இலக்கியங்களில் காதலைப்பற்றி எழுதுகிறார்கள், அவற்றை மக்கள் நன்றாகவே சுவைக்கிறார்கள்.

எனினும் நம் சமூதாயத்தில் காதலுக்கான அங்கீகாரம் கிடைக்கவில்லை என்றுதான் தோன்றுகிறது.

ஆனாலும், எதிர்ப்புக்களை எதிர்கொண்டு, சவால்களைச் சந்தித்து, தடைகளைத் தாண்டி இளைய சமூதாயம் காதலை வளர்க்கிறது, வாழ்விக்கிறது என்பதையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது.

நம் சமூதாயத்தில் சாதியின் பெயரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஏற்றத்தாழ்வுகளை ஒழிப்பதற்கு காதல் 'வைரஸ்' (love virus) குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்திருக்கிறது என்பதும் கருத்தில் கொள்ளத்தக்கது. எனினும், எத்தனை எத்தனை காதல் திருமணங்கள் கைகூடினாலும் தமிழ் சாதி 'வைரஸ்'களை (virus) அடியோடு அழிக்க முடியாதுள்ளதை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. காரணம், 'தமிழ் சாதி வைரஸ்'கள் கல்லறைகளிலும்கூட உயிர்வாழக்கூடிய ஆற்றல் வாய்ந்தவை! தமிழ் மண் கல்லறைகளில் மட்டுமல்ல, சாதிகள் எப்போதோ காலாவதி ஆகிப்போன மேற்குலக நாடுகளின் தமிழ் கல்லறைகளிலும் இந்த சாதி 'வைரஸ்'கள் வீரியத்தோடும் வீறாப்போடும் உயிர்வாழ்கின்றன என்றுதான் சொல்லுகிறார்கள்!

### காதல் பற்றிய புதிய புரிதல்கள்!

காதல் என்றால் பெற்றோருக்கு 'அலேஜி' (allergy) யாகவும், இளையோருக்கு 'எனேஜி' (energy) யாகவும் இருக்கிறது. அதனால்தான், "காதல் கத்தரிக்காய் மாதிரி ஒத்துக்கிண்டா 'எனேஜி', ஒத்துக்கல்லண்டா அலேஜி' " என்றான் ஒருவன். "காதல் பனை மாதிரி. ஏறினா நொங்கு, சறுக்கினா சங்கு" என்றான் இன்னுமொருவன. "எப்படா இவ பேசுவா என்பதற்கும், எப்படா இவ பேச்ச நிறுத்துவா என்பதற்கும், இடைப்பட்ட காலம்தான்; காதல்" என வேறொருவன் சொன்ன வரிகளும் நினைவுக்கு வருகின்றன. அடேயப்பா!... எப்படி எப்படியெல்லாம் இக்காலத்துத் தலைமுறை காதல் பற்றிச் சித்திக்கிறது பார்த்தீர்களா?

"பொம்பளங்க காதலத்தான் நம்பிவிடாதே நம்பிவிடாதே, நம்பியதால் நொந்துமனம் வெம்பிவிடாதே வெம்பிவிடாதே, அத்தாண்டு சொல்லியிருப்பா ஆசையக்காட்டி, அண்ணாண்ணு சொல்லிநடப்பா ஆளையும்மாத்தி, ஆம்பிளையெல்லாம் அகிம்சாவாதி பொம்பளயெல்லாம் தீவிரவாதி...," என்றும் "ஆணோட காதல் கைரேக போல, பெண்ணோட காதல் கைக்குட்டை போல...," என்றும் "காதல் காயங்களே நீங்கள் ஆறுங்களே சோக நெஞ்சங்களே ஜோடி மாறுங்களே பெண்கள் உள்ளங்கள் நிலைமாறி கிளைமாறுதே, ஆண்கள் உள்ளங்கள் கண்ணீரோடு அலைபாயுதே, வாழ்க்கை மெய்யானது காதல் பொய்யானது, ஆனது ஆகட்டும் கோப்பை ஏந்துங்களே..." எனவும் பாடி, பெண்களிடம் காதல் பழிதீர்த்துக் கொள்கிறார்கள். இவ்வாறு, காதலின் காவலர்கள் ஆண்கள் (தற்போதைய சினிமா மொழிநடையில் காதல் அகிம்சாவாதிகள்) என்றும் காதலின் கள்வர்கள் பெண்கள் (காதல் தீவிரவாதிகள்) எனவும் அர்த்தப்படுவதுபோல பல பாடல்களை அமைத்து வெற்றியும் கண்டுவிடுகிறார்கள் இன்றைய சினிமாப் படைப்பாளிகள்!

### காதல், கண்களை மறைத்து விடுகின்றனவா?

ஒருவரிடம், "உங்கட கலியாணம் 'arranged marriage'ஆ? (பேச்சுத் திருமணம்) அல்லது 'love marriage'ஆ (காதல் திருமணம்)" எனக் கேட்டபோது, அவர்,"'**running marriage**' " என்றாராம் பதிலாக!

(தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

## புனித ஜோன் பாப்ரீஸ்ட் டி லாசால்

(கி.பி. 1651 – 1719)



மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்

# புனிதர்களின் பாதையில்

"காலத்திற்கேற்ற கல்விமுறைத் தந்தை" என்று அழைக்கப்படும் இவர் பிரான்சில் ரீம்ஸ் நகரில், நகர மன்ற உறுப்பினர் மகனாய்த் தோன்றியவர். 16ஆம் வயதிலேயே ரீம்ஸ் நகரின் பேராலயத்தில் பெரிய பொறுப்பு வகித்தவர். 27 வயதில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். தாழ்ச்சியிலும், பக்தி முயற்சிகளிலும் சிறந்து விளங்கினார். அதே வேளையில் ஏழைகளின்மீது கொண்ட பரிவு நாளுக்கு நாள் இவரிடம் மிகுந்து வந்தது. இதுவே இவரது வாழ்நாள் எல்லாம், ஏழை மாணவர்களின் கல்வி முன்னேற்றத்துக்காகத் தம்மை முற்றிலும் கையளிக்க உதவியாக இருந்தது.

இவர்தம் நாட்களில் ஜான்சனிசம் என்ற நச்சு கலந்த கொள்கை பிரான்ஸ் நாட்டை அதிர வைத்தது. பற்றாக்குறைக்கு அண்டை நாடுகளுடன் ஓயாத போர். இவை எல்லாம் நாட்டில் கடுமையான பஞ்சத்தையும், பல்வேறு இன்னல்களையும் கொண்டுவந்துவிட்டன. மேலும், கல்வியறிவும், அறவே இல்லாது போயிற்று. இத்தகைய சூழலில்தான் ரீம்ஸ் நகரில் ஏழை மாணவர்களுக்கு இவர் இரு பள்ளிக்கூடங்களை நிறுவினார். நாள்தோறும் தவறாது ஆசிரியர்களிடம் கற்றுக்கொடுக்கும் யுக்திகள் பற்றிக் கலந்துரையாடுவார். அவர்களை எல்லா வழிகளிலும் ஊக்குவித்தார். தங்க இல்லம் அளித்து, தம்மோடு உணவருந்த வைத்தார்.

இந்தப் புதிய முறையைக் கையாண்டதன் பயனாகத்தான் நாளடைவில் "கிறிஸ்தவப் பள்ளிகளின் சகோதரர்கள்" என்ற நிறுவனத்தைத் தோற்றுவித்தார். 1680ல் தொடங்கப்பட்ட இந்நிறுவனம் முற்றிலும் தேவ பேணுதலின் அடிப்படையில் அமைய வேண்டுமென்றே திட்டம் தீட்டினார். பல நெருக்கடிகளையும் இன்னல், இடையூறுகளையும் சந்தித்த பின்னர் நாளடைவில் அது உலகளாவிய நிறுவனமாகக் காட்சியளிக்கத் தொடங்கியது.

காலத்தின் அறிகுறிகளுக்கேற்ற முறையில் தொடக்க, மேல்நிலைக் கல்வி புகட்டுவதில் பல புதிய யுத்திகளைக் கையாண்டு வெற்றிகண்டதால் இன்று இவரை 'கல்வித் தந்தை' என்று உலகம் போற்றுகிறது. இந்த நிறுவனத்தில் அனைவரும் சகோதரர்களாகவே இருக்கவேண்டும். குருக்களுக்கு இடமில்லை. சகோதரர்கள் அனைவரும் இளைஞர்களின் ஞானக்கண்களைத் திறந்து விடுவதெற்கென முற்றிலும் தங்களையே இறைவனுக்கு அர்ப்பணித்தவர்கள் என்ற குறிக்கோளோடு இன்றுவரை இந்தத் துறவற சபை இயங்கி வருகிறது.

புனித டி லாசால் தாய்மொழியில் மட்டுமே பயிற்சிப் பள்ளிகளையும் தோற்றுவித்தார்.

(தொடர்ச்சி 14.ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறப்புக்கும் குடி மணத்துக்கும் குடி இறப்புக்கும் குடியா?



திரு. ச. மாட்டீன் டயஸ், பேசாலை

மாலை 5.00 மணி. குருவானவர் பணிமனையிலிருந்து வேலை செய்துகொண்டிருந்தார். சாமிநாதன் கரியாலய வாயிலில் வந்து நின்றார். 45 வயதிருக்கும் அவரோடு சேர்ந்து வந்த வேறு இரண்டு பேர் கொஞ்சம் தள்ளி நின்று சத்தமாகக் கதைத்துக் கொண்டு நின்றார்கள். சாமிநாதனின் முகத்தைப் பார்த்தவுடன் குருவானவருக்கு விளங்கிவிட்டது. வீட்டில் ஏதோ அவலம் நிகழ்ந்து இருக்கிறது.

"உள்ளே வாரும் சாமிநாதன்". அவர் உள்ளே வரவில்லை. மணத்தில் சுவாமி கண்டு பிடித்துவிடுவார் என்று சாமிநாதருக்குத் தெரியும். சாமிநாதன் உள்ளே வரவில்லை. "அம்மா இறந்திட்டங்க சுவாமி." 'எப்ப?' "இன்றைக்கு மதியம் இரண்டு மணிக்கு". 'எப்படி?' "நெஞ்சு நோவுது, மூச்செடுக்கக் கஸ்டமாயிருக்குது எண்டாங்க. ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவாறதிற்கிடையில் இறந்திட்டாங்க. நாளைக்குப் பின்னேரம் 4.00 மணிக்கு எடுக்கலாம் என்றிருக்கிறம்." கண்கள் கலங்கச் சொன்னார்.

"கோயில் பிள்ளையிடம் சொல்லி மணியடிக்கச்சொல்லுங்க. நாளைக்கு 4.00 மணிக்குக் கொண்டுவாங்க. பூசை வைப்பம்." சாமிநாதன் போக முற்பட்டார்.

"இருங்க, குடிச்சிருக்கீங்களா? சாப்பிட்டீங்களா?" "வேற என்ன சுவாமி செய்யிறது? எனக்கிருந்தது ஒரே ஒரு அம்மா. இப்ப அவங்களும் என்னையும் பிள்ளைகளையும் அனாதைகளாக விட்டிட்டு பொயிட்டாங்க. குடிக்காம என்ன செய்யிறது?" முணுமுணுத்துக்கொண்டு போய்விட்டார். சுவாமி கொடுப்புக்குள்ள சிரித்துவிட்டு தன் வேலையைத் தொடர்ந்தார்.

..............................

இரண்டு மூன்று நாளைக்குப் பிறகு காலை 11.00 மணியளவில் அருளப்பு வந்தான். "சுவாமி எனக்கு ஆம்புளப்புள்ள பிறந்திருக்கான். ஞானஸ்தானம் கொடுக்க வேணும் ஒவ்விசில சொன்னன். உங்கட்ட போகச் சொன்னாரு." சுவாமி நிமிர்ந்து பார்த்தார். கண்கள் சிவந்திருந்தன. வாய் ஓரங்களில் சாப்பிட்ட உணவின் எச்சங்கள் இன்னும் ஒட்டிக்கொண்டிருந்தன.

"ஞானஸ்தானம் கொடுப்பம், இந்தச் சனிக்கிழமை அல்ல வாற சனிக்கிழமை. அதற்கு முன் செய்ய வேண்டிய ஆயத்தங்கள் இருக்கு. பாவசங்கீர்த்தனம் செய்து திருப்பலிக்கு வந்து நன்மை எடுக்க வேணும். அம்மாவும் அப்பாவும் வழிபாட்டுக்கு வரவேண்டும்."

"அதெல்லாம் செய்வந்தானே சுவாமி."

"அது சரி, என்ன பெயர் வைக்கப் போறா?"

"உங்கட பெயரைத்தான் வைக்கப்போறன்"

"குடிச்சிருக்கியா அருளப்பு?" "மூன்று பொட்டைக் குட்டிகளுக்குப் பிறகு பொடியன் பிறந்திருக்கிறான் சுவாமி." என்று சத்தமாகச் சொல்லி, "இதுக்குக் குடிக்காம பிறகெதுக்குக் குறிக்கிறதாம்." என்று சொல்லி புறுபுறுத்துக்கொண்டு சந்தோசமாய்ச் சென்றான் அருளப்பு. ..............................

மூன்று பூசைகளை முடித்துவிட்டு அப்போதுதான் பங்குத்தந்தை வந்தார். அன்று ஞாயிற்றுக் கிழமை. சவிரிமுத்து வந்தார். "என்ன சவிரிமுத்து சந்தோசமாக வந்திருக்கீங்க."

"இல்லை சுவாமி, என்ர மூத்த மகளுக்கு கலியாணம் கூடி வந்திருக்கு. இந்த மாதம் 20ம் திகதி சனிக்கிழமை கலியாணத்தை வைக்கலாம் என்று பார்க்கிறன்."

"நாட்கள் இருக்குத்தானே, சிஸ்சரிடம் போய்ப் படிக்கணும். மன்னாரில் நடக்கிற இரண்டு நாள் வகுப்புக்கும் இரண்டு பேரும் போகவேணும்."

"அதெல்லாம் முறைப்படி செய்வோம் சுவாமி" சந்தோசத்தில் கொஞ்சம் தண்ணி போட்டிருக்கீங்க போலிருக்கே......"

"அந்தப் பிள்ளைக்கு 30 வயசாச்சு. அதுக்குப் பின்னால் இன்னம் இரண்டு குமரிருக்கு. எவ்வளவோ கஸ்டத்துக்கு பிறகு கைகூடின கலியாணம். சந்தோசமாயிருக்காதா? ஒவ்வொண்டாச் செய்து கொடுத்தாத்தானே ....? ..............................

குடிக்கிறவர்கள் எப்படியோ ஏதாவது ஒரு காரணத்தை தமக்குப் பொருத்தமான மாதிரி ஆக்கிக்கொண்டு தாம் செய்வது சரியென நியாயப்படுத்துகின்றனர்.

இலங்கையின் கரையோரக் கிராமங்கள் கூடியளவில் குடிபோதைக்கு அடிமையாக இருக்கின்றன. துர்ப்பாக்கியம் என்னவென்றால் இவைகளில் பெரும்பாலானவை கத்தோலிக்க கிராமங்கள் - மீனவக் கிராமங்கள்.

இந்தக் கலாச்சாரம் ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குக் கடத்தப்படுகிறது. மகிழ்ச்சியில் குடிப்பது, சோகத்தில் குடிப்பது, சண்டையில் குடிப்பது, வெற்றியில் குடிப்பது, தோல்வியில் குடிப்பது, பிரச்சினையில் குடிப்பது, பிரச்சினை தீர்ந்தால் குடிப்பது, இவையெல்லாம் சாதாரண விடயங்களாக எண்ணப்படுகின்றன. இதில் சொல்லப்பட வேண்டிய இன்னுமொரு குறிப்பு என்னவென்றால் மன்னார் மாவட்டத்தில்தான் அதிக அளவான மதுப்போத்தல்கள் விற்பனையாகின்றன. குறைந்த சனத்தொகையைக் கொண்ட மாவட்டம். ஆஹா என்று மகிழ்ச்சியில் தண்ணியடிப்பதா ஐயகோ இப்படி ஆயிற்றே என்று சோகத்தில் தண்ணியடிப்பதா? ஒப்பிட்டு ரீதியில் தலா வருமானத்திலும் தாழ்நிலையிலும் இருக்கும் மாவட்டம். ஆன்மீகத்திலும் கல்வியிலும் வேகமாக முன்னேறத் துடிக்கின்ற மாவட்டம். குடிபோதையில் மட்டும் இன்னும் தனது இடத்தைத் தக்கவைத்துக் கொண்டேயிருக்கின்றது.

இதைப்பற்றிச் சிந்திக்க வேண்டியவர்கள் யார்?

குடிப்பவர்கள்தான். அவர்கள் தாங்கள் என்ன செய்கிறார்கள் என்று அவர்களுக்கே தெரிவதில்லை.

1. உழைப்பின் பெரும் பங்கு வீணடிக்கப்படுகின்றது. (அது மிச்சப்படுத்தப்பட்டால் பல நல்ல தேவைகளுக்குப் பயன்படுத்தலாம். உதாரணமாக பிள்ளைகளின் கல்வி, வீடு ஒன்றை அமைத்தல், பிள்ளைகளின் திருமணம், குடும்பத்துக்குப் போசாக்குள்ள உணவு, தான தர்மம் இன்னும் பல)
2. தங்களின் ஆயுட்காலத்தை ஒவ்வொரு நாளாகக் குறைத்துக்கொண்டு வரல்.
3. முதுமையையும் கல்லறையையும் நோக்கிய விரைவான பயணம்.
4. குடும்பத்தின் நிலை/ தரம் உயராதிருத்தல்.
5. சேமிப்பு இன்மையால் அவசர தேவைகளுக்குக் கடன் வாங்கல்.
6. எளிதாக நோய்வாய்ப்படல்.
7. வறுமையினால் ஆரோக்கியமில்லாக் குழந்தைகளும் கல்வியில் மந்த நிலையும், குடிகளின் பலவீனங்களால்தான் பலர் குபேரர்கள் ஆகின்றார்கள்.
8. பல குடும்ங்களின் பிரிவினைகளுக்குக் காரணம் குடிவெறி.
9. பல குடும்பங்களில் குடும்ப சுகமே இல்லை. அத்தனையும் குடி, குடித்து விடுகின்றது. (புரிகிறதா)

காற்றிலும், வெயிலிலும், மழையிலும் கடலிலும், வயலிலும் போராடி உழைப்பதில் பெரும்பங்கை மதுச்சாலைகளுக்குக் கொடுத்துவிடுகிறோம். ஐம்பதுகளுக்குப் பிறகு வைத்தியசாலைகளுக்கு கொடுக்கின்றோம். இறுதியில் நம் அடக்கத்திற்கு கடன் வாங்க வேண்டியுள்ளது. கொஞ்சம் சிந்திப்போமா?

## கலைத்தவசி கலைஞர் குழந்தைக்கு 'நாடகக்கீர்த்தி' எனும் தேசிய உயர்விருது



இலங்கை கலை கலாச்சார அமைச்சினாலும், இலங்கைக் கலைக் கழகத்தினாலும் 2012 - 2013ஆம் ஆண்டு அரச நாடக விழா கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த 15.03.2013 அன்று மாலை 6.00 மணியளவில் நடைபெற்றது. சிங்கள நாடகக் கலைஞரில் ஒருவரான கலைஞர் குணரட்ண அவர்களும், தமிழ் நாடக கலைஞரில் ஒருவரான முருங்கனைச் சேர்ந்த கலைத்தவசி குழந்தை செபமாலை அவர்களும் கலை கலாசார அமைச்சர் ரீ. பீ. ஏக்கநாயக்க பண்டாரநாயக்க அவர்களினால் இலங்கை கலைக்கழகத் தலைவர், அரச நாடக விழாக்குழுத் தலைவர் முன்னிலையில் 'நாடகக் கீர்த்தி' என்ற விருதும் ஐம்பது ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்கள்.

"மரபுக் கலைக்கு புது இரத்தம் பாய்ச்சியவர் பிதாமகன் பேராசிரியர் சரத் சந்திரா அவர்கள். அவரின் அடியொற்றி நாட்டுக்கூத்தை நவீன யுகத்திற்கு நடைபயிலச் செய்தவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள். இவ்விரு போராசிரிகளின் பாதையில் பயணித்து தமக்கு வாலயமர்ன கூத்துக்கலையை பூத்துக் குலுங்கச் செய்தவர் குழந்தை செபமாலை. கூத்துக்கலையோடு மட்டும் நின்றுவிடாது சமூக, சரித்திர, புராண, இலக்கிய, இசை, கவிதை நாடகங்களில் விளைச்சலுக்கும் நீர் வார்த்தது இந்தக் கலை'ஞான'க் குழந்தை. நாட்டுக்கூத்து மரபில் 27 நாடகங்களையும் ஏனைய நாடக வடிவங்களில் 43யும் எழுதியதன் மூலம் 70 கலைப்படைப்புக்களின் சிருஸ்ட்சிகர்த்தா. கலாபூசண விருது, வடகிழக்கு மாகாண ஆளுநர் விருது, சாஹித்திய விருது, கிழக்கு பல்கலைக்கழக தலைக்கோல் விருது என்பவை குழந்தை செபமாலை எனும் ஆளுமைக்குக் கிடைத்த அங்கீகாரங்கள். அந்த வகையில், இவர் மேற்கு இல்லாத கிழக்கு. தெற்கு வாழ்த்தும் வடக்கு. மொத்தத்தில் இவர் ஒரு இராக மாளிகை. பலவிதமான பாத்திரங்களில் தனது நடிப்பாற்றலை வெளிப்படுத்தியதோடு **அறுபது ஆண்டுகளாக நாடகத்தையும் நாட்டுக்கூத்தையும் சுவாசமாகக் கொண்ட கலைத்தவசி குழந்தை செபமாலை அவர்கள் 'நாடகக்கீர்த்தி' எனும் முதுகலைஞர் தேசிய விருது** வழங்கி கௌரவிக்கப்படுகிறார்" எனக் குழந்தை செபமாலை அவர்கள் பெற்றுக்கொண்ட விருதுக் கேடயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்விருது நாடக வளர்ச்சிக்குப் பங்காற்றியவர்களுக்கு அரச நாடக விழாவில் தமிழ் சிங்களம் ஆகிய மொழிகளில் முறையே ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு கௌரவிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. மேற்சொன்ன நிகழ்வில் கலைத்தவசி குழந்தை செபமாலையின் 'கல்சுமந்த காவலர்கள்' என்ற நாட்டுக்கூத்தின் ஒரு பகுதியும் முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தினரால் மேடையேற்றப்பட்டது.

# நம்பிக்கைத்துடுப்பாகும் இயேசுவின் உயிர்ப்பு

அருட்சகோதரர் பா. றொசான்,
(இத்திக்கண்டல், அடம்பன்)
புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

"கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை பயனற்றதே" (1கொரி 15:17).

மாற்றம் காணும் உலகில் பல மாற்றுக்கருத்துக்கள் மனிதர்களை மாற்றி விடுகின்றன. வாழ்க்கை எனும் படகை பணம், பேராசை, பட்டம், பதவி, புகழ்ச்சி, சுயநலம், அறிவு போன்ற அலைகள் அலைக்கழிக்கின்றன. 'எம்மதமும் சம்மதம்' எனப் போலி வேசம் பூண்டு கடவுளை புறம் தள்ளுகின்றன. மனித சக்திக்கு நிகர் எது! எனக்கூறி கடவுள் சக்தியை எட்டிப்பிடிக்க முயற்சிக்கின்றன. ஆனால் இறை சக்தியோ மாபெரும் சக்தி என்ற உண்மையை இயேசுவின் பிறப்பு, உயிர்ப்பு வெளிப்படுத்தி நிற்கின்றன.

கிறிஸ்துவின் உயிர்ப்பே மனித வாழ்வின் -. சிறப்பாக எம் கிறிஸ்தவ வாழ்வின் மையமாகத் திகழ்கின்றது. இறைவன் என்னும் இனிய நங்கூரத்தைப் பற்றிக்கொண்டு, வாழ்க்கை எனும் படகை, நம்பிக்கை எனும் துடுப்பினால் இயக்கி, உலகம் என்ற கடலில் பயணித்து வெற்றிபெறுபவர்களே கிறிஸ்தவர்கள். இயேசுவின் உயிர்ப்பு எம் வாழ்வின் நம்பிக்கைத்துடுப்பாக மாறவேண்டும். மனிதர்கள் துன்பம் என்னும் உலையில் புடமிடப்படும் பொழுதெல்லாம் நம்பிக்கை எனும் ஒளிக்கீற்று அவர்களின் துன்பத்தை தாங்க மனவலிமையைத் தருகின்றது. துவண்டுவிடும் நேரத்தில் தோள்கொடுப்பது இறை நம்பிக்கை. இது இயேசுவின் உயிர்ப்பில் நாம் கொள்ளும் ஆழமான உறுதியான நம்பிக்கையே.

ஓய்வுபெற்ற பரிசுத்த பாப்பரசர் 16ம் பெனடிக்ட் அவர்கள் 2012- 2013ம் ஆண்டினை நம்பிக்கை ஆண்டாக பிரகடனப்படுத்தி 'நம்பிக்கையின் வாசல்' (Porta Fidei) என்ற மடலையும் வெளியிட்டார். இன்று கிறிஸ்தவ நம்பிக்கையை தளர்த்தும் காரணிகள் பல வலம் வந்துகொண்டிருக்கின்றன. மனித வாழ்க்கை என்பது ஒரு நம்பிக்கைப் பயணம். அன்றாட நிகழ்வுகளிலும் எதிர்காலம் சார்ந்த திட்டங்களிலும் நம்பிக்கை இல்லையேல் வாழ்க்கைப்பயணத்தைத் தொடர முடியாது. நம்பிக்கை மனித உறவுகளில் பல்வேறு பரிணாமங்களையும், பரிமாணங்களையும் தொட்டுத் தொடர்கின்றது.

இறைவன்மீது கொண்டுள்ள நம்பிக்கை நீண்ட வரலாற்றுப்பயணத்தின் பிரதிபலிப்பாகும். அதிலும் குறிப்பாக கிறிஸ்தவ நம்பிக்கை (Christian Faith) என்பது பல நூற்றாண்டுப் பயணத்தின் வெளிப்பாடு ஆகும். காலம் காலமாக முன்னறிவிக்கப்பட்ட இறைவாக்குகள் பலவற்றின் நிறைவேற்றல் செயற்பாடு எனலாம். இறைமகன் இயேசுவின் மானிடப்பிறப்பில் தொடங்கி 'கிறிஸ்து நிகழ்வு' எனப்படும் அவரின் பாடுகள், மரணம், உயிர்ப்பு, விண்ணேற்பு ஆகியவற்றில் பொதிந்துள்ள 'மீட்பின் திட்டத்தை' அறிந்து அறிக்கையிட்டு வாழ்வதற்கான அழைப்பே 'கிறிஸ்தவ நம்பிக்கை' ஆகும்.

இயேசுவின் உயிர்ப்பின் பின்னரே கிறிஸ்தவம் உருவெடுத்தது. கிறிஸ்துவின் உயிர்ப்பிற்கு சாட்சியமாகவே சீடர்களின் வாழ்வும், போதனையும் அமைந்திருந்தன.

எமது கிறிஸ்தவ வாழ்விற்கு இயேசுவின் உயிர்ப்பே அச்சாணியாக இருக்கின்றது என்பது வெள்ளிடை மலையாகும். புனித பவுல் 1கொரி 15:14 இல் கூறுகின்றார். "கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும், நீங்கள் கொண்டிருக்கின்ற நம்பிக்கையும் பொருளற்றதாயிருக்கும்." இயேசுவின் உயிர்ப்பே இறைநம்பிக்கைக்கு வழிவகுத்தது. இயேசுவின் இறப்பு ஆடுகள் வாழ்வைப்பெற, மீட்பை அடைய அவரின் 'தற்கையளிப்பு' (Self Sacrifice) என்றே கூற வேண்டும். "தந்தையே உமது கரங்களில் என் உயிரை ஒப்படைக்கின்றேன்" (லூக் 23:46) என்று கூறுவது தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுவதன் அடையாளமாகும். யூதச் சமயத்தலைவர்களுக்கும், உரோமை அரசுக்கும் இது ஒரு கொலையாக அமைந்தது. ஆனால் இயேசுவைப் பொறுத்தவரையில் தனது இறப்பு மக்களுக்கு நிறைவாழ்வை, முடிவற்ற வாழ்வை, புது வாழ்வை கொடுத்தது என்று அவர் திடமாக நம்பினார். எனவேதான் இயேசு "கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும்" (யோவா 12:23) எனக் கூறினார்.

"என் வார்த்தையைக் கேட்டு என்னை அனுப்பியவரை நம்புவோர் நிலைவாழ்வைக் கொண்டுள்ளனர். அவர்கள் தண்டனைத் தீர்ப்புக்கு உள்ளாக மாட்டார்கள். ஏற்கெனவே சாவைக்கடந்து வாழ்வுக்கு வந்துவிட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கின்றேன்." (யோவா 5:21) எனக் கூறுகின்றார். இயேசுவின் உயிர்ப்பில் நாம் கொள்ளும் நம்பிக்கை எமது வாழ்வின் உயிர்ப்பிற்கும், மறுவுலக வாழ்விற்கும் எம்மை இட்டுச்செல்லும் என்பது உண்மை. நாம் பிறக்கும்போது ஆதாமின் இயல்பிலே பிறக்கின்றோம். உயிர்தெழும்போது இயேசுவோடு ஒன்றித்து உயிர்த்தெழுவோம்.

இன்று எம் கிறிஸ்தவ வாழ்வில் நம்பிக்கையைத் தளர்த்துகின்ற பல காரணிகள் உருவாகிவருகின்றன. குன்றிச்செல்லும் இறை பக்தி, கடவுளைப்பேரம் பேசும் போக்கு, கடவுள் தேவையில்லை என்ற போக்கு, நம்பிக்கை வாழ்வில் தெளிவின்மை, தனி மனித குடும்ப வாழ்வில் போராட்டம், கணணி இணையத்தள உலகச் சவால்கள், எதுவும் பாவம் இல்லை என்ற மனப்போக்கு போன்றவை இன்று கிறிஸ்தவ வாழ்வின் நம்பிக்கையைத் தளர்த்துகின்றன.

இயேசுவின் உயிர்ப்பு எம் இவ்வுலக வாழ்வின் உயிர்ப்புக்கு அடிகோல வேண்டும். அதாவது பாவ வாழ்வில் இருந்து பரிசுத்த வாழ்விற்கு எம்மை இட்டுச்செல்ல வேண்டும். எம் தீய வாழ்வை குழிதோண்டி புதைத்துவிட்டு இறைநம்பிக்கையுடன் எம் வாழ்வையும் உயிர்த்தெழச்செய்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கியச் சாளரம்

# கவிதைக் களம்

## மனிதா! இன்னும் என்ன செய்யப்போகிறாய்?

மதுஷா, கனடா.

பல ஆண்டுகளாய் கட்டவிழ்க்கப்பட்ட வன்முறைகள்
இன்றுவரை எம் மண்ணில் முடிந்ததாய் இல்லை
தாய் மண்ணே எப்போது என்னை அழைப்பாய்
குருதி உறைந்த என் பூமிக்கு?

பல்லாயிரம் பேர் பசி போக்க விழைந்த நிலம்
ஒருவேளைச் சோற்றுக்காய் கையேந்தி நின்றது – அன்று
துளைத்துச் சென்ற சன்னங்களால்
தொலைத்துக்கொண்டிருந்தோம் எம் உறவுகளை!

தலைநிமிர்ந்தால் உடல் வேறு தலைவேறு
முன்பெல்லாம் 'என்றோ இறப்போம்' என்ற எண்ணம்
இப்பொழுதெல்லாம் 'இன்றே மரணித்து விடுவோமோ'
என்றொரு ஏக்கம்!

உயிரற்ற உடலில் முலைதேடிய பிஞ்சுக் குழந்தைகள்
பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த தம் குழந்தைகளை
உயிரற்ற உடலாய் சுமந்த வியாகுல அன்னையர்கள்
என்னதான் குற்றம் புரிந்தோம் நாம்?

தந்தையர் உடல்கள் உயிரற்றவை என்றுகூடத் தெரியாது
அணைத்து உறங்கிய பிள்ளைகள்
கணப்பொழுதில் விதவைகளாயான பெண்கள்
தள்ளாடும் வயதில் பரிதவித்த முதியோர்கள்!

கலைந்துபோன கனவுகளுடன்,
சிதைக்கப்பட்ட உடல்களோடு
ஊனமாய்ப்போன இளைஞர்கள்!
ஊனமாய்போனது உடல்கள் மட்டுமல்ல
அவர்கள் உறவுகளும்தான்!

ஆறாடி நிலம்தான் இறுதியில் சொந்தம்
அதற்குக்கூட சொந்தமில்லாத
மனிதர்கள் நாம் என்பதுதான்
அன்றைய உண்மை.
இது யாருக்குப் புரியும்?

உறவுகளைத் தொலைத்து – எம்
உணர்வுகளைக்கூட தொலைத்தும்
எமக்கு சூட்டப்பட்ட பெயர்
'முட்கம்பி வேலிக்குள் முடங்கிப்போன அகதிகள்!'

சோதனைகளும், விசாரணைகளும்
எம் மண்ணை இழந்தும்கூட முடிவதாய் இல்லை.
மானம் காக்க முடியாதவர்களாய்
தன்மானம் இழந்து நின்றோம் எம் சொந்த மண்ணில்!

மனிதனே நீ இன்னொரு உயிரை எடுக்க
தகுதியானவனா என்று உன்னையே ஒருமுறை கேட்டுப்பார்!

## விடுதலைக்காய்


கண்ணீர் என்னும் கடலினிலே காகித ஓடமாய்
கரைந்துவிட்டது எம் வாழ்வு
ஓராயிரம் கனவுகளைச் சுமந்த எம் இதயங்கள்
இன்று கானல் நீரை மட்டும் கண்ணால் பார்க்க முடிகிறது.

நெஞ்சினிலே தாங்கொணா சுமைகளையும்
உடலிலே மாறாத வடுக்களையும்
மனதிலே மாற்றமுடியாத கவலைகளையும் சுமந்துகொண்டு
உரிமை கேட்டு நிற்கிறது மனிதம் விடுதலைக்காய்.

சிறகடித்துப்பறந்த காடுகள் மாறி - இன்று
சிரித்து வாழ்ந்த காலங்கள் மாறி
சிறுவரின் சித்திரம் கிழிக்கப்பட்டு
சிறுமை நீங்கிக் கேட்கிறது விடுதலைக்காய்.

சிரித்துப் பேசி திரிந்த காலம் கேட்டு
சிந்தித்து செயற்படவேண்டிய உரிமை கேட்டு
சிறைக்கம்பி உடைத்து சிறந்த வாழ்வு கேட்டு
ஏங்குகிறது எம் மனிதமனம் விடுதலைக்காய்

*அ. றூபிகா லியோன், முத்தரிப்புத்துறை.*



*'முட்கம்பி வேலிக்குள் முடங்கிப்போன அகதிகள்!'*

## விடியலை நோக்கி

கார்மேகம் மூடி கதிரவன் ஒளிபெற
புத்துயிர் பெறுகின்ற புவிதனிலே
வெற்றிநடை போட்டு வீரத்துடன்
கையளிக்க வேண்டிய நேரமிது.

உண்மைகளையும் உணர்வுகளையும்
மறைப்பதில் நியாயமில்லை.
சற்றென திரும்பிப்பார் நண்பா
உன் உலகம் எவ்வளவு புதுமையானது என்று.
இனமும், மதமும், மொழியும் என்றோ
சுனாமி என்ற சுழியில் புதைக்கப்பட்டுவிட்டது.

இன்று நீயும் நானும் இணைபிரியா நண்பர்கள்
பழைய உணர்வுகளை மறந்துவிடு
கம்பீரமாய் எழுந்து வா
இனியும் அடிமையாய் இராதே
நமக்கென சுதந்திரம் பெற
விடைபெறும் நேரமிது
விடியலை நோக்கிப் புறப்படு.

*பி. ஜோய்பிரவின் துரம், புனித அந்தோனியார் வீதி, தாழ்வுபாடு*

## கொஞ்சம் —— —— சிரிங்க

ராஜா :- பால்காறன் வீட்டில கலியாணம் கட்டினியே வாழ்க்கை எப்படிப் போகுது?
ரவி :- மாடு மாதிரித்தான் போகுது அந்தக் குடும்பமே கறக்குது மச்சான்.

..........................................

பெண் :- ஹார்ட் அட்டாக் வந்தா என்ன முதலுதவி செய்யணும் டொக்டர்?
டாக்டர் :- எதுக்குக் கேக்கிறீங்கள்?
பெண் :- நேற்று கடையில நான் சாறியொண்டு வாங்கினனான். பில்லை இனித்தான் புருசனுக்குக் காட்டப்போறன்.
*சு. சிறோமினி, கன்னாட்டி, அடம்பன்.*

ஒருவர் :- என் மனைவியை நான் 30 வருஷம் பிரிந்திருந்தேன்.
மற்றவர் :- அப்படியா ஏங்க?
ஒருவர் :- எனக்குக் கல்யாணம் நடந்ததே 30 வயசிலதான்.

..........................................

சீலன் :- எங்கட அப்பா சிக்கனமானவர். ரேடியோவில் செய்தி மட்டும்தான் கேட்பார்.
சுதா :- இதென்ன பெரிய சிக்கனம்! எங்கட அப்பா செய்திச் சுருக்கம் மட்டும்தான் கேட்பார்!
*கெ. சுகந்தினி, பொன்தீவுகண்டல், அளவக்கை.*

டொக்டர் :- எனக்கு நேரமாச்சி என் மனைவி சாப்பிடாமல் இருப்பாள்.
நண்பர் :- இந்தக் காலத்தில இப்படி ஒரு மனைவியா?
டொக்டர் :- நான்தான் போய் சமயல் பண்ணிக் கொடுக்கணும்.
*பி. சகாய தேவி, அந்திரை.அப் ஆலயம், தோட்டவெளி.*

நண்பன் :- டேய் மச்சான் ஏன்டா, உன்ர மனைவி உன்னோட ஒட்டித்திரியிரா?
நண்பன் :- சனியன் என்றா என்னோடதானே ஒட்டி திரியும!

..........................................

மகள் :- அப்பா, பேய் எப்படிப்பா இருக்கும்?
அப்பா :- உன்னோட அம்மா மாதிரியே இருக்கும!
*வை. எம். டர்ஷிக்கா, நானாட்டான்.*

# சிறுகதை

## சீதனம்

இ. கல்பனா முருங்கன், மன்னார்.

சாளரத்தினூடாக மெல்ல நுழைந்த தென்றல் மென்மையாக உடலைத் தழுவிச் செல்ல கண்விழித்தாள் கவிதா. காலைப்பொழுது நன்றாகவே விடிந்திருந்தது. கவிதா கண்விழித்ததைக் கண்டதுபோல அவளின் தொலைபேசியும் மெல்லமாய் அழைத்தது.

"ஹலோ ……. குட்மோனிங்…" என்றாள் கவிதா

"குட்மோனிங் கவி, எழும்பீற்றீங்களா? என்றது மறுபக்கத்திலிருந்து ஒரு குரல்.

"ம்ம் …. இப்பதான் எழும்பினன். சொல்லுங்க ரவி" என்றாள்.

"கவி…… உங்களோட கதைக்கோனும். 9.00 மணிக்கு பூங்காவுக்கு வாங்க கவி… நான் அங்க வாரான். நேரில எல்லாம் கதைப்போம்" என்றான் ரவி.

கவிதாவின் மனம் குழப்பத்தில் தவித்தது. விரைவாக எழுந்து வேலைகளை முடித்துக்கொண்டு ரவியைச் சந்திக்கச் சென்றாள்.

'வாங்க கவி…' என்றான் ரவி.

'என்னாச்சு ரவி….' பதற்றத்துடன் கேட்டாள் கவிதா.

"கவி … நம்மோட காதலப் பற்றி வீட்ட சொன்ன நான். அம்மாதான் பிடிவாதமா மறுத்திட்டாங்க. இதுபற்றி கதைக்கத்தான் வரச் சொன்னன்" என்றான்.

"ரவி …ர..வி நீங்க என்ன முடி… முடிவெடுத்தீங்க?" நான் ….நா வந்து … கவி அம்மாதான் மறுத்திட்டாங்க தானே. இனி போராடி பயன் இல்லை. அதனால் ரெண்டு பேரும் பதிவுத் திருமணம் செய்யலாம். சரியா? உங்க முடிவு கவிதா?" என்றான்.

கவிதாவின் விழிகளைக் கண்ணீர் தழுவிட அவன் கைகளைப் பற்றியவள், "யுத்தத்தில எல்லா உறவுகளையும் இழந்து அநாதையா நிக்கிற எனக்கு ரெண்டு வருஷமா உங்கட அன்பும் அரவணைப்பும்தான் ஆறுதல் தந்தது. ஆனா ஆதரவற்று நிக்கிற நான் இப்ப உங்க குடும்பத்தையும் எதிர்த்துவந்து என்ன செய்யுறது? அதுமட்டுமல்ல எனக்காக நீங்களும் உறவுகளை விட்டுவந்து தவிக்கணுமா?" என்றாள்.

"இல்லை கவி…. அதெல்லாம் பிறகு சரியாகிடும்" என்றவன் பல்வேறு காரணங்கள் கூறி பதிவுத்திருமணத்திற்கு கவிதாவின் சம்மதம் பெற்று நண்பர்களின் உதவியுடன் திருமணமும் செய்தான். நாட்களும் பல உருண்டோடின, மாதங்களும் பன்னிரெண்டைக் கடந்தது. ரவியின் காதல் திருமணத்தை பெற்றோர் ஏற்றுக்கொள்ளவில்லை. ரவி கவிதாவை சந்தோசமாக வைத்திருந்தான். ஆனால் கவிதாவின் மனம் தாய் தந்தையை இழந்து தவிக்கும் தன்னைப்போல ரவியையும் தவிக்க வைத்து விட்டோமே என்று உள்ளூர அழுதது. அம்மா, அப்பா, இரண்டு அண்ணா, அக்கா, ரவி கொண்ட அழகிய குடும்பம். சகோதரி திருமணம் முடிந்து வெளிநாட்டில் வசிக்கிறார். மூத்த அண்ணாவிற்கு நிச்சயிக்கப்பட்ட திருமணம் என்றாலும் வசதி படைத்த மாமன் மகளையே மணமுடித்து வைத்தனர். அதிக சீருடன் வந்ததுபோல தனிக்குடித்தனமும் போய்விட்டனர். இளைய அண்ணன் காதல் திருமணம் என்றாலும் இருவரும் தனியார் கம்பனியில் உயர்பதவியில் இருக்கின்றனர். ரவியின் தந்தை அமைதியானவர். அதற்கு எதிரானவர் ரவியின் தாய் மாலா. அன்னைக்குரிய அன்பு பாசம் இருந்தாலும் தான் நினைத்ததைச் செய்யும் பிடிவாதக்காரியும்கூட. ரவி கம்பனியொன்றில் வேலை செய்து வருகின்றான்.

கவிதா படித்திருக்கிறாள். வேலைக்குப் போவதில்லை தையல் வேலை செய்வாள்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## மன்னா விளம்பரப் பலகை

அமைதியான உள்ளமே மகிழ்ச்சிக் கடலின் எல்லை
*சி. சுகனியா, திருக்குடும்ப கன்னியர் மடம், பெரிய பண்டிவிரிச்சான், மடு.*

"ஒருவர் தன் பாதையைத் தெரிந்தெடுக்கும்போதே அவருடைய முடிவு தீர்மானிக்கப்படுகிறது."
"பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் முதல் நண்பர்களாக இருக்கும் பட்சத்தில் ஒவ்வொரு இளைஞனும் சாதனையாளன் தான்."
*ம. தர்மிகா, இல-109, பெரிய பண்டிவிரிச்சான், மடு.*

"ஒருவர் உரைக்கும் உண்மை என்றும் நிலைக்கும்.
பொய்யுரையின் வாழ்வோ இமைப்பொழுதே நீடிக்கும்"
*க. சிறோமி, இலுப்பைக்குளம், நேரியகுளம்.*

"வளமுடன் வாழும்போது நண்பர்கள் உன்னை அறிவர்.
வறுமையில் வாழும்போது நீ நண்பர்களை அறிவாய்"
*க. நிதர்சன், இலுப்பைக்குளம், நேரியகுளம்.*

"தன்னைத்தானே வெற்றிகொள்வதுதான் சாதனைகளில் சிறந்தது. இந்த வெற்றியை அறிந்தவருக்கு தோல்வி என்பதே கிடையாது"
*எம். ஸ்ரீபன், ஆக்காட்டிவெளி.*

பிரச்சினை இல்லாமல் மனிதன் இல்லை.
பிரச்சினை இல்லாதவன் மனிதனே இல்லை.
*செ. நிக்சலா, இலுப்பைக்குளம், நேரியகுளம்.*

"தன்னை நினைத்தால் சுயநலம் வாழும்
தன்னை மறந்தால் பொதுநலம் வாழும்
தன்னை நினைத்திருந்தவன் புகழைவிட
தன்னை மறந்திருந்தவன் புகழே அதிகம் பேசப்படும்."
*பு. டனிஸ் ஷர்மிலன், இல-95, முதலியார்குளம், செட்டிகுளம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்மீன்களை நோக்கி .....

தொடர் கட்டுரை

— ஆங்கில மூலம் —

அமரர். அருட்கலாநிதி பப்ரிஸ் குரூஸ் FSC

அத்தியாயம் – 26

*தமிழாக்கம்: அ. யோ. மரியநாயகம் சோசை J.P வங்காலை.*

## பீடப்பணியாளன் - அன்ரன்

"மம்மி நான் எனது வேலையை முடித்துவிட்டேன். கடைசித் தேங்காயையும் துருவிவிட்டேன். நான் கோவிலுக்குச்செல்ல வேண்டும். இன்று பூசைக்கு உதவுவது என்னுடைய முறை" என்று கூறிய அன்ரன் தேங்காய் துருவையை ஒரு பக்கமாக வைத்தான். "நன்றி மகனே! அது மிக நல்ல காரியம். நீ இப்பொழுது கோவிலுக்குச் செல்லலாம். தயவுசெய்து எனக்காகவும் ஒரு வினாடி வேண்டிக்கொள்ள மறவாதே" என்று இடியப்பம் அவித்தவாறு இருந்த அவன் தாய் அக்னெஸ் கடந்த 15 வருட காலமாக தனது காலத்தைத் தள்ளிக்கொண்டிருக்கிறாள். அன்ரன் மழலையாய் இருக்கும்பொழுதே அவளுடைய கணவர் புற்றுநோயால் இறந்துவிட்டார். ஆயினும் அவள் தன்னுடைய காலில் நிற்கும் தைரியத்தைப் பெற்றிருந்தாள். உண்மையில் அன்ரனைப்பற்றி அவள் பெருமைப்பட்டுக்கொண்டிருந்தாள். அவன் எவ்வேளையிலும் அவளோடு இணைந்து அவளுடைய பலத்தின் கோபுரமாக இருந்து வந்தான்.

அன்ரன் கோவிலுக்கு சென்றபின் அடுத்த பகுதி இடியப்பத்தை அவிப்பதற்காக அவள் மாவைப் பிசைந்துகொண்டிருந்தாள். தன்னுடைய பழங்காலத்து வாழ்க்கையின் விசேடமாக தனது கணவனின் அகால, சோகமான மரணத்தைப் பற்றிய நினைவுகளில் எண்ணத்தை ஓடவிட்டாள். அவள் தனது மகனின் ஒளிமிகுந்த சாதனைகளையும் அவனின் பெருந்தன்மையான குணாதிசயங்களையும்பற்றி அதிசயிக்கத் தொடங்கினாள். அன்ரன் தனது தாயினால் ஒரு அபூர்வ - நல்ல பையனாக உருவாக்கப்பட்டான்.

அவள் தனது கணவனுடைய மரணத்தின்பின் அன்ரனைக் கடவுளுக்குப் பயந்த சுபாவத்துடன் அன்பும் ஆதரவும் காட்டி பலவிதமான ஆலோசனைகளும், எண்ணங்களுமூட்டி வளர்த்து வந்தாள். அன்ரன் அவள் தாயின் எண்ணப்படியே திறமையாக வளர்ந்து தற்பொழுது க.பொ.த.சா/த பரீட்சைக்குத் தோற்ற ஆயத்தமாக இருந்தான். அவன் ஒரு பிரபல்யமான விளையாட்டு வீரன். அநேகமாக தனது பாடசாலையில் அவன் ஒரு கதாநாயகனாக விளங்கினான். தலைமை ஆசிரியரும், மற்றும் ஆசிரியர்களும் அவனுக்கு மதிப்புக் கொடுத்தனர். மாணவர்கள் அவன்மீது பற்று வைத்திருத்திருந்தனர். அந்த ஊரில் எல்லோராலும் விரும்பப்பட்டான். பாடசாலைக்கு படிக்கச் செல்லும் வேளைகளில் ஊராருக்கான எடுபிடி வேலைகளை மிகத்தாராளமாகச் செய்துகொடுப்பான். அவனது கவர்ச்சியான புன்னகையும், உற்சாகமிக்க குணமும் யாவரையும் அவன்மீது அன்புகொள்ள வைத்தது. பலிப்பூசைகளுக்கு ஒழுங்காக வருவதினாலும் பீடப்பரிசாரகர்களின் கூட்டத்தில் அவன் ஒரு உயிர்நாடியாகவும் இருந்தபடியினாலே பங்குக் குருவானவர் அவன்மீது விசேட அன்பு வைத்திருந்தார்.

ஒரு நாள் அன்ரன் பூசை முடிந்து வீட்டுக்குச் சென்று கொண்டிருக்கும்பொழுது அவன் ஓடிச்சென்ற பழைய துவிச்சக்கரவண்டியின் பிறேக் திடீரென உடைந்ததன் காரணமாக அந்த வண்டி அவனது கட்டுப்பாட்டையும் மீறி எதிரே வந்த ஒரு ட்றக் வண்டியுடன் மோதியது. அதன் காரணமாக அவன் தூக்கி வீசப்பட்டான். அவனது தலை ஒரு பாரிய கல்லில் மோதி மூர்ச்சையற்று அறிவிழந்தான். தலையில் பெரியதொரு காயம் ஏற்பட்டது. வழிப்போக்கர்களின் உதவியுடன் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டான். அவன் மிகவும் ஆபத்தான நிலையில் இருந்தான்.

அன்ரனின் கோர விபத்து காட்டுத்தீபோன்று பரவியது. முழுக்கிராமமும் மனவேதனையடைந்தது. காரணம் அவன் யாவராலும் விரும்பப்பட்ட ஒருவனாக இருந்தான். பாடசாலையில் ஒரே அதிர்ச்சி. தலைமையாசிரியர் வைத்தியசாலைக்கு விரைந்தார். பங்குத்தந்தை சில பீடப்பரிசாரகருடன் வைத்தியசாலைக்குச் செல்வதில் ஒரு வினாடிகூடத் தாமதிக்கவில்லை. பங்குத்தந்தை தலைமை ஆசிரியருடன் அன்ரனைக் கிடத்தியிருந்த விசேட கவனிப்புப் பகுதிக்குள் செல்லமுடிந்தது. பாடசாலைப் பிள்ளைகள் விசேடமாக அவனது வகுப்புத்தோழர்கள் அன்ரன் குணம்பெற ஒரு அழகான "சுகம் பெறுக" மடல் ஒன்றை தங்கள் கையொப்பமிட்டுத் தயாரித்து மலர்க்கொத்துடன் சேர்த்து அனுப்பினார்கள்.



அந்தக் கிராமத்தில் அன்று யாரும் தூங்கவில்லை. அக்னெஸ் வைத்தியசாலைக்குச் சென்றதனால் அவளுடைய வீட்டை இராக்காவல் செய்வதிலும் அதை பாதுகாப்பதிலும் ஒவ்வொருவரும் ஈடுபட்டிருந்தனர். அவனுக்குத் தேவையான வைத்தியச் செலவைச் சமாளிக்க ஒரு கூட்டம் ஊராரிடம் இருந்து பணம் சேகரித்தனர். அதிகாலையிலே அன்ரன் கூடிய விரைவில் குணம்பெற வேண்டும் என்பதற்காக சிறப்பான பூசைப்பலியிலே மக்கள் பங்கெடுத்தனர். அநேக சிறுவர்கள் மலர்களைச் சேகரித்து அனுப்புவதில் ஈடுபட்டனர்.

அன்ரனின் அபாயகரமான விபத்து என்னவொரு மன எழுச்சியையும் இரக்கத்தையும் வெளிக்காட்டியுள்ளது! கிராமத்தில் ஏற்பட்ட ஒற்றுமையும் ஒத்துழைப்பும் ஒரு மனிதனின் சிறந்த வாழ்க்கைக்கு என்ன செய்ய முடியும் என்பதனை எடுத்துக்காட்டிற்று. ஒரு மனிதனால் அந்த மாற்றத்தைச் செய்ய முடியும். அவனோ, அவரோ மக்களிடம் நிறைந்த அளவுக்கு செல்வாக்குப் பெறமுடியும். யாவும் ஒருவரின் சிறந்த பழக்கவழக்கத்திலும் குணாதிசயத்தின் பலத்திலுமே தங்கியுள்ளது.

சில கடுமையான அறுவைச் சிகிச்சையின்பின் அன்ரன் ஆபத்து நிலைமையைத் தாண்டியுள்ளதாக வைத்தியர் அறிவித்தார். ஊரிலே யாவருக்கும் ஒரே நிம்மதி. அக்னேஸ் முற்றாகச் சோர்ந்துவிட்டாள். ஐந்து நாட்கள் வைத்தியசாலையில் தனது அன்பு மகன் அன்ரனைப் பராமரித்துவிட்டு வீடு திரும்பினாள். அயலவர்கள் அவளுக்கு ஆறுதல் சொல்ல விரைந்தார்கள். பக்கத்து வீட்டாரினால் உணவு தயார்செய்து கொடுக்கப்பட்டது. மக்கள் அன்ரன்மீது வைத்திருந்த உயர்ந்த மதிப்பீடு, பற்று, பாசம், நல்லெண்ணங்களைக் கண்டு அக்னெஸ் பூரித்துவிட்டாள். ஏனென்றால் அன்ரன் தன்னுடைய நற்பண்புகளாலும், நல்நடத்தையின் பலனினாலும் ஊர் மக்களின் செல்லப்பிள்ளை ஆனான்.

**உயர்வை அடைவதற்குரிய வழிகள் :**

கெட்ட பழக்கத்தை நிறுத்து.
எதிரியை அன்பு செய்.
நியாயமாகச் சிந்தி.
அறிவீனத்தை ஒத்துக்கொள்.
நீதியின்படி நட.
நேர்த்தியாக வளர்ந்துவா.
அவசரமின்றி வேலைசெய்.
பொறுமையோடு காத்திரு.
முறைப்படாமல் துன்பப்படு.
மௌனமாயிருப்பது எப்போதென்று தெரிந்துகொள்.
தவறுகளில் அலட்சியமாயிராதே.
கஷ்டத்தின் மத்தியிலும் மனத்தை ஒருநிலைப்படுத்து.
பிரத்தியேக குணத்தை இழக்காமல் விரோதத்தை சகித்துக்கொள்.
புகழ்ச்சியைப் பாராது சேவை செய்.

# உங்களுக்குத் தெரியுமா?
## மறையறிவுப் போட்டி- 116

*தொகுப்பு : திரு ச. மாட்டீன் டயஸ்*

இம்மாதத்திற்கான வினாக்கள் 135ம் திருப்பாடலிலிருந்து 143ம் திருப்பாடல் வரை உள்ள பகுதியிலிருந்து தொகுக்கப்படுகின்றன.

இவற்றில் 135ம் திருப்பாடல் இறைவன் இஸ்ராயேல் இனத்துக்கு செய்த நன்மைத்தனங்களுக்காக இறைவனைப் புகழ்ந்து பாடும் பாடலாகவும் 136ம் பாடல் இறைவனின் பேரன்பை நினைந்து வாழ்த்தும் பாடலாகவும், எகிப்திலிருந்து செங்கடலைக் கடக்கும் வரை இறைவன் செய்த நன்மைத்தனங்கள் அவரின் பேரன்பால் விளைந்தவை என்று பாடப்படும் பாடலாகவும் அமைந்துள்ளன.

137ம் பாடல் இஸ்ராயேலரின் இன்னுமொரு அனுபவத்தைச் சொல்கின்றது. பபிலோனியர்களால் அவர்கள் அடிமைப்படுத்தப்பட்ட வரலாறு. அது ஆற்றங்கரையிலிருந்து அவர்கள் மீட்டிய துன்ப கீதம். 138ம் 139ம் 140ம் பாடல்கள் தாவீதரசனால் பாடப்பட்டவை. இறைவன் தாவீதரசனுக்கு செய்த அளப்பரும் நன்மைகளை எண்ணிக் கடவுளுக்கு நன்றி கூறும் பாடலாக 138ம் திருப்பாடல் அமைந்துள்ளது. 139ம் பாடல் இறைவனின் தேவபராமரிப்பின் மகிமையைக் கூறும் பாடலாக அமைந்துள்ளது. இருள், ஒளி நிமிடம், நாள், மாதம், இறந்தகாலம், எதிர்காலம் எல்லாம் இறைவன்முன் அர்த்தமற்றுப் போகின்றன என 139ம் பாடல் கூறுகின்றது. 140ம் திருப்பாடலும் தாவீதுக்குரியது. தான் தன்னைப் பகைவரிடமிருந்தும் தீயோனிடமிருந்தும் காக்கும்படி தாவீதரசன் வேண்டுகின்றார்.

**இனி நமது வினாக்களுக்கு வருவோம்.**

01. எமோரியரின் மன்னனையும் பாசானின் மன்னனையும் இறைவன் அழித்தார். கானான் நாட்டைத் தன் மக்களாகிய இஸ்ராயலேருக்கு அளித்தார். எமோரியரின் மன்னன் யார்?
02. ஆண்டவருக்கு நாம் நன்றி செலுத்த வேண்டும். ஏன்?
03. பபிலோனின் ஆறுகள் அருகே அமர்ந்து நாங்கள் சீயோனை நினைத்து அழுதோம். அங்கிருந்த அலரிச் செடிகள்மீது எங்கள் யாழ்களை மாட்டி வைத்தோம். இஸ்ராயேல் மக்கள் ஏன் இவ்விதம் செய்தார்கள்?
04. ஆண்டவர் திருவாய் மலர்ந்த சொற்களைக் கேட்டு அவரைப் புகழ்ந்து போற்றுவோர் யார்?
05. நான் வானத்திற்கு ஏறிச் சென்றாலும் நீர் அங்கே இருக்கின்றீர். பாதாளத்தில் படுக்கையை அமைத்துக்கொண்டாலும் நீர் அங்கேயும் இருக்கின்றீர். இவ்வாக்கியம் இறைவனின் எந்தப் பண்பை எடுத்துக் காட்டுகின்றது?
06. இறைவனின் கண்கள் எனது கரு துளையில் எதைக் கண்டன? என்னைப் பற்றிய எது கடவுளின் நூலில் எழுதப்பட்டுள்ளன?
07. ஆண்டவர் எதற்காக வழக்காடுவார்?
08. உடலின் எந்த உறுப்புக்குக் காவல் வைக்கும்படி தாவீதரசன் இறைவனை வேண்டுகின்றார்?
09. 142ம் திருப்பாடல் தாவீதரசனால் பாடப்பட்டது. இறைவனிடம் உதவி கேட்டுப் பாடப்பட்ட இப்பாடல் எப்போது பாடப்பட்டது?
10. உம்மை நோக்கி என் கைகளை உயர்த்துகின்றேன். .................. இவ்வாக்கியத்தை நிறைவு செய்க?

**மாணவர் மறையறிவுப் பகுதி இல. 114 இற்கான கேள்விகளுக்கு 40 பேர் விடையளித்திருந்தனர்.**

**இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி**

பீ. கஸ்தூரி, இல. 42, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

**பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்**

1. வி. ஆன் கில்டா, ஜோசவ் வாஸ் நகர், தோட்டவெளி.
2. வி. ஆன் சௌமியா, 5ம் வட்டாரம், விடத்தல்தீவு.
3. எஸ். பாஸ்கர் றோச், பள்ளிமுனை, மன்னார்.
4. கே. குவேனி, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
5. கே. கத்தறீன், நொச்சிக்குளம், உயிலங்குளம்.
6. பு. ஜெரோசியா, இல :- 95, முதலியார்குளம், செட்டிகுளம்.
7. ஆர். கிங்ஸ்ரினோ, கபித்தா மோட்டை, அடம்பன்.
8. ஞா. கிறிஷாந்தா, சாளம்பன், ஆட்காட்டிவெளி.
9. யே. பியூலா, யா/மெலிஞ்சுமுனை, ஊர்காவற்றுறை, கரம்பன்.
10. என். சி. யூலியானி றோச், பள்ளிமுனை, மன்னார்.

## அதிர்வுகள் ...............

10ஆம் பக்கத் தொடர்ச்சி

திருமணம் செய்தவர்கள்; 1. காதலித்துச் செய்திருப்பார்கள், 2. 'பேசி'ச் செய்திருப்பார்கள் அல்லது 3. 'ஓடி'ச் செய்திருப்பார்கள். எப்படிச் செய்திருந்தாலும், ஒருவர் ஒருவருக்கிடையிலான காதல் (அன்பு) அதிகரித்துச் செல்ல வேண்டும். ஆனால், காலம் செல்லச்செல்ல பல தம்பதிகளின் திருமண காதல் வாழ்வு இந்தியா பாக்கிஸ்தான் நாடுகளுக்கு இடையிலான உறவு போல இடைவழியில் மாறிவிடுகிறது. ஏன் கணவன் மனைவி உறவை, இந்தியா பாக்கிஸ்தான் நாடுகளுக்கிடையே ஒப்பிடவேண்டி வருகிறது என்றால்; இரு நாடுகளும் விளையாட்டுக்கு மட்டும் ஒன்றுசேர்வார்கள்! அதாவது, 'கிறிக்கற்' (Cricket) விளையாட்டுக்கு மட்டும்!! அதுபோலதான் சில தம்பதிகளும் ... !!! உவமானம் புரிகிறதுதானே. 'அந்த' விடயம்தானே, ஐயம்திரிபடத் தெளிவாக அனைவருக்கும் புரிந்துவிடும். இதிலும் சுவாரசியமானது என்னவென்றால்; இக்கட்டுரை எழுதி முடிந்து ஓரிரு வாரங்களில் அந்த விளையாட்டிற்கும் முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்கள் இருவரும் (இருநாட்டினரும்). இருவருக்கும் விளையாட்டு ஒன்றுதான் தொடர்பாயிருந்தது, இப்போது அதுவும் துண்டிக்கப்பட்டுவிட்டது. அதிலாவது ஒன்றுசேர்ந்து, ஒற்றுமையைக் காட்டுங்களேனப்பா என இருசாராரையும் பார்த்து இரந்து கேட்க வேண்டியிருக்கிறது! காதல் உறவு இடைநடுவில் முறிந்துவிடக் காரணம் என்ன என்று ஆராயும்போது, காதலிக்கும் காலங்களில் நடைமுறை யதார்த்தங்கள் கண்ணில் படுவதில்லை, அப்படிக் கண்ணில் பட்டாலும் அவற்றைப் புரிந்துகொள்வதில்லை, அவ்வாறே புரிந்துகொண்டாலும் அவற்றை அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. 'காதலுக்குக் கண்ணில்லை' என்று சொல்லப்படுகிறது. காதலுக்குத்தான் கண்ணில்லாமல் போனாலும் காதலிக்கிறவர்களுக்கு என்றாலும் இருக்கிறதுதானே கண்கள்! அவ்வாறெனில், கண்ணிருந்தும் பார்ப்பதில்லை என்றுதான் பொருள் கொள்ளவேண்டும். அதனால்தானோ என்னவோ, காதல் என்றால், "கண்கள் செய்யும் தவறுக்கு இதயம் அனுபவிக்கும் தண்டனை" என்கிறான் ஒரு கவிஞன்.

### காதல் செய்வோமா?

ஆக, காதலை இன்று பலர் குறிப்பாக இளவயதினர் பிழையாக, சினிமாப்பாணிக் காதலாக, புரிந்துகொள்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. அண்மையில் வெளிவந்த ஒரு பாடல் இசைப்பதுபோல, "ஆம்பளைக்கும் பொம்பளைக்கும் அவசரம், அத காதலுண்ணு சொல்லுறாங்க அனைவரும். காதல் ஒரு கண்ணாம்பூச்சி கலவரம், அது எப்போதுமே போதையான நிலவரம்... அவ(ன்) பொழுதுபோக்குக்கு ஒரு 'பிகர' பாக்கிறா, அவ செலவு பண்ணத்தான் ஒரு லூசு தேடுறா, இங்க ரண்டுபேருமே பொய்யாப் பழகிறா, அது புளிச்சிப்போச்சின்னா கைகுலுக்கிப் பிரியிறா..." காதல் இப்படிப்பட்டதுதான் என தப்புக்கணக்கு போட்டுக்கொள்கிறார்கள் தற்காலத் தலைமுறையினர்.

### காதலுக்கு, சரியான கலவை வேண்டும்!

உண்மையில், "நேசித்தல் - புரிதல் - பொருந்துதல் - மதித்தல் - சத்தியம் - சாத்தியம் எல்லாம் கூடிய கலவையே நல்ல காதல்" என்பார் கவிப்பேரரசு வைரமுத்து. இந்தக் கலவைகளில் ஒன்று குறைந்தாலோ காதல் கஸ்ரத்தில்தான் வந்து முடியும் என்பதை உணரவேண்டும், இளையோருக்கு உணர்த்தவும் வேண்டும். அவ்வாறாயின், கள்ளக் காதலுக்கு, கணக்குவிடும் காதலுக்கு சிவப்பு வெளிச்சமும்; உண்மைக் காதலுக்கு, நம்பிக்கை நிறைந்த காதலுக்கு, நாணயமான காதலுக்கு வேறென்ன பச்சை வெளிச்சமும் காட்டவேண்டியதுதானே. கறுப்புக்கொடி, பச்சைக்கொடி காட்டுகின்ற காலம் மலையேறிப் போனதால்தான் நிறத்தினால் அடையாளப்படுத்த வேண்டியிருக்கிறது. என்னசெய்வது, காலத்திற்கேற்ப குறிகளையும் மாற்றவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. உண்மைக் காதலையும் பொய்க் காதலையும் பிரித்தறிவதற்கு நல்ல புத்தியும், தெளிந்த அறிவும், ஞானமும் இருக்கவேண்டும். இவையிருந்தால் காதல்வாழ்வு இன்று ஏன் கலங்கிநிற்க வேண்டும்? (காதல் அதிர்வுகள் தொ...ட....ரு.....ம்......).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.129

## மத்தேயு நற்செய்தி முழுவதும்

உங்கள் விடைகளை மே மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ★ | 05 | | | | ★ | | 02 | 17 | ★ |
| 21 | | | 10 | 29 | ★ | 13 | | | |
| | | 15 | | ★ | | ★ | | | 19 |
| 28 | | | ★ | | | | ★ | 23 | 07 |
| 32 | | ★ | 01 | | 24 | | | ★ | |
| | | 34 | ★ | 09 | | 27 | ★ | | 04 |
| | 22 | | 06 | ★ | 31 | ★ | 11 | | 16 |
| 12 | | | | 33 | ★ | | 30 | | |
| | | | | 25 | | | | 20 | 26 |
| ★ | 08 | 18 | | | ★ | 14 | 03 | | ★ |

(___ என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. நீர் ...................... என்றால் கீழே குதியும்.
3. இவர்கள் என்னை வழிபடுவது .................... என்கிறார்." என்றார்.
5. சாவின் நிழல்___மேல் ............................ உதித்துள்ளது.
8. காலையில்___அவருக்குப் ...................... உண்டாயிற்று.
9. உங்கள் கண்___ஒற்றைக்கண்ணாய் .................... வாழ்வில் ___நல்லது.
11. என் இல்லம் இறை வேண்டலின் ...................... என___எழுதியுள்ளது.
13. ...................... விட உயிரும்___அல்லவா?
18. இதைக் கண்டுபிடிப்போர் ........................
21. அவர் அவர்களிடம்___போது ............... சிவந்திருந்தால்___சொல்வீர்கள்.
22. அவர் அவர்களைத் தொட்டு ............... வழங்கிய___சென்றார்.
25. அவர்கள், 'ஐயா' அந்த ..................... உயிருடன்___ நினைவிலிருக்கிறது.
28. அந்நேரம் அவர் மக்களின் ...................... நீங்கியது.

### வலமிருந்து இடம்

2. அப்பொழுது ......................... விலே ஒரு குரல் கேட்கிறது.
4. பாஸ்கா ...................... இரண்டு___தெரியும்.
10. அவர் ........................ செலுத்துகிறார் என்றார்.
15. இயேசு உடனே___ஏன் ............................ கொண்டாய்? என்றார்.
17. ...................... என்னிடம் வருகிறீர்? என்று கூறித்தடுத்தார்.
19. இதோ நான் என் ..................... உமக்குமுன் அனுப்புகிறேன்.
22. உங்களுள் எவரும் தம் ஒரே ............ ஓய்வு ___ இருப்பாரா?
24. இயேசு மறுமொழியாக உங்களுக்கு ............... நூலும் தெரியாது.
25. உங்கள் ...................... உங்களை___செய்துகொள்ளுங்கள்.
26. அவர் மறுமொழியாக நான் ............ விரும்பவில்லை என்றார்.
30. அதேநேரத்தில் திருக்கோவிலின்................ மேலிருந்து ___ கிழிந்தது.
33. ................ செய்பவரை எதிர்க்க வேண்டாம்.

### மேலிருந்து கீழ்

6. நான் உலகிற்கு .................... கொணர___வந்தேன்.
7. பேய் பிடித்த பலரை ............................ வேளையில் இயேசுவிடம் கொண்டுவந்தனர்.
10.............. பார்த்துச் செயல்படாதவர் என்பது எங்களுக்குத் தெரியும்.
12. ஒருவரை ...................... செய்தார்கள்.
15. நூற்றுவர் தலைவர் மறுமொழியாக .................. நீர் என்___ தகுதியற்றவன்.
16. அவர் நாளொன்றுக்கு ஒரு தெனாரியம் ........................ என___அனுப்பினார்.
20. உங்கள் ...................... களே பேறுபெற்றவை.
24. இயேசு மக்கள்___கண்டு .................. மீது ஏறி___ வந்தனர்.
34. இதோ .................... இங்கே___நம்ப வேண்டாம்.

### கீழிருந்து மேல்

4. .................. உயர்ந்த ஒரு___வாங்கிக்கொள்கிறார்.
8. இயேசு தம் சீடரை___கூட்டத்தின்மீது ........................ கொள்கிறேன்.
9. ஏனெனில் அவர்கள் .................... பெறுவர்.
12. அவள் தன் தாய்___எனக்குக் .................. என்று கேட்டாள்.
14. ஆனால் ............... அணையா நெருப்பிலிட்டுச் சுட்டெரிப்பார் என்றார்.
18. அவரைப் பற்றிய பேச்சு ............... நாடு முழுவதும் பரவியது.
19. .................... ஆவிக்கு எதிரான பழிப்புரை மன்னிக்கப்படாது.
20. எனவே பாம்புகளைப்போல___போலக் ........................ அற்றவர்களாகவும் இருங்கள்.
22. இங்கே இருப்பவருள்___மகனது ...................... வருவதைக் ___என்றார்.
23. அவ்வாறே இவற்றையெல்லாம்___மானிட மகன் ...................... நெருங்கி___கொள்ளுங்கள்.
24. நீங்கள் ..................... மாறியவர்கள்.___காட்டுங்கள்.
26. ...................... இறைவாக்கினரைக் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள்.
27. பின்பு அவர் மக்கள்___படகேறி ............. நாட்டு எல்லைக்குள் சென்றார்.
29. இவ்வாறே உங்கள் ....................... மனிதர்முன் ஒளிர்க.
31. இவரைக் குறித்தே ................. நிலத்தில் குரல் ஒன்று முழங்குகிறது.
32. ஆனால் நீங்கள் .................... என அழைக்கப்பட வேண்டாம்.

## சிறுகதை ........ 12 ஆம் பக்கத் தொடர்ச்சி

தன் காதலுக்கும் பச்சைக்கொடி காட்டுவார்கள் என எதிர்பார்த்த ரவியின் காதல் தாயாரினால் நிராகரிக்கப்பட்டுவிட்டது.

அன்று வழமைபோல கவிதா எழுந்து குளித்துவிட்டு கோவிலுக்குச் செல்லத் தயாரானாள். ரவிக்கு உணவை எடுத்து வைத்துவிட்டு கோவிலுக்குப் புறப்பட்டாள்.

கவிதா கோவிலுக்குச் செல்லும் வழியில் ரவியின் தாயாரை சந்திக்கும் சந்தர்ப்பங்கள் நிறையவே ஏற்படும். ஆரம்பத்தில் அருகில் சென்று கதைக்க வேண்டுமென நினைப்பாள். அப்போது தூரத்தில் கண்டாலே இதயம் படபடக்கும். எப்படியெல்லாம் வார்த்தைகளால் வதைக்'க முடியுமோ அப்படியான வார்த்தைகளால் எல்லாம் ரவியின் தாய் கவிதாவை வதைத்துவிட்டாள். ரவியின் தாயைத் தூரத்தில் கண்டதும் சற்று வேகமாகவே நடத்தாள் கவிதா. தன் மூத்த மருமகளோடு வந்துகொண்டு இருந்தாள். கவிதாவைக் கண்டதும் "எப்படித்தான் என்ர பிள்ளைய மடக்கினாளோ தெரியாது. ஒரு வருசமா பெத்தவங்க நினைவே வராம பண்ணிட்டா பாவி. மூத்தவங்களுக்கு பண்ணினது மாதிரி நல்ல வசதியான இடத்தில என்ர புள்ளயக் கட்டிக் கொடுக்க நினச்சன்.." என்று புலம்பியவாறு சென்றார். மாமியாரின் வார்த்தை கவிதாவின் இதயத்தைக் கிழித்தது. எத்தனை தடவை இப்படிப் பேச்சுக்கள் வாங்கி விட்டாள். ஆனால் இதுபற்றி எதுவும் ரவிக்கு கூறவில்லை.

ஒரு நாள் ரவி வந்து, "கவி.... நாம இண்டைக்கு ஒரு இடத்துக்கு போகணும் வருவீங்களா? என்றான்.

"எங்க ரவி போகணும் சொல்லுங்க" என்றாள்.

"அம்மாவுக்கு உடம்பு சரியில்ல, நடக்க முடியாதாம் படுக்கையிலதான் இருக்கிறாங்க. பார்த்துட்டு வரலாம் என்று நினைச்சன.... " என்றான். "ஐயோ கடவுளே!" என்றவள் எந்த மறுப்பும் இன்றி ரவியுடன் புறப்பட்டாள்.

ரவியைக் கண்டதும் அவனது தந்தை கட்டியணைத்துக் கொண்டார். 'அப்பா.... அம்மா' என்றவனின் கண்களில் கண்ணீரும் வெளிப்பட்டது. படுக்கையிலிருந்த தாயாருக்கு மெல்லமாய் சென்று தந்தையே உணவு கொடுத்தார்

"விடுங்க மாமா, நா கொடுக்கிறன்." என்ற கவிதா மாமியாரின் அருகில் இருந்து உணவு ஊட்டினாள். சில நாட்க்ள் தங்கியிருந்து இரவு பகல் பாராது மாமியின் தேவைகளை நிறைவேற்றி அன்போடும் அக்கறையோடும் பராமரித்தாள். கவிதாவின் அன்பையும், அக்கறையையும் பார்த்தபோது மாமியாரின் மனம் குற்ற உணர்வினால் அழுதது. "என்ன மாலா, கவிதாவை எப்படியெல்லாம் திட்டினோம், இப்ப கவிதா தாயப்போல பாத்துக்கிறா என்று நினைக்கிறீயா?

"மருமகள் என்று தலையில் வச்சு தாங்கினதுகள் ஒரு தடவ வந்து பாத்ததோட கடமைய முடிச்சிற்றுகள். ஆனா கவிதா நீ திட்டி அவமானப்படுத்தினதெல்லாம் மறந்திற்று உன்ன எப்படி அக்கறையா பாத்துக்கிறா பாத்தியா? ஒரு பொண்ணு புகுந்த வீட்டுக்கு வரும்போது கட்டாயமா கொண்டுவர வேண்டியது. நகையும் பணமும் இல்லம்மா. அன்பும், அக்கறையும் நல்ல பண்பும்தான். அதுதான் உண்மையான சீதனம். அதத்தான் நம்ம கவிதா கொண்டுவந்திருக்கிறா? என்றார் ரவியின் தந்தை.

தலையசைத்து ஆமோதித்த ரவியின் தாய், தனக்கு உணவு கொண்டுவந்த கவிதாவை அன்போடு அணைத்து முத்தமிட்டாள்.

## புனிதர்களின் .............

10ஆம் பக்கத் தொடர்ச்சி

இத்தகைய முயற்சிகளுக்கு ஒரே குறிக்கோள்தான் என்பது குறிப்பிடத்தக்கது. "கல்விப் பணியின் மூலம் நேர்மையான கிறிஸ்தவர்களை உருவாக்குதல்"

இந்தப் பணிகள் எல்லாம் முடிவுக்கு வந்த வேளையில் முழுப்பொறுப்பையும் சகோதரர் ஒருவரிடம் ஒப்படைத்தார். 1719 ஆம் ஆண்டு அவரைத் தாக்கிய ஆஸ்துமா உச்சநிலையை அடைந்தது.

பற்றாக்குறைக்கு மூட்டுவலியும் சேர்ந்துகொண்டது. இருப்பினும் இதுவரை கடைப்பிடித்து வந்த கடுமையான தவ முயற்சிகளை அவர் விட்டுவிடவில்லை. இந்தவேளையில் ஒரு சிறு விபத்தில் இவர் சிக்கிக்கொண்டது இவரது வேதனைகளைப் பலமடங்காக்கியது. இந்தச் சூழலில் ஏப்ரல் 7ல் பெரிய வெள்ளிக்கிழமையன்று இறைவன் இவரது தூய ஆன்மாவை ஏற்றுக்கொண்டார். கி.பி. 1950ல் புனிதர் பட்டம் கொடுத்த திருத்தந்தை இவரை "பள்ளி ஆசிரியர்களின் பாதுகாவலர்" என்று அறிவித்தார்.

## தயவுசெய்து கவனியுங்கள்

- மன்னாவை நேரடியாகப் பெறுவோர் பத்திரிகைப் பணத்தை காலம் தாழ்த்தாமல் கொடுத்து ஒத்துழையுங்கள்.

- தபால் மூலம் பெறும் உள்நாட்டு வெளிநாட்டு சந்தாதாரர் மறக்காமல் உங்கள் சந்தாவை புதுப்பித்துக்கொள்ளுங்கள். சந்தாவைப் புதுப்பிக்காதவர்களுக்கான பத்திரிகையை எதுவித அறிவித்தலுமின்றி நிறுத்திவிடுவோம் என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

- மன்னா நிர்வாகம்.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 127ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில்

பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

**முதலாம் பரிசு:**
கே. மடோனா, இல:- 54, கற்குளம், ஆசிக்குளம், வவுனியா.

**இரண்டாம் பரிசு:**
செ. நிலா, 5ம் வட்டாரம், மண்டைதீவு, யாழ்ப்பாணம்.

**மூன்றாம் பரிசு:**
நே. அனோஜா, சிறுக்கண்டல், முருங்கன்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 94 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 90 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 127ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. தொ. ஆன் பேசியா, பாலைக்குழி, நானாட்டான்.
2. ம. ஜேந்தன், புதுக்கமம், உயிலங்குளம்.
3. கே. சுஜீவன், பாண்டியன்குளம், நட்டாங்கண்டல், மல்லாவி.
4. க. றெஜினோல்ட், இல-54, கற்குளம்-2, ஆசிக்குளம், வவுனியா.
5. லீ. பாலன், பெற்றா, மன்னார்.
6. பா. எபிறோன், இத்திக்கண்டல், அடம்பன்.
7. ஜெ. ஜெனிஜன், புனித சவேரியார் ஆலயம், தேவன்பிட்டி.
8. எஸ். சிங்கராசா, இசைமாலைத்தாழ்வு, முருங்கன்.
9. ஐ. இருதயமேரி, இல-54, கற்குளம், சிதம்பரபுரம், வவுனியா.
10. க. கலிஸ்ரஸ், சிதம்பரபுரம், வவுனியா.
11. பா. சுலியானம்மா, இத்திக்கண்டல், அடம்பன்.
12. லீ. டெய்சி, பெற்றா, மன்னார்.
13. பி. யூஜிற்றா, இசைமாலைத்தாழ்வு, முருங்கன்.
14. கி. மேரி பிலோமினா றோஸ், 18, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
15. சி. நோயல் கிறிஸ்ரி றோச், மாவட்ட நீதிமன்றம், மன்னார்.
16. யோ. விதுஷன், வாழ்க்கைப்பெற்றான்கண்டல், முருங்கன்.
17. எம். திரேசா, இல:- 118/3, எமில்நகர், மன்னார்.
18. எஸ். பெனிற்றா, பள்ளமடு, விடத்தல்தீவு.
19. என். வெல்வமேரி, கரப்புக்குத்தி, கனகராயன்குளம்.
20. ர. யான்சி, தேவன்பிட்டி.
21. யே. கிறிஸ்தம்மா, இத்திக்கண்டல், அடம்பன்.
22. சூ. தொம்மாம்பிள்ளை, பாலைக்குழி, நானாட்டான்.
23. தெ. ஆன்றியா, பாலைக்குழி, நானாட்டான்.
24. ம. கிளின்ரன் குரூஸ், அரிப்பு, சிலாவத்துறை.
25. யே. ஜோசப் இரட்சிங்கர் லெம்பேட், 10ம் வட்டாரம், வங்காலை.
26. பி. பிறொய்ற்ரன் லியோன், டிமெல்லோ இல்லம், மூதூர்.
27. ஸ்ரீபனா இசிதோர், களிமோட்டை, முருங்கன்.
28. யோ. ஆன் றுபினா, பெரியகுஞ்சுக்குளம், மடுறோட்.
29. த. சியாந்தனா, காத்தான்குளம், நானாட்டான்.
30. ஜே. சுஜானி, பெரிய குஞ்சுக்குளம், மடுறோட்.
31. அ. நிவேதிக்கா, புதுக்கமம், உயிலங்குளம்.
32. யே. மேரி அருண்சி லெம்பேட், 10ம் வட்டாரம், வங்காலை.
33. செ. ஜெசில்டா, 5ம் வட்டாரம், மண்டைதீவு, யாழ்ப்பாணம்.
34. அ. மரிஸ்ரெலா, பெரியகுஞ்சுக்குளம், மடுறோட்.
35. ஞா.மரிய ஜெனிஸ்ரின், டிமெல். இல்லம், மூதூர், திருகோணமலை.
36. ஜெ. திலிபா, புதுக்கமம், உயிலங்குளம்.
37. எஸ். ஷார்மி, பெரேரா (ஷாரு), நொச்சிக்குளம், உயிலங்குளம்.
38. ப. மரியதாஸ், சென் மேரிஸ் வீதி, அடம்பன்.
39. இ. சிஷான், அச்சங்குளம், நானாட்டான்.
40. செ. ஜெசில்டா, 5ம் வட்டாரம், மண்டைதீவு, யாழ்ப்பாணம்.
41. சந்தியோகு மியூலின், காத்தான்குளம், நானாட்டான்.
42. கமலா கிறிஸ்தோப்பர், மடுமாதா வீதி, சின்னக்கடை, மன்னார்.
43. ஜீ. ஜீவறொமா, பரிகாரிகண்டல், முருங்கன்.
44. கு. தயாநிதி, மாதாகிராமம், மடுறோட்.
45. செ. யாழரசி, புனித சவேரியார் ஆலயம், தேவன்பிட்டி.
46. ர. விக்ரோறியா, தேவன்பிட்டி, வெள்ளாங்குளம்.
47. பி. றொஷானி, திருச்சிலுவைக்கன்னியர் இல்லம், யாழ்ப்பாணம்.
48. ஆர். கிங்ஸ்ரினோ, கபித்தா மோட்டை , அடம்பன்.
49. என்.சி. ஜெகஜீவன் றோச், பள்ளிமுனை, மன்னார்.
50. நி. செபமாலை மரியம்மா பீரிஸ், 8ம் வட்டாரம், வங்காலை.

## இல.127 இற்கான சரியான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ❋ | கூ[03] | உ[01] | ன் | ஆ[13] | ண் | ட | வ | ர் | பெ[02] |
| வு | றி | அ[17] | மு[14] | து | மை | யி | ல் | ❋ | ரு |
| தீ[11] | ய | வ | ர் | க | ளி | ன் | தொ[12] | ன் | மை |
| ❋ | தை | ம் | த | த் | ரு | வ[08] | லை | ளி | ப் |
| கு | க் | நா[09] | னி | ஞா[22] | ன | ம் | யி | க | ப |
| க் | ளை | த[05] | ம[07] | ❋ | ❋ | று | ல் | வி | டு |
| ரு | க | ங் | ளி | ர் | ப[06] | ன் | அ[04] | பா[18] | ம் |
| வோ | ல் | க | த | வ | ட் | ரெ | ன் | ❋ | ரு |
| சு | ய | ள் | ரி | ள் | ட | டி | பு | ❋ | ளி |
| பே[10] | செ[21] | ❋ | ன் | கொ[15] | றி | தி[19] | மை | அ[20] | மி[16] |

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.128ற்கான முடிவுகளை 2013ம் ஆண்டு மே மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுப் பகுதியில் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவுகளைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.



**கட்டண விபரம்**

கறுப்பு வெள்ளை 4,500/= கலர் 7,500/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 02ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 24 02 1938



உதிர்வு 20 04 2011

### திரு. சந்தியா இம்மானுவேல் லெம்பேட்

(தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்)

வாழ்வாங்கு வாழுதற்காய் வான் புகழ் நீடு கொண்டீர்!
வளமிக்க கிராமந்தனில் வண்ணமென வாழ்ந்த ஐயா!

சீரொழுகும் பண்பு சார்ந்து சிறப்புமிகு சேவை செய்தீர்!
சிரமேற்று நீவிர் கொண்ட சிந்தாத பணி நினைத்தோம்.....

கத்துத்திரை கடலோடி கண்ணிறைந்த தொழிலாற்றி.....
கற்ற களம் பொன்னாடு இத்தரையில் வேறு உண்டோ!

ஈராண்டு புவி நீங்கி எமையறுந்து போனாலும்
பாருள்ளே நீர் விதைத்த பணியென்றும் மங்காது.

உற்றாரை ஒரு விசையாய் கண்ணீரே நிறைக்கிறது.
நித்தமுறு நினைவுகளில் நின்றழுது இசைக்கின்றோம்.

*என்றும் உங்கள் நினைவில் :-*
அன்பு மனைவி, பிள்ளைகள், உறவினர்கள்.

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 28 08 1926



உதிர்வு 15 04 2012

### திருமதி. பிறிசில்லா ராசமலர் யேசுரத்தினம்

(பெற்றா, மன்னார்)

*"ஆண்டவரே எங்கள்மீது இரக்கமாயிரும். நாங்கள் உமக்காகக் காத்திருக்கிறோம். அதிகாலை தோறும் எங்களைக் காக்கும் கரமாகவும் துன்ப வேளைகளில் எங்களை விடுவிப்பவராகவும் இருப்பீராக!" (எசாயா 33:2)*

இம்மண்ணிலே உம் குரல் ஓய்ந்தாலும்
விண் வீட்டிலே நின்குரல் எமக்காய்
வேண்டுவது, எம் காதுகளில் கேட்குதம்மா!

*நீங்கா நினைவுகளுடன் :-*
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 14 07 1950



உதிர்வு 28 03 2012

### திருமதி. மரியாம்பிள்ளை றோசாமலர் (தங்கா)

(7ம் வட்டாரம், விடத்தல்தீவு.)

எம்மை விட்டுப்பிரிந்த அன்புத்தாயே! 1ம் ஆண்டு நினைவைக் கடந்து சென்றாலும் நீர் காட்டிய நேசமும் பாசமும் எம்மைவிட்டு நீங்கவில்லை. கனிவான உமது அன்பு இறுதிமட்டும் நிலைத்து நிற்கின்றது. ஆண்டொன்று சென்றாலும் ஆறவில்லை எம் துயர். உவந்து எம்மைப் பெற்றெடுத்து உலகினுக்குத் தந்தவரே! நினைத்து நினைத்து நின்தன் பெருமைகளை எடுத்தியம்ப நீள்புவியில் எம்மவர்க்கு வார்த்தையேதும் இல்லையம்மா! ஆறாத துன்பமெல்லாம் சுமந்து எமை வளர்த்தவரே, சொந்தங்களைப் பேணி கணவருக்கு நல்ல துணைவியாக பிள்ளைகளுக்கு நல்ல தாயாக சிறப்போடு வாழ்ந்தவரே! நீர் பரமன் திருவடியில் நிம்மதியாய் இணைந்திட வேண்டுகிறோம்.

*உமது பிரிவால் துயருறும்:-*
*பாசமுடைய கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார் உறவினர்கள்.*

## 05ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 09 02 1929



உதிர்வு 15 04 2008

### அமரர். குமாரசிங்கம

(பாலைக்குழி, அடம்பன்.)

*("உயிர்ப்பும் உயிரும் நானே. என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் உயிர் வாழ்வான்")*

உடலால் எம்மைப் பிரிந்தாலும்,
உள்ளத்தாலும், உணர்வுகளாலும்
என்றுமே எம்முடன் வாழ்கிறீர்கள்.
கண்களில் கண்ணீர் முத்துக்களுடன்
கலங்கி நிற்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
*அன்பு மனைவி, பிள்ளைகள்,*
*மருமக்கள், பேரப்பிள்ளைகள.*

## 30ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 03 07 1934



உதிர்வு 24 12 1983

### திருமதி. போல் ஆனாப்பிள்ளை

நறுவிலிக்குளம், வங்காலை

## 31ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 29 10 1924



உதிர்வு 12 04 1982

### திரு. செ. மொத்தம் போல்

(இளைப்பாறிய அதிபர்)

நறுவிலிக்குளம், வங்காலை

உயிர்ப்பும்
உயிரும் நானே.
என்னில்
விசுவாசம் கொள்பவன்
இறப்பினும் வாழ்வான்.
(யோவான்
11: 25)

அன்பின் ஊற்றாய் உருவெடுத்த அம்மா, அப்பா - நின்
அருள் வதனம் ஆசையாய் நாம் காணத் துடிக்கின்றோம்.
ஆசைக்கு ஆசையாய் எம்மோடு வாழ்ந்த உங்களை
அரவணைக்க நாம் துடிக்க காலன் அணைத்திட்டான்.
ஆவெனும் மழலைமொழி பொழிந்திட யாமிருக்க
அன்பாய் நின் திருவதனம் பார்த்திடப் பலரிருக்க
பாசம் பொழிந்திட எத்தனை பேரிருக்க
அத்தனையும் ஒரு கணப்பொழுதே மறந்தீர்களோ?
உங்கள் ஆன்மா இறைவனில் அமைதிபெற
அனுதினமும் அர்ப்பணித்தே இறைவனிடம் வேண்டுகிறோம்.
உங்கள் பிரிவால் துயருறும்,
*மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள*, உறவினர், நண்பர்கள்.
*தகவல் : அருட்திரு. பீற்றர் மனோகரன் - மகன்*

## 27ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 02 02 1945



உதிர்வு 19 04 1986

### அந்தோனி காணிக்கை

(பனங்கட்டுக் கொட்டு கிழக்கு, மன்னார்)

*("உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் உயிர் வாழ்வான்")*

பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் சிகரமாய்
விழுதாய் எம்மைத்
தாங்கிய நீர்
விதையாகி 27ஆண்டுகள்
ஆகிவிட்டன.
நீர் விட்டுச்சென்ற
பண்புகள்,
உலகுள்ளவரை தொடரும்.
உம் நினைவுகள் எம்மை
விட்டகலாது.
*என்றும் பாசமுடன்*
*நினைவுகூரும்:-*
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
தகவல் :-
திருமதி
ஜெனிவி ஸ்ரீபன்.
(மகள்)

## உயிலங்குளம் பங்கில் .....

8ஆம் பக்கத் தொடர்ச்சி

அடுத்து பங்குச்சபைச் செயலாளரினால் நீண்ட நன்றியுரை வழங்கப்பட்டது. தொடர்ந்து காத்திருந்த கதாப்பாத்திர நடிகர்களும்; கலை நிகழ்வில் ஈடுபடுபவர்களும் ஆயரவர்களின் அருளாசீரைப் பெற்றுக்கொண்டனர்.

இத்திருநிகழ்வு இரவு 8.30க்கு தொடங்கி 12.30க்கு முடிவுற்றது. காட்சிகள் யாவும் விறுவிறுப்பாகத் தொடர்ந்தன. முடியும்வரை மக்கள் பாத்திரங்களோடு ஒன்றித்து அமைதிகாத்தமை இந் நிகழ்வை மக்கள் ஏற்றுக்கொண்டதை அடையாளப்படுத்தியது.

நாம் திட்டமிட்டதற்கும், எதிர்பார்த்ததற்கும் மேலான வகையில், எல்லாம் நன்றாக முடிந்தது எல்லோருக்கும் மகிழ்ச்சியைத் தந்தது. அளவுக்கு அதிகமாக அள்ளி வழங்கும் ஆண்டவர், அவரில் நம்பிக்கைகொண்ட எம்மோடு இருக்கிறார். ஆண்டவர் அவரது மாட்சிக்காக ஏற்று நடத்திய இச்செயலை ஏற்றுக்கொண்டார் எனும் உண்மையை இது உணர்த்துகின்றது. பார்வையாளர் பலரின் வாயிலிருந்து உதிர்ந்த நிகழ்வு பற்றிய நல்வார்த்தைகள் எமக்கு புத்துயிரைத் தந்துள்ளது.

எமது முயற்சியின் இலக்குகள் யாவும் எமது பங்கில் பூத்துக்குலுங்கி இனிய மணம் பரப்பவும், இறையரசின் அருளும் அன்பும், அமைதியும் கிடைக்க இறைவன் அருள்புரிவாராக.

தகவல் :- இ. யக்கோவு சேரம், வேதியர்

**மன்னா வாசகர்களே,**


மன்னா பத்திரிகைப் பணத்தை காலம் தாழ்த்தாமல் உடனடியாகச் செலுத்துவதன் மூலம் மன்னா விநியோகஸ்-தர்களுக்கு உங்கள் மேலான ஒத்துழைப்பை வழங்குங்கள்.

- மன்னா நிர்வாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா

## புதிய திருத்தந்தையின் முதல் சில மணித்துளிகள் ... !


திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் முதல் முறையாக மக்களுக்கு காட்சிகொடுக்கின்றார்.


முதல் முறையாக மக்களுக்கு காட்சிகொடுத்தபோது பதவி விலகிய முன்னாள் திருத்தந்தைக்காகச் செபிக்கின்றார்.


தெரிவின்பின் அடுத்தநாள் காலையில் முதல் வேலையாக மாதா ஆலயத்திற்கு சென்று செபத்தில் மூழ்கினார்.

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 29 ✝ 01 ✝ 1943



உதிர்வு 11 ✝ 04 ✝ 2012

### திரு. கருப்பையா கோபால் சூசை
(பனங்கட்டுக்கொட்டு மேற்கு, மன்னார்.)

அன்பின் உருவமாய் எம்மோடு கலந்த பாசமிகு தந்தையே!
உம் அன்பின் முகம் காணாது ஏங்கித் தவிக்கின்றோம்.
உங்கள் அழகிய புன்னகையால் எம்மையும்
பிறர் மனதை பூத்துக் குலுங்க வைத்தவரே!
இன்று உங்கள் பிரிவுத்துயர் எம் எல்லோரையும் வாட்டுதே.
மரணத் தறுவாயிலும் பிறரை மகிழ்வித்தவரே
இன்று உங்கள் முகம் காணாது தவிக்கின்றோம் நாம்.
பெற்ற பிள்ளைகளை நல்வழி நடத்திச் சென்றவரே!
இன்று எம்மை நடத்திச்செல்ல யார் உண்டு தந்தையே?
அப்பா என்று அழைத்தவுடன் ஓடி வரும் தந்தையே,
இன்று உங்களை நாம் கூவி அழைக்கின்றோம்
ஆனால் நீங்கள்தான் நீண்ட தொலைதூரம் சென்றுவிட்டீரே!
என்றும் எம் மனதைவிட்டு பிரியாத தந்தையே
உங்கள் நினைவில் ஏங்கித்தவிக்கும்,

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## 28ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 06 ✝ 04 ✝ 1916



உதிர்வு 02 ✝ 04 ✝ 1985

### குமாரசிங்கமுதலியார் மரிசாற்பிள்ளை இராஜநாயகம்பிள்ளை

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 02 ✝ 04 ✝ 1932



உதிர்வு 27 ✝ 04 ✝ 1912

### இராஜநாயகம்பிள்ளை மேரிப்பிள்ளை

(மோட்டக்கடை, நானாட்டான்.)

"நீதிமான்களின் ஆன்மாக்கள் கடவுளின் கையில் உள்ளன.
கடுந்தொல்லை எதுவும் அவர்களைத் தீண்டாது" (ஞானாகமம் 3:1)

உயிர்தந்து காத்த இனிய அன்புத் தெய்வங்களே!
இதயம் துயர் சுமந்து கண்ணீர் வடிக்கின்றது.
ஒன்றல்ல, ஓராயிரம் ஆண்டுகள் ஆனாலும்
நிதமும் உங்கள் பூமுகம் தேடிப் புலம்புவோம்.
'பிள்ளைகள், பிள்ளைகள்' என்றுருகி நித்தமும் உங்கள்
அன்பை, அரவணைப்பைக் காட்டி எமை வளர்த்தீர்கள்.
உங்களுக்காக நாம் எவ்வளவோ செய்ய இருந்தோம்.
ஆனால் எம் கடமைகளை நீங்கள் சற்றும் எதிர்பாராமல்
எங்கே எம்மைவிட்டுப் பிரிந்து சென்றீர்கள்?
இப்புவிமீது நாம் உங்கள் பெயர் சொல்ல வைத்த
எங்கள் இதயத் தெய்வங்களே! விழிநீரின் வேதனையில்
உங்கள் முகம் தேடி அன்புக்காய் அலைகின்றோம்.

இனியொரு விடியலிலாவது எங்கள் வாசலில் உங்கள்
அன்புக்குரல் கேட்காதா என வழிமேல் விழிவைத்து
வாசல் தோறும் எதிர்பார்த்து நிற்கின்றோம்.
பூதவுடல் அழிந்ததே ஒழிய உங்கள் புகழுடல்கள்
எம் நெஞ்சின் அழியாத ஓவியங்களாக
என்றுமே நிலைத்து நிற்கும்.
எம் உயிர் உள்ளவரை நீங்கள் எங்களோடு
வாழுகின்றீர்கள் என்ற உணர்விலே நாம்
உயிர் வாழ்கின்றோம் எம் அன்புத் தெய்வங்களே!

பிரிவால் துயருறும் :- பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

தகவல் :- திருமதி மொரீனா றோசா மடுத்தீன் (மகள்)

## 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 01 ✝ 01 ✝ 1925



உதிர்வு 11 ✝ 03 ✝ 2013

# திரு. செபமாலை அல்போன்ஸ் சில்வா
(இளைப்பாறிய ஆசிரியர்)

கொழும்பு சென். பீற்றஸ் கல்லூரி (26 வருடங்கள்),
மன்/புனித சவேரியார் ஆண்கள் ம.ம.வி. மன்னார், மன்/புனித ஆனாள் ம.ம.வி. வங்காலை)

நல்ல போராட்டத்தைப் போராடினேன்,
ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக்
காத்துக்கொண்டேன்." (தீத்து 1:7)

பொறுமையில் சிகரமாய்
இறைபக்தியில் தானியேலாய்
உண்மை, நேர்மையில் உத்தமனாய்
பாசத்தின் நிறைகுடமாய்
நடமாடும் ஆங்கில அகராதியாய்
வாழ்ந்து எம்மைவிட்டுப் பிரிந்த
பாசமுள்ள எம் அருமைத் தந்தையே!
எம் உயிர் உள்ளவரை உமதன்பை மறவோம்.

பிரிவால் துயருறும் :-
அன்பு மனைவி:- அ. றோஸ் மேரி மார்க் (பிரான்ஸ்),
அன்பு மகள்:- ஜீவா சில்வா (பிரான்ஸ்),
அன்பு மகன்மார் :- புஸ்பம் சில்வா (பிரான்ஸ்), பொன்மணி சில்வா (லண்டன்),Dr.பெற்றாசில்வா (petrasilva7@gmail.com)
மருமகன்:- அன்ரனி குரூஸ் (லண்டன்),
பேரப்பிள்ளைகள் :- றொஜர் (லண்டன்), றொமோலின் (லண்டன்), றெபேக்கா (லண்டன்)

தகவல் :-
ம. ஆபேல் றெவ்வல் குடும்பம் (மருமகன்)
(முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர், மன்னார்.)
அன்புப் பேரன் றூபன்,
அன்புப் பேத்தி றூபி.

அன்னாரின் மரணச்செய்திகேட்டு தொலைபேசி மூலமும் நேரிலும் வந்து ஆறுதல் கூறி அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், பிரான்சில் 15.03.2013ல் நடைபெற்ற அவரது இறுதிச் சடங்கிலும், திருப்பலியிலும் கலந்துகொண்டவர்களுக்கும், அதே நாளில் வங்காலையில் அவரது இல்லத்தில் நடைபெற்ற இரங்கல் அஞ்சலியில் கலந்துகொண்டவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். - குடும்பத்தினர்

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு ... – வாழ்வுதயம் அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org